# பொருளடக்கம்


| வ.எண் | தலைப்பு | பக்க எண் |
|---|---|---|
| 1 | முகவுரை | 1 |
| 2 | எதற்கு இந்த சட்டம்: ஒரு சுருக்கமான அறிமுகம் | 5 |
| 3 | தமிழ்நாட்டில் இச்சட்ட அமலாக்கத்தின் நிலை | 15 |
| 4 | கண்காணிப்பு கருவிகள் மற்றும் வழிமுறைகள் | 19 |
| 5 | அதிகாரிகளின் பொறுப்புகள் | 26 |
| 6 | ஆயத்தமாகுதல் | 40 |
| 7 | குடிமைச் சமூகம், தலித் மற்றும் ஆதிவாசி மனித உரிமை பாதுகாவலர்களின் பங்கு | 44 |
| 8 | குடிமைச் சமூக வழிமுறைகள் | 46 |
| 9 | பாதுகாவலர்களைப் பாதுகாத்தல் | 58 |
| 10 | பெண் மனித உரிமை பாதுகாவலர்களுக்கான உரிமைகள் | 65 |
| 11 | மனித உரிமை நிறுவனங்கள் | 69 |
| 12 | வழக்கின் முக்கிய நிலைகள் | 73 |
| 13 | சொற்குறியீடு மற்றும் சொற்களஞ்சியம் | 78 |

# I. அறிமுகம்

## 1. முகவுரை

### 1.1 ஏன் இந்த கையேடு

இந்தக் கையேடு, தமிழ்நாட்டில் உள்ள தலித் மற்றும் ஆதிவாசி மனித உரிமைகள் பாதுகாவலர்களை (DAHRDs), பட்டியல் சாதிகள் மற்றும் பட்டியல் பழங்குடியினர் (வன்கொடுமை தடுப்பு) சட்டம், 1989–ன் அனைத்து விதிகளையும் பயன்படுத்த தயார்படுத்துவதாகும். குறிப்பாக, இந்தச் சட்டத்தை மாவட்ட அளவில் நடைமுறைப்படுத்துவதை கண்காணிக்க வேண்டிய மாநில வழிமுறைகளை கண்காணிக்க உதவுவதே ஆகும்.

பெரும்பாலான DAHRD–க்கள் ஒரு புகாரைத் தாக்கல் செய்வதற்கும் முதல் தகவல் அறிக்கையை (FIR) பதிவு செய்ய வைக்கும் அளவிற்குமே ஒரு வழக்கைத் தொடர்கின்றனர், அவர்களின் உறுதிப்பாடு அடுத்தடுத்த கட்டத்தில் குறைகிறது. சில அமைப்புகள் மற்றும் ஒரு சில செயல்பாட்டாளர்கள் மட்டுமே ஒரு வழக்கினை தொடக்கம் முதல் இறுதி வரை, புகார் – முதல் தகவல் அறிக்கை (FIR) – கைது – விசாரணை (சாட்சி அறிக்கை பதிவு, அடையாள அணிவகுப்பு மற்றும் சாட்சியங்களை சேகரித்தல்) காவல்துறை இறுதி அறிக்கை (குற்றப் பத்திரிகை என பரவலாக அழைக்கப்படுகிறது) விசாரணை: சாட்சியப் பதிவு – தீர்ப்பு, முறையீடுகள் மற்றும் பரோல் வரை கண்காணிப்பதற்கான வலு மற்றும் வசதியுள்ளவர்களாக இருக்கின்றனர்.

வன்கொடுமை தடுப்பு சட்டத்தின் வழிகாட்டுதலின்படி புலனாய்வு மற்றும் வழக்கின் விசாரணை நடைபெறுகிறதா என்பதை தற்போது யாருமே கண்காணிப்பதில்லை. இது செய்யப்படாவிட்டால், 'சரியான திறனைக் கொண்ட அதிகாரிகள் மட்டுமே பாதிப்புக்கு உள்ளாகக்கூடிய பகுதிகளுக்கு அனுப்பப்படுகிறார்கள்' (விதி 13) என்பதையும், அரசு பொறுப்புடைமை விதிகளை அமல்படுத்துகிறது என்பதையும் உறுதிப்படுத்துவது கடினம்.

இந்தச் சட்டம் அதன் முழு உத்வேகத்தோடு நடைமுறைப்படுத்தப்பட்டாலுமே கூட, மறுசீரமைப்பிற்கான விதிகளும் முழுமையானதாக இல்லை, பொருளாதார இழப்பீடும் போதுமான அளவிற்கு நிர்ணயிக்கப்படவில்லை என்பதனை நாம் அறிவோம். உதாரணமாக, தப்பிப்பிழைத்தவர்களின் உளவியல் தேவைகளைப் பற்றி இந்தச் சட்டம் கருத்தில் கொள்ளவேயில்லை. பொருளாதாரத்தை மட்டுமே கருத்தில் கொண்டுள்ளதால் அவை பொருள் நிவாரணத்தை மட்டுமே அளிக்கின்றன, ஆனால் அதிர்ச்சி, பாதுகாப்பின்மை, பின்விளைவுகளுக்குத்

தேவையான பிற வகையான நிவாரணம் மற்றும் ஆதரவின் தேவையை அவை அங்கீகரிக்கவில்லை. ஆகவே, பொறுப்புக்கூறல் நடைமுறையைச் செயல்படுத்துவது, சட்டத்தின் பாதுகாப்பு அம்சங்களை அதன் மையத்தில் கொண்டு வருவதற்கான தொடக்க நடவடிக்கைகளில் முதன்மையானது என்பதை நாம் அறிவோம்.

## 1.2 நோக்கம்

இந்தச் சட்டத்தின் பெரும்பாலான விதிகள் பயன்படுத்தப்படாததால், இந்த கையேடு முழுச் சட்டத்தையும் செயல்படுத்துவதைக் கண்காணிக்கும் திறனை வளர்ப்பதற்காகவே உருவாக்கப்பட்டதாகும் – குறிப்பாக அதன் உள்ளடக்கிய கண்காணிப்பு மற்றும் பொறுப்புக்கூறல் வழிமுறைகள். இந்த கையேடு எளிய கருவிகளைக் கொண்டு முழுச் சட்டத்தையும் விதிகளையும் பயன்படுத்த DAHRDக்கள் கையாளும் இரண்டாவது நிலை கையேடு ஆகும். இதனால் பட்டியல் சமூகத்தினரின் சமூக நீதிக்கான தேடலிலும் இந்த தேசத்தின் சமூகக் கட்டமைப்பை சரிப்படுத்துவதிலும் இந்த முழு சட்டம் மற்றும் விதிகள் கைகொடுக்கும். இது தடுப்பு, தண்டனை மற்றும் அபராதங்களை உள்ளடக்கியது. தனிப்பட்ட ஒரு வழக்கை முழு சட்டம் மற்றும் விதிகளின் அடிப்படையில் கண்காணிப்பதற்கு, இந்தப் புத்தகத்தை, துணை வழக்குப் புத்தகத்தோடு (companion case book) சேர்த்துப் பயன்படுத்த வேண்டும். இது மாநில வழிமுறைகளை மாநில அளவிலும், மாவட்ட அளவிலும் அரசாங்கத் தரவுகளை சேகரித்து ஆராய்ந்து சிறந்த முறையில் இணக்கத்தோடு அரசாங்கம் செயல்படுவதற்கான பேச்சுவார்த்தை நடத்துவதற்காகும்.

இந்த கையேடு DAHRD-க்களை ஒரு முழு நடைமுறை சார்ந்த கண்ணோட்டம் மற்றும் சுற்றுச்சூழல் அமைப்பு அணுகுமுறையை உருவாக்க உதவுகிறது. இது முழுமையான நடைமுறை அமைப்பைக் கண்காணிப்பதற்கான கருவிகளைக் கொண்டுள்ளதோடு, நடைமுறைப்படுத்துதல், கண்காணித்தல், பொறுப்புடைமைகளைக் கொண்ட மாநில வழிமுறைகளையும், ஆதாரங்களின் அடிப்படையிலான அதிகாரிகளின் பொறுப்புடைமையையும் உறுதி செய்ய உதவுகிறது. இது பல ஆண்டுகளாக எங்களால் உருவாக்கப்பட்ட மற்றும் சோதிக்கப்பட்ட ஒரு சில கருவிகளைக் கொண்டுள்ளதோடு, மாநில அளவில் சில வெற்றிகளையும் பெற்றுள்ளது.

இது சரியான வழிகளைப் பின்பற்றுவதை உறுதிப்படுத்துவதற்கும், தப்பிப்பிழைத்தோர், சாட்சிகள், அவரைச் சார்ந்தோர்களின் உரிமைகளைப் பாதுகாப்பதற்கும், அவர்களது உரிமைகள் (நிவாரணம், இழப்பீடு மற்றும் படிகள்)

அவர்களுக்கு முழுமையாகவும், சரியான நேரத்திலும் கிடைப்பதையும் அதிகாரிகளை பொறுப்பாளிகளாக்குவதற்கான சட்டரீதியான மதிப்பாய்வுகள் நடைபெறுவதையும் கண்காணிப்பதற்கான ஒரு கண்காணிப்பு நாட்காட்டி, மாதிரிப் படிவங்கள் மற்றும் சரிபார்ப்பு பட்டியல்களையும் கொண்டுள்ளது.

### 1.3 சொல்லியல் பற்றிய குறிப்பு

அவர்களை மொத்தமாக குறிப்பிடுவதற்கு பட்டியல் சாதிகள் என்ற குறியீடு – தலித் – எஸ்சி, பட்டியல் பழங்குடியினர், – ஆதிவாசி – எஸ்டி, சில நேரங்களில் எஸ்சிஎஸ்டி அல்லது எஸ்சி – எஸ்டி மற்றும் எஸ்சி/எஸ்டி சட்டம் – வன்கொடுமை சட்டம் போன்றவை பேச்சுவழக்கில் மாறி மாறி பயன்படுத்தப்படுகிறது. எனினும் இது பல்வேறு மட்டங்களில் தவறானதாகும். நிர்வாக ரீதியாக தவறான வகைப்படுத்தலால் – பல ஆதிவாசிகள் (பழங்குடியினர்) பட்டியல் சாதியினர் அல்லது மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் அல்லது இதர பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் என பட்டியலிடப்படுகின்றனர். இது போன்ற தவறான வகைப்படுத்துதல் தலித்துகளையும் கூட பாதிக்கிறது.

இந்தக் கையேட்டில் சட்ட நடைமுறையில் உள்ள பட்டியல் சாதி மற்றும் பட்டியல் பழங்குடி ஆகியவற்றை தனித்தனியாக குறிக்கின்றோம். கட்டாயமாக தேவைப்படும் இடங்களில் தவிர இந்தக் கையேடு முழுவதும் பட்டியல் சமூகத்தினர் (குழப்பத்தைத் தவிர்ப்பதற்காக சுருக்கமாக எழுதுவதைத் தவிர்த்துள்ளோம்) என்ற வார்த்தையையே பயன்படுத்தியுள்ளோம். சாதிய சமுதாயம் இந்த சமூகத்தின் மீது பதித்துள்ள சாதிய அழுக்குகளைக் வெளிப்படையாக நிராகரிப்பதற்காகவே ‘சமூகங்கள்’ என்ற பதத்தை பயன்படுத்துகிறோம். ஒவ்வொன்றும் ஒரு தனிப்பட்ட சமூகம், அவை உள்சமூகமல்ல, உறுதியாக துணைச் சாதியும் இல்லை. மொழியை வலுப்படுத்துவதென்பது தனிப்பட்டவரின் சுயமரியாதையை அதிகரிக்கவும், சமூகங்களுக்கு அதிகாரமளிப்பதற்குமான ஒரு சிறு முன்னெடுப்பாகும்.

### 1.4 தயாரிப்பு குழு

அறிமுக பயிற்சி பட்டறைகள் மூலம் இந்த கையேட்டை கூர்மையானதாக்க உதவிய வழக்குரைஞர் டாக்டர் V. சுரேஷ், வழக்குரைஞர் B. மோகன், ராஜ் கபில், டாக்டர் S. வெங்கடராமன் ஆகியோர்களுக்கு எங்களது நன்றி. இந்தச் சட்டத்தை நடைமுறைப்படுத்துவதில் பல ஆண்டுகள் அனுபவமுள்ள DAHRD–க்கள் இந்தக் கையேட்டின் முந்தைய வரைவுகளை பயன்படுத்தி அவர்களது பின்னூட்டத்தை அளித்துள்ளனர்.

வழக்கறிஞர் P. வேல்ராஜ் மொழிபெயர்ப்பிற்கும், வழக்கறிஞர் S. விஜயசங்கர் மொழிபெயர்ப்பு மற்றும் இதன் மறு ஆய்விற்கும், K. கிருஷ்ணவேணி மறுஆய்விற்கும் உதவி செய்தனர். பயனாளருக்கு ஏற்றவாறு இந்தக் கையேட்டை வடிவமைக்க நந்தகோபால் உடையகிரி அவர்களும், IPC - POA சமநிலை விளக்கப்பட அத்தியாயத்தை இறுதி செய்ய நதீம் நிக்கத் அவர்களும் உதவினர்.

இந்தக் கையேட்டின் மற்ற பகுதிகள் HRF-ன் உள்ளகத் தயாரிப்பாகும். P. தமிழரசி அறிமுகக் கையேட்டின் முதல் வரைவை ஒருங்கிணைத்ததோடு, இந்தப் புத்தகத்தின் அட்டைப் படத்தையும் வடிவமைத்தார். வழக்கறிஞர்கள் அனுஷா ரவிசங்கர் மற்றும் பீம்ராஜ் ஆகியோர் கையெழுத்துப் பிரதிகளை சரிபார்த்தனர். ஆவணத்தை எளிமைப்படுத்தலில் R. ரோஷன் சுந்தரும், வடிவமைப்பு சரிபார்த்தலில் R. ரேவதியும், பிழை திருத்தலில் N. சித்ராவும், ஒருங்கிணைப்பில் ஹால்சியன் ஃபெர்ணான்டஸ் அவர்களும் உதவினர். ஒருங்கிணைப்பு உட்பட மீதமுள்ள தயாரிப்பு முழுவதும் M.S.பொற்கொடியால் செய்யப்பட்டது.

இந்த கையேடு DAHRDகளால் களத்தில் பயன்படுத்த வடிவமைக்கப்பட்டுள்ளது. கள அனுபவத்தின் அடிப்படையில் இது புதுப்பிக்கப்படும், எனவே ஏதேனும் விடுபட்டிருந்தாலோ, தெளிவாக இல்லையென்றாலோ, DAHRD-க்களுக்கு தேவைப்படும் மேலும் சில தலைப்புகள் சேர்க்கப்பட வேண்டுமென்றாலோ எங்களுக்குத் தெரியப்படுத்துங்கள். எல்லா ஆலோசனையையும் சேர்த்தலையும் இணைப்பதாக நாங்கள் உறுதியளிக்கவில்லை (கள வழிகாட்டிகளும் கலைக்களஞ்சியங்களும் வேறுபட்டவை), ஆனால் ஒவ்வொரு ஆலோசனையையும் பின்னூட்டத்தையும் நாங்கள் தீவிரமாக பரிசீலிப்போம். தேவைப்பட்டால், தங்கள் கருத்தின் அடிப்படையில் ஒரு துணை தொகுதியை நாங்கள் கொண்டு வருவோம்.

உங்கள் கருத்து மற்றும் பரிந்துரைகளை எதிர்பார்க்கிறோம். மின்னஞ்சல்களை Justice@hrf.net.in க்கு அனுப்பலாம்.

எட்வின்
இயக்குனர் (நிகழ்ச்சிகள்), HRF
மார்ச் 2020

## 2. எதற்கு இந்த சட்டம்: ஒரு சுருக்கமான அறிமுகம்

### 2.1 சமூகச் சூழல்

சமூகத்தின் பலவீனமான பிரிவினர்களின் வாழ்க்கை மற்றும் சுதந்திரத்தை பாதுகாப்பது எந்தவொரு அரசாங்கத்தின் பிரதான கடமையாகும். அடுத்தடுத்து வந்த அரசாங்கங்கள் பட்டியல் சாதியினர் (SC) மற்றும் பட்டியல் பழங்குடியினரின் (ST) நிலை மோசமானது என்பதை ஒப்புக் கொண்டுள்ளன. சாதி அடிப்படையிலான பாகுபாடு மற்றும் வன்முறை (CBDV) இந்தியாவில் பரவலாகக் காணப்படுகிறது. பட்டியல் சாதியினர் மற்ற சாதிகளைச் சார்ந்திருப்பது குறைகின்றபோதும், அவர்கள் சாதிக்கு விதிக்கப்பட்ட கட்டுப்பாடுகளை மீறி செருப்பு மற்றும் கால்சட்டை அணிவது, பள்ளிகளில் சிறந்த மதிப்பெண்கள் பெறுவது, பேருந்தில் உட்கார்ந்து கொள்வது போன்றவற்றை செய்யும்பொழுது வன்கொடுமை நிகழ்த்தப்படுகிறது. மாநில தலைநகரிலிருந்து 50 மைல் தொலைவிலேயே இந்தக் கொடுமைகள் நிகழ்கின்றன. தலித் சிறார்களை மட்டுமே பள்ளி கழிப்பறைகளை சுத்தம் செய்ய வைப்பது, பரீட்சைகளுக்கு நெருக்கமான நேரத்தில் வன்கொடுமைகளை நிகழ்த்துவது போன்ற செயல்களால் ஏற்படுத்தப்படும் தாக்கம் பல தலைமுறைகளுக்குத் தொடர்வதோடு அதற்கான விலையை ஒட்டுமொத்த சமூகமும் அளிக்க வேண்டியுள்ளது. இந்த சமூக மக்கள், சுமார் 10 ஆண்டுகள் குறைவாக வாழ்வது, பிரசவத்தின் போது அதிக இறப்பு விகிதம், பள்ளிக் கல்வி இடைநிறுத்தம் மற்றும் குறைந்த கல்வியறிவு ஆகியவற்றை சந்திக்க நேரிடுகிறது.

சாதி அடிப்படையிலான வன்முறை என்பது பட்டியல் சமூகத்தினரின் பொருளாதார வளர்ச்சியைத் தடுப்பதும், அவர்கள் ஆதிக்க சாதியினரை குறைந்த அளவில் சார்ந்திருப்பதை தடுப்பதும் ஆகும். வன்கொடுமைகளை தடுப்பதும் மற்றும் குற்றவாளிகள் தண்டனையிலிருந்து தப்புவதை முடிவுக்குக் கொண்டுவருவதுமே தலித்துகள் மற்றும் ஆதிவாசிகளின் முன்னேற்றத்தின் முதல் படியாகும். பின்வரும் மேற்கோள்கள் காட்டுவது போல் இது அரசாங்கத்தால் மிக உயர்ந்த மட்டத்தில் கூட ஒப்புக்கொள்ளப்படுகிறது:

எஸ்சி மற்றும் எஸ்.டி.களின் சமூக–பொருளாதார நிலைமைகளை மேம்படுத்த பல்வேறு நடவடிக்கைகள் எடுத்தபோதிலும், அவர்கள் பாதிக்கப்படக்கூடியவர்களாக இருக்கின்றனர், அவர்கள் பல கொடிய சம்பவங்களில், அவர்களின் வாழ்க்கை மற்றும் சொத்துக்களை இழந்துவிட்டனர், விழிப்புணர்வின் காரணமாக கல்வி பரவுவதன் மூலம், அவர்கள் தங்கள்

உரிமைகளை உறுதிப்படுத்திக்கொண்டு, அவர்களுக்கு எதிரான தீண்டாமை நடைமுறைகளை எதிர்க்கும்போது அல்லது சட்டரீதியான குறைந்தபட்ச ஊதியங்களைக் கோருகையில் அல்லது கொத்தடிமை மற்றும் கட்டாய உழைப்பைச் செய்ய மறுக்கும் போது, ஆதாயமடையும் ஆதிக்க சாதியினர் அவர்களைப் அடிபணியச் செய்யவும், அச்சுறுத்தவும் முயற்சிக்கின்றனர்.

*1988–ஆம் ஆண்டு மக்களவையில் பட்டியல் சாதி மற்றும் பட்டியல் பழங்குடியினர் (வன்கொடுமை) தடுப்பு சட்ட மசோதா அறிமுகப்படுத்தப்பட்டபோது, சட்டத்தின் அடிப்படை குறிக்கோள் மற்றும் நோக்கம் பற்றிய அறிக்கை: தேசிய எஸ்சி கமிஷனில் இருந்து மேற்கோள் காட்டப்பட்டது, முதல் அறிக்கை 2004–05, புது தில்லி, 2006, பக். 222–3.*

பட்டியல் சாதியினர் மற்றும் பட்டியல் பழங்குடியினர் தங்கள் முயற்சிகள் மூலம் அவர்களை மேம்படுத்திக்கொள்ளவும், தங்களுக்குச் சட்டரீதியாக சொந்தமானதைக் உரிமை கோருவதும் பெரும்பாலும் அவர்கள் மீது நிகழும் வன்கொடுமைகளுக்கு முக்கிய காரணமாகும். காவல்துறை மற்றும் மாவட்ட நிர்வாகத்தின் தரப்பில் இதுபற்றிய உணர்திறன் குறைவாக உள்ளது. சட்டத்தை செயல்படுத்துபவர்களே, பல சந்தர்ப்பங்களில், உடனடியாக செயல்படத் தவறிவிடுகிறார்கள் அல்லது எதிர்தரப்பினருடன் இணக்கமாக செயல்படுகிறார்கள்.

*பிரதமர் பி. வி. நரசிம்மராவ் தொடக்க உரை, முதலமைச்சர்களின் கூட்டம், 4 அக்டோபர் 1991*

அவமானப்படுத்துதல், அடிமைப்படுத்துதல் போன்ற வன்கொடுமை குற்றங்கள் எஸ்.சி. மற்றும் எஸ்.டி. மக்களை எப்போதும் தாழ்மை நிலையில் வைத்திருக்க வேண்டும் என்ற நோக்கத்துடன் செய்யப்படுபவையாகும். இவை தனித்தன்மை வாய்ந்த குற்றங்களாக இருப்பதால், இவற்றை இந்திய தண்டனைச் சட்டத்தின் கீழ் உள்ள குற்றங்களுடன் ஒப்பிட முடியாது.

*மத்திய பிரதேசம் & மற்றும் பிறர் எதிர் ராம் கிருஷ்ண பலோதியா & மற்றும் பிறர் (1995 (2) எஸ்.சி.சி 221) என்ற வழக்கில் உச்சநீதி மன்றத்தின் மேற்கோள்*

தீண்டாமை சட்டத்தால் ஒழிக்கப்பட்டுள்ளது, ஆனால் அதன் நிழல்கள் சாதி அமைப்பால் வளர்க்கப்பட்ட ஆழமான அணுகுமுறையில் உள்ளன. கல்வி நிறுவனங்கள் மற்றும் பொது சேவைகளில் இடஒதுக்கீடு விதிகள் நமது அரசியலமைப்பிலிருந்து வந்தாலும், இந்த விதிகள் அதிகாரத்துவ மற்றும் நிர்வாக சிதைவின் மூலம் அல்லது இந்த சிறப்பு விதிகள் பற்றிய குறுகிய வியாக்கினங்களால் நிறைவேறவில்லை.

*ஜனாதிபதி கே ஆர் நாராயணன், 26 ஜனவரி 2000*

60 ஆண்டுகளாக அரசியலமைப்பு சட்ட பாதுகாப்பு மற்றும் ஆதரவு இருந்தாலும் ... நமது சமூகத்தில் தலித்துகள் தனித்துவமான பாகுபாட்டை எதிர்கொண்டுள்ளனர். இது அடிப்படையில் மற்ற சிறுபான்மை குழுக்களின் பிரச்சினைகளிலிருந்து வேறுபட்டது. நிறவெறி மட்டுமே தலித்துகள் எதிர்கொள்ளும் தீண்டாமை நடைமுறைக்கு இணையானது. தீண்டாமை என்பது சமூக பாகுபாடு மட்டுமல்ல, அது மனிதகுலத்திற்கு ஒரு களங்கமாகும்.

*பிரதமர் மன்மோகன் சிங், தலித்–சிறுபான்மை சர்வதேச மாநாடு, 27 டிசம்பர் 2006*

உண்மையில், வன்கொடுமை நிகழ்த்தப்படுவதற்கு பொருளாதாரம் ஒரு காரணம். இது பொருளாதார நடவடிக்கைகளின் காரணமாகவும், நிறுவனமயமாக்கலாலும் பட்டியல் சாதியினர் பொருளாதார ரீதியாக வளம் பெற்றுள்ளனர். பட்டியல் சாதியினர் செங்கல் மற்றும் கல் வீடுகளைக் கட்ட முடிகிறது. பட்டியல் சாதியினர் வாகனங்களை வாங்க முடிகிறது. பட்டியல் சாதியினர் சிறப்பாக உடை அணியவும், தங்கள் குழந்தைகளை சிறந்த பள்ளிகளுக்கு அனுப்பவும் முடிகிறது. அந்த இடங்களில் வன்கொடுமைகள் நடைபெறுவது அவர்களை பொருளாதார ரீதியாக முடக்குவதற்காகத்தான். ஒவ்வொரு கலவரமும், ஒவ்வொரு தீ விபத்துகளும் அவர்களை பொருளாதார ரீதியாக முடக்குகின்றன. எனவே, இந்த வன்கொடுமைகளால் பாதிக்கப்பட்டவர்களின் மறுவாழ்வுக்கான சமூக மற்றும் பொருளாதார உதவிகளை அரசு உடனடியாக விரைந்து மேற்கொள்வது அவசியம்.

*30 ஆகஸ்ட் 2010 அன்று மக்களவையில் உள்துறை அமைச்சர் ப. சிதம்பரம்*

உயர்ந்த இலட்சியங்களை வெளிப்படுத்துவதே நடைமுறை, ஆனால் இந்த இலட்சியங்கள் நடைமுறையில் நடக்காமல் பார்த்துக் கொள்கிறார்கள். சட்டங்களை திறம்பட நடைமுறைப்படுத்தவில்லை என்று அரசாங்கம் ஒப்புக்கொள்கிறது, எனினும் திறம்பட செயல்படுத்த நடவடிக்கை எடுப்பதைத் தவிர்க்கிறது. இந்தியாவில் சில சிறந்த சட்டங்கள் உள்ளன. POA சட்டம் அமலுக்கு வந்து 30 ஆண்டுகள் ஆனபோதிலும் அதை நடைமுறைப்படுத்துவதில் பல தவறுகள் உள்ளன. இந்தச் சட்டத்தை அமல்படுத்தும் பணியில் உள்ள அரசு அதிகாரிகளுக்கு கூட இதன் விதிகள் தெரியாது, மேலும் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கும், சட்டமன்ற உறுப்பினர்களுக்கும்கூட இந்தச் சட்டத்தின் கீழ் அவர்களின் உரிமைகள் மற்றும் பொறுப்புகள் தெரியாது. இந்தச் சட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கு அரசாங்கத்தை வலியுறுத்தும் மனித உரிமை பாதுகாவலர்களின் (HRD) அனுபவம் கசப்பானது. அவர்களின் முதிர்ந்த அனுபவங்கள் சிதறிக்கிடக்கின்றன, மற்றும் செயல்படுத்துதல் மிகவும் பலவீனமாக உள்ளது.

தேசிய குற்றப் பதிவு ஆவணக் காப்பகத்தின் (NCRB) புள்ளிவிவரங்கள் வன்கொடுமையின் அளவில் எந்த சரிவையும் காட்டவில்லை, இருப்பினும் சில ஆண்டுகளில் தேர்தல்களுக்குப் பின்னர் அரசாங்கத்தில் ஏற்பட்ட மாற்றத்தினால் அதன் எண்ணிக்கை சிறிதளவு குறைகிறது. பட்டியல் சாதிகள் மற்றும் பழங்குடியினருக்கு எதிரான பதிவு செய்யப்பட்ட வன்கொடுமை வழக்குகளின் எண்ணிக்கை 44,946 (2015)ல் இருந்து 47,369 (2016), 50,328 (2017), 49,321 (2018) ஆக உள்ளது. பல வழக்குகள் பதிவு செய்யப்படுவதேயில்லை.

தோராயமாக, ஒரு வருடத்தில் பட்டியல் சாதியினருக்கு எதிரான சுமார் 33,000 வன்கொடுமை வழக்குகள் பதிவு செய்யப்படுவதில் நாம் மகிழ்ச்சியடைய முடியாது. வன்கொடுமை அதிகரித்து வருவது இரட்டிப்பான வேதனையைத் தருகிறது. ஆனால் வழக்குத் தொடர்ந்து நீதிமன்றத்தில் குற்றவாளி என நிரூபிக்க முயலும்போது, 30% வழக்குகளில் மட்டுமே குற்றவாளிகளுக்கு தண்டனை கிடைக்கிறது. விடுவிக்கப்படுபவர்களின் சதவீதம் உயர்ந்திருப்பது மட்டுமல்லாமல் நிலுவையில் உள்ள வழக்குகளின் எண்ணிக்கை 80% ஆக உள்ளது. இந்த மக்களுக்கு எதிரான குற்றங்களை பாருங்கள்! மிக மோசமான குற்றங்கள் கொலை, வன்புணர்வு, கடத்தல், கடத்தல் மற்றும் தீ வைத்தல். இவை சிறிய குற்றங்கள் அல்ல. திட்டமிட்டு செய்யப்படும் குற்றங்கள் ... இவை இந்திய தண்டனைச் சட்டத்தின் மிக மோசமான குற்றங்களாகும். பட்டியல் சாதியினர் மற்றும் பட்டியல் பழங்குடியினர் எவ்வளவு பாதிக்கப்படக்கூடியவர்கள் என்பதை இது காட்டுகிறது.

*உள்துறை அமைச்சர் பி.சிதம்பரம், மக்களவை, 30 ஆகஸ்ட் 2010*

தண்டனை விகிதங்கள் மிகக் குறைவாக இருப்பதாலும், ஏறக்குறைய அவர்களுக்கு தண்டனையிலிருந்து விலக்கு அளித்ததுபோன்று இருப்பதாலும், ஆதிக்க சாதியினர் வன்கொடுமைகளைச் செய்யத் துணிகின்றனர். பட்டியல் சாதிகள் மற்றும் பட்டியல் பழங்குடியினர் (வன்கொடுமை தடுப்பு) சட்டம் 1989 மற்றும் விதிகள் 1995–ன் கீழ் ‘கடுமையான’ தண்டனை விதிக்க இடமிருந்தபோதிலும் தமிழகம் ஒற்றை இலக்க தண்டனை விகிதத்தை மட்டுமே கொண்டுள்ளது.

தண்டனையின்மை, கொடூர குற்றங்கள் (கொலை, கொலை முயற்சி, வன்புணர்வு, வன்புணர்வு முயற்சி, கடுமையான காயம்) ஆகிய குற்றங்களை மேலும் மேலும் அதிகரிக்கச் செய்கிறது. வன்கொடுமைகளைத் தடுப்பது மற்றும் சட்டத்தின்படி விரைவான நடவடிக்கையை உறுதி செய்வது, பட்டியல் சமூகங்களின் நீடித்த சமூக மற்றும் பொருளாதார வளர்ச்சியை செயல்படுத்துவதில் முதல் படியாகவும், ஒரு முன்நிபந்தனையாகும். தண்டனையின்மையை முடிவுக்குக் கொண்டுவருவது, பெரிய அளவில், சாதி அடிப்படையிலான பாகுபாடு மற்றும் வன்முறை (CBDV) மீண்டும் மீண்டும் தொடர்வதைத் தடுக்கும்.

## 2.2 அரசியலமைப்பு சட்டத்தின் கட்டமைப்பு

இந்திய சாதிய கட்டமைப்பு ஒரு நிலையான மற்றும் எதிர்க்கப்படாத அமைப்பு அல்ல, சமூக இயக்கங்களும் வரலாறு நெடுக அதற்கு சவால் விடுத்து முன்னேறிக்கொண்டுதான் இருக்கிறது. சுதந்திரத்திற்குப் பிந்தைய இந்திய அரசியலமைப்பு, சுதந்திரம், சமத்துவம் மற்றும் சகோதரத்துவத்திற்கு

உத்தரவாதம் அளிப்பதைத் தவிர; சமூக மற்றும் பொருளாதார ரீதியாக பின்தங்கிய வகுப்பினருக்கான உறுதியான நடவடிக்கைகள், 'தீண்டாமையின்' நடைமுறையை வெளிப்படையாக ரத்து செய்து, ஷரத்து 17வது பிரிவின் கீழ் இது ஒரு குற்றமாக அறிவித்ததன் மூலம் இந்தியாவில் சாதி அமைப்பின் மீது ஒரு குறிப்பிடத்தக்க தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது.

இந்திய அரசியலமைப்பின் குடிமக்களுக்கு அளித்த வாக்குறுதியை பகுதி–IV இல் குறிப்பிடப்பட்டுள்ள மாநிலக் கொள்கையின் வழிநடத்தும் கோட்பாடுகளில் (DPSP) காணலாம். பகுதி–IV இல் ஷரத்து 38 மற்றும் 46 கட்டுரைகளுக்கு சிறப்பு முக்கியத்துவம் தேவை. இது பட்டியல் சமூகத்தினருக்கு சமூக–பொருளாதார மற்றும் அரசியல் நீதியை வழங்க அரசைக் கட்டாயப்படுத்துகிறது. ஷரத்து 38 சமூக, அரசியல் மற்றும் பொருளாதார நீதியால் வகைப்படுத்தப்பட்ட ஒரு சமூகத்தை எதிர்பார்க்கிறது. ஷரத்து 46வது பிரிவு, குறிப்பாக பட்டியல் சாதிகள் மற்றும் பழங்குடியினரின் கல்வி மற்றும் பொருளாதார நலன்களை சிறப்பு கவனத்துடன் ஊக்குவிக்க மாநிலங்களை கட்டாயப்படுத்துகிறது.

அடிப்படை உரிமைகளைப் போலன்றி, DPSP கண்டிப்பாக செயல்படுத்தப்பட வேண்டியது அல்ல, எனினும் ஆட்சிக்கு அடிப்படையானது மற்றும் அரசால் உருவாக்கப்படும் சட்டங்கள் இதன் அடிப்படையிலேயே இருக்க வேண்டும்.

நீதிமன்றங்கள் தங்கள் வியாக்கியானங்களில் அடிப்படை உரிமைகளும் DPSPயும் ஒன்றைவிட மற்றொன்று உயர்ந்ததல்ல என்றும் இரண்டையும் சமமாகவும் ஒருங்கிணைத்தும் செயல்படுத்த வலியுறுத்தியுள்ளன. அவை ஒன்றுக்கொன்று துணையாகவும் இணையாகவும் இருக்கின்றன. DPSP-யின் கண்ணோட்டத்தின் மூலம் நீதித்துறை அடிப்படை உரிமைகளை விரிவுபடுத்தியுள்ளது. அதன்படி, DPSP 'அடிப்படை உரிமைகளின் பின்புறத்தில் சவாரி செய்வதன் மூலம்' நடைமுறைப்படுத்தக்கூடியதாகிவிட்டது என்று கூறப்படுகிறது.

தீண்டாமையை ஒழிப்பதன் மூலமும், அது ஒரு குற்றமாக அறிவிப்பதன் மூலமும் இந்திய அரசியலமைப்பு அடித்தளத்தை வழங்கியது, இருப்பினும் அது 'தீண்டாமை' என்ற சொல்லை வரையறுக்கவில்லை. அரசியலமைப்பின் மூன்றாம் பாகத்தின் கீழ் குற்றங்கள் என அறிவிக்கப்பட்ட அந்த செயல்களுக்கு தண்டனை வழங்குவதற்கான சட்டங்களை இயற்ற 35வது ஷரத்து பாராளுமன்றத்திற்கு அங்கீகாரம் அளித்தது. அதன்படி குடிமை உரிமைகள் பாதுகாப்பு சட்டம் 1955 (PCRA) மற்றும் பட்டியல் சாதிகள் மற்றும் பட்டியல் பழங்குடியினர் (வன்கொடுமை தடுப்பு) சட்டம் 1989 ஆகியவை இயற்றப்பட்டன. இந்த சட்டங்கள்

‘தீண்டாமையை’ வரையறுக்கவில்லை, ஆனால் தீண்டாமையால் எழும் சில பாரபட்சமான நடைமுறைகளை மட்டுமே பட்டியலிட்டு அவை குற்றங்களாக அறிவிக்கப்பட்டன.

### 2.3 அரசியலமைப்பிலிருந்து PCRA வரை

சுதந்திரத்திற்குப் பிறகு, இந்தியாவில் பட்டியல் சமூகத்தினருக்கு எதிரான வன்கொடுமைகள் அதிகரித்துள்ளன. பொதுவாக, ஒரு குற்றம் நிகழ்த்தப்படும்போது, இந்திய தண்டனைச் சட்டம் (IPC) மற்றும் குற்றவியல் நடைமுறைச் சட்டம் (CrPC) ஆகியவையின் கீழ் நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன.

‘தீண்டாமையை’ ஒழித்த இந்திய அரசியலமைப்பின் 17வது பிரிவைத் தொடர்ந்து, அதன் நடைமுறையை எந்த வடிவத்திலும் தடைசெய்தது மற்றும் ‘தீண்டாமையால்’ ஏற்படுத்தப்படும் குறைபாட்டை இது சட்டத்தின்படி தண்டிக்கத்தக்க குற்றமாக்குகிறது, குடிமை உரிமைகள் பாதுகாப்பு சட்டம் (PCRA) 1955 இல் இயற்றப்பட்டது. இது ‘தீண்டாமை’ நடைமுறையினால் ஏற்படுத்தப்படும் குறைபாட்டிற்கு தண்டனையைப் பரிந்துரைத்தது.

எவ்வாறாயினும், இது கடுமையான பலவீனங்களால் பாதிக்கப்பட்டது, அவற்றில் முக்கியமானது சாதி அடிப்படையிலான பல குற்றங்களை அது அங்கீகரிக்கவில்லை, மிகவும் மென்மையானது, மற்றும் சட்டத்தை நடைமுறைப்படுத்துவதை கண்காணிக்க எந்த ஒரு அதிகாரம் பெற்ற வழிமுறையும் இல்லை (குறிப்பாக காவல்துறை மற்றும் நீதித்துறையைச் சேர்ந்தவர்கள் அதே சமூகச் சூழலில் இருந்து வந்தவர்கள்தான்). சட்டத்தின்படி, ஒரு செயல் குற்றமாக வரையறுக்கப்படவில்லை என்றால், அது ஒரு குற்றம் அல்ல. PCRA தீண்டாமையால் எழும் குறைபாட்டை உள்ளடக்கியதாக இருந்தது, ஆனால் பட்டியல் சமூகத்தினருக்கு எதிரான வன்கொடுமைகளை உள்ளடக்கியதாக இல்லை. பல வகையான சாதி அடிப்படையிலான பாகுபாடு மற்றும் வன்முறையை குற்றங்களாக அங்கீகரிக்காததன் மூலம் இந்த அடிப்படை சட்டத்தை தவிர்ப்பதுதான் PCRAயின் அபாயகரமான குறைபாடு.

பின்வரும் காரணங்களால் CBDV செயல்களைத் தடுக்க பொது குற்றவியல் சட்ட கட்டமைப்பு (IPC மற்றும் CRPC) போதுமானதாக இல்லை என்று கண்டறியப்பட்டது.

1. PCRA-யில் பட்டியல் சமூகத்தினருக்கு எதிரான தனித்துவமான செயல்கள், கொடுமைகள் பற்றிய வரையறைகள் இல்லாதது.

2. PCRA பட்டியல் சமூகத்தினருக்கு எதிரான சில சமூக மற்றும் மத ரீதியான குறைபாடுகளை தடை செய்தது. ஆனால் மிகக் குறைந்த தண்டனைகளைக் கொண்டிருந்தது. எனவே இது போதுமானதாக இல்லை.
3. பட்டியல் சமூகத்தினருக்கு எதிரான வன்கொடுமைகளுக்கு IPC பிரிவுகளை பயன்படுத்துவது ‘சாதி’ மற்றும் இன ரீதியிலான பரிமானங்களை கவனிக்க தவறிவிட்டது.
4. பாதிக்கப்பட்டவர்களுக்கு சாதகமற்ற குற்றவியல் சட்ட நடைமுறைகள் பாதிக்கப்பட்டவர்களையே பாதித்தன – எனவே, பின்தங்கியிருக்கின்ற பட்டியல் சமூகத்தினர் – அவர்கள் நீதியை அணுகுவதற்குத் தடையாக இருந்தது. ‘குற்றம் நிரூபிக்கப்படும் வரை குற்றம் சாட்டப்பட்டவர் நிரபராதியே’ என்ற ஆங்கிலோ – சாக்ஸன் நீதி பரிபாலன கோட்பாடும் ‘நூறு குற்றவாளிகள் தப்பிக்கலாம், ஆனால் ஒரு நிரபராதி கூட தண்டிக்கப்படக் கூடாது’ என்ற சிந்தனையும் பாதிக்கப்பட்டவர்கள் (வாதிகள்) தங்கள் வாழ்க்கைக்கும் வாழ்வாதாரத்திற்கும் குற்றம் இழைத்தவர்களையே (பிரதிவாதிகள்) சார்ந்திருப்பதையும் இது கணக்கில் கொள்ளவில்லை.
5. அதிகரித்து வரும் வன்கொடுமை சம்பவங்கள் குறித்து பட்டியல் சமூகத்தினரிடையே அதிகரித்து வருகிற கோபம்.

எனவே, பட்டியல் சமூகத்தினருக்கு எதிரான வன்கொடுமைகளை தடுப்பதற்கான தனி சட்டம் ஆதரிக்கப்பட்டு POA இயற்றப்பட்டது.

### 2.4 PCRA முதல் POA வரை:

PCRAவின் குறைபாடுகளை சரி செய்வதற்கு பதிலாக, இந்திய பாராளுமன்றம் 1989இல் விடுபட்டவை அனைத்தையும் நிவர்த்தி செய்யும் ஒரு புதிய சட்டத்தை 1990 ஜனவரி 31 அன்று முதல் அமல்படுத்தியது. பிற சமூகங்களின் உறுப்பினர்களால் பட்டியல் சமூகத்தினருக்கு எதிராக நிகழ்த்தப்படும் குற்றங்களைத் தடுப்பது இச்சட்டத்தில் வெளிப்படையாக இருந்தது. இவ்வாறு செப்டம்பர் 9, 1989இல் பட்டியல் சாதிகள் மற்றும் பட்டியல் பழங்குடியினர் (வன்கொடுமை தடுப்பு) சட்டம் நிறைவேற்றப்பட்டது. விதிகளை வடிவமைக்க நீண்ட காலம் பிடித்தது, ஆனால் அதுவும் மார்ச் 31, 1995 அன்று – இச்சட்டம் நிறைவேற்றப்பட்ட சுமார் ஐந்தரை ஆண்டுகளுக்குப் பிறகு – அறிவிக்கப்பட்டது. எவ்வாறாயினும், குற்றங்களின் விரிவான பட்டியலுக்கு 26 ஜனவரி 2016 முதல் அமல்படுத்தப்பட்ட திருத்தச் சட்டம் 2015 வரை காத்திருக்க வேண்டியிருந்தது.

இந்த சட்டம் பட்டியல் சமூகத்தினருக்கு எதிரான குற்றங்களை நேரடியாக மாநில மற்றும் மாவட்டத்தின் மிக உயர்ந்த அரசியல், குடிமை, நிர்வாகம் மற்றும் நீதித்துறை அதிகாரிகளின் கவனத்திற்கு கொண்டு வந்தது. குறிப்பிட்ட காலக்கெடுவில் குறிப்பிட்ட பணிகளைச் செய்ய மாநில அளவில், ஒவ்வொரு ஜனவரி மற்றும் ஜூலை மாதங்களில் முதலமைச்சர் இந்தச் சட்டத்தை அமல்படுத்துவதை நேரடியாகக் கண்காணிப்பதை உள்ளடக்கியது, இதில் உயர் மட்ட மாநில விழிகண் மற்றும் கண்காணிப்புக் குழு (SVMC), அமைச்சர்கள் மற்றும் சமூக நலத்துறை முதன்மை செயலாளர், உள்துறை, காவல்துறை இயக்குநர், பட்டியல் சாதிகள் மற்றும் பட்டியல் பழங்குடியினர் பாதுகாப்பு கலத்தின் தலைவர் (பொதுவாக கூடுதல் காவல்துறை இயக்குநர், ADGP), குற்ற வழக்கு தொடர்பு துறை இயக்குநர் (DPP).

## 2.5 திருத்தங்கள்

பல குடிமைச் சமூக அமைப்புளும், மனித உரிமை பாதுகாவலர்களும் இந்த சட்டத்தை சரி செய்ய 2009ஆம் ஆண்டில், இந்தச் சட்டத்தின் இருபதாம் ஆண்டில், பல ஆய்வுகள் மற்றும் அரசாங்க தரவுத் தொகுப்பு எனும் ஆயுதம் ஏந்தி ஆதாரங்களுடன் அணி திரண்டனர். பங்குதாரர்களின் தொடர்ச்சியான பல ஆலோசனைகள் நடைபெற்றன. குடிமைச் சமூக அமைப்புகளும் மனித உரிமை பாதுகாவலர்களும் சட்டம் மற்றும் விதிகளின் செயல்பாடுகள் குறித்து நாடு தழுவிய அளவில் ஆய்வு செய்தனர். மதிப்பாய்வில் தெரிய வந்தது யாதெனில் அ) சட்டம் மற்றும் விதிகளில் பெரும்பாலானவை பயன்படுத்தப்படவில்லை, ஆ) பல புதிய குற்றங்கள் சேர்க்கப்பட வேண்டும் மற்றும் இ) பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் சாட்சிகள் பாதுகாக்கப்பட வேண்டும்.

இதன் விளைவாக சட்டம் மற்றும் விதிகளில் விரிவான மாற்றம் ஏற்பட்டது. இந்தத் திருத்தம் 2014 மார்ச் 4 அன்று ஒரு தேர்தல்களுக்கான மாதிரி நடத்தை நெறிமுறை தொடங்குவதற்கு ஒரு நாள் முன்னதாக ஒரு அவசரச் சட்டமாக நிறைவேற்றப்பட்டது. புதிய அரசாங்கம் பதவியேற்ற பின்னர், அவர்கள் தங்கள் சொந்த ஆலோசனைகளை நடத்தினர். இறுதியாக சட்டம் மற்றும் விதிகள் முறையே 2015 மற்றும் 2016 ஆம் ஆண்டுகளில் பாராளுமன்றத்தால் திருத்தப்பட்டன.

POA விதிகள், 1995, பட்டியல் சாதியினர் மற்றும் பட்டியல் பழங்குடியினர் (வன்கொடுமை தடுப்பு) திருத்த விதிகள், 2016 ஆல் திருத்தப்பட்டு, ஏப்ரல் 14, 2016 அன்று அறிவிக்கப்பட்டது.

திருத்தங்கள் பரவலாக கீழ் வருபவைகளுக்குத் தொடர்புடையவை:

- 47 வகையான வன்கொடுமை குற்றங்களுக்கு நிவாரணத் தொகை வழங்குதல்.
- நிவாரணத் தொகையை பல கட்டங்களாக கொடுப்பதற்கான வழிவகை.
- குற்றத்தின் தன்மையைப் பொறுத்து நிவாரணத் தொகையை ரூ. 85,000/– முதல் ரூ. 8,25,000/– வரை உயர்த்துவது.
- ஏழு நாட்களுக்குள் அனுமதிக்கப்பட்ட நிவாரணம் செலுத்துதல், புலன்விசாரணையை முடித்து அறுபது நாட்களுக்குள் குற்றப்பத்திரிகையை தாக்கல் செய்து சரியான நேரத்தில் விசாரணையைத் துவக்குவது.
- மாநில மற்றும் மாவட்ட அளவிலான விழிகண் மற்றும் கண்காணிப்புக் குழுக்களால் நீதியை அணுகுவதில் பாதிக்கப்பட்டவர்கள், சாட்சிகளின் உரிமைகள் மற்றும் உரிமங்களுக்கான திட்டத்தின் அவ்வப்போதைய மதிப்பாய்வு.

27 ஜூன் 2018 அன்று விதிகள் மேலும் திருத்தப்பட்டது எதற்கெனில்,

- இயற்கைக்கு மாறான குற்றங்களால் பாதிக்கப்பட்டவர்களுக்கும், அமிலத்தை வீசுவதன் மூலம் கடுமையான காயம் ஏற்பட்டவர்களுக்கும் நிவாரணம் வழங்குதல்
- SVMCக்கு 25 உறுப்பினர்கள் என்ற வரம்பை நீக்குதல்.
- வேறு எந்த சட்டத்தின் கீழும் இழப்பீடு கோருவதற்கான உரிமைக்கும் கூடுதலாக மரணம், காயம், பாலியல் வன்புணர்ச்சி, கூட்டு பாலியல் வன்புணர்ச்சி, இயற்கைக்கு மாறான குற்றங்கள், அமிலத்தை வீசுவதன் மூலம் கடுமையான காயம், சொத்துக்களுக்கு சேதம் போன்றவற்றில் நிவாரணம் வழங்குவதற்கான வழிவகை.
- FIR பதிவு செய்வதற்கான ஆரம்ப விசாரணையின் தேவையை நீக்குவதற்கும், கைது செய்யப்படுவதற்கு முன்னர் ஒப்புதலின் தேவையை நீக்குவதற்கும் பிரிவு 18 A–ஐ சேர்க்க, இந்த பட்டியல் சாதியினர் மற்றும் பட்டியல் பழங்குடியினர் (வன்கொடுமை தடுப்பு) திருத்தச் சட்டம், 2018–இல் மேலும் திருத்தப்பட்டுள்ளது. திருத்தச் சட்டம், 2018 (2018 ஆம் ஆண்டின் எண்–27), இந்திய அரசிதழில், 17 ஆகஸ்ட் 2018 அன்று அறிவிக்கப்பட்டு 20 ஆகஸ்ட் 2018 அன்று அமல்படுத்தப்பட்டது.

**2.6 சட்டத்திற்கு உள்ள சவால்கள்**

மத்திய அரசால் விதிகள் வகுக்கப்படுவதற்கு முன்பே இந்திய உச்சநீதிமன்றம் வரை இந்தச் சட்டத்திற்கு பல சவால்கள் இருந்தன. உள்நாட்டு வன்முறையிலிருந்து பெண்களைப் பாதுகாக்கும் சட்டத்தைப் போலவே, சில சலுகை பெற்ற சமூகங்கள் இந்தச் சட்டத்தை 'தவறாகப் பயன்படுத்துவது' குறித்து மிகவும் கூச்சலிட்டுக் கொண்டிருப்பதால், இந்தச் சட்டத்திற்கு ஒரு அடிப்படை எதிர்ப்பு எப்போதும் உள்ளது. முந்தைய நீதிமன்றங்கள் சூழலைப் புரிந்து கொண்டன (உதாரணமாக *மத்தியப் பிரதேசம் மற்றும் பிறர் எதிர் ராம் கிருஷ்ண பலோதியா மற்றும் பிறர் (1995) (2) எஸ்.சி.சி 221 முன்னர் மேற்கோள் காட்டப்பட்டுள்ளது*).

இதற்கு நேர்மாறாக மிக சமீபத்திய தீர்ப்புகள், மிக உயர்ந்த நீதித்துறையில் கூட அதிக அளவு அறியாமையைக் காட்டுகின்றன. *டாக்டர் சுபாஷ் காஷிநாத் மகாஜன் எதிர் மகாராஷ்டிரா மாநில வழக்கில்* 20 மார்ச் 2018 அன்று இந்திய உச்சநீதிமன்றத்தின் தவறான தீர்ப்பு, பெரிய அளவிலான ஆர்ப்பாட்டங்களுக்கும் அதன் பின்னர் 10 தலித்துகள் கொல்லப்பட்டதற்கும் காரணமாக அமைந்தது. தானாக FIRகள் பதிவதை மீட்டெடுப்பதற்கான ஒரு திருத்தத்தை நாடாளுமன்றம் நிறைவேற்ற வேண்டியிருந்தது [2018 ஆம் ஆண்டின் சட்டம் 27].

தமிழ்நாடு உட்பட சில மாநிலங்களில், மேலாதிக்க சாதி அமைப்புகளின் தூண்டுதலால் இந்தச் சட்டத்தை முழுவதுமாக ரத்து செய்வதாக சில அரசியல் கட்சிகள் வாக்குறுதி அளித்துள்ளது.

## 3. தமிழ்நாட்டில் இச்சட்ட அமலாக்கத்தின் நிலை

பிப்ரவரி 2019ல் நடந்த, இந்தச் சட்டத்தை அமல்படுத்துவதற்கான தேசிய மதிப்பாய்வில் (27 பிப்ரவரி 2019 அன்று மாநில செயலாளர்களின் கூட்டம்), அனைத்து மாநிலங்களை விட மோசமான இடத்தில் தமிழகம் இருப்பது கண்டறியப்பட்டது. பட்டியல் சமூகத்தினருக்கு எதிரான வன்கொடுமைகள் தொடர்பாக பதிவு செய்யப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை 2015ல் 1761, 2016ல் 1310, 2017ல் 1384 ஆகும். இந்த கூர்மையான சரிவுக்கான குறிப்பு சிவகங்கையின் தகவல் அறியும் உரிமை கோரிக்கைக்கான பதிலில் இருக்கிறது. 2017ஆம் ஆண்டில், பதிவு செய்யப்பட்ட 49 வழக்குகளில், 47 வழக்குகள் உண்மைக்கு மாறாக தவறாகப் பதிவு செய்யப்பட்டவை என்று மாவட்ட ஆட்சியர் முடிவு செய்து, மீதமுள்ள 2 வழக்கை மறு விசாரணைக்கு அனுப்பினார். 2018ஆம் ஆண்டில், பதிவு செய்யப்பட்ட 12 வழக்குகளில் 11 வழக்குகளை பொய்யானதாக அறிவித்த அவர், மீதமிருந்த ஒரு வழக்கை மறு விசாரணைக்கு அனுப்பியுள்ளார்.

இந்தச் சட்டத்தின் கீழ் பதிவுசெய்யப்பட்ட குற்றங்களுக்கான விகிதம், தேசிய அளவில் மூன்றில் ஒரு பங்குதான் (7%) தமிழ்நாட்டில் இருக்கிறது. தமிழ்நாட்டில் அனைத்து குற்றங்களுக்குமான தண்டனை விகிதம் 40%க்கு அருகில் உள்ளது. SP–யின் வசம் நிவாரணத் தொகையாக ரூ.10 லட்சம் இருக்கின்ற போதிலும், 10 வழக்குகளில் ஒன்றுக்கும் குறைவான வழக்குகளில் மட்டுமே காலக்கெடுவுக்குள் வழங்கப்படுகிறது. 10ல் 1–க்கும் குறைவான வழக்குகளில் மட்டுமே நிர்ணயிக்கப்பட்ட 60 நாட்களுக்குள் [விதி 7(2)] விசாரணைகள் நிறைவடைகின்றன. மேலும், சட்டத்தில் [விதி 7(2-V] குறிப்பிடப்பட்டுள்ளபடி தாமதத்திற்கான எந்த விளக்கமும் எழுத்துப்பூர்வமாக வழங்கப்படவில்லை.

பொது நிர்வாகத்தில் நாட்டின் சிறந்த மாநிலங்களில் ஒன்றாக தமிழகம் இருந்தபோதிலும், இந்தச் சட்டத்தை செயல்படுத்த வேண்டியவர்களும், பணியாளர்களைக் கண்காணிக்கப் பொறுப்பானவர்களும் இதேபோன்ற மோசமான தட பதிவுகளைக் கொண்டுள்ளனர். இந்த சட்டம் நடைமுறையில் இருக்கும் 30 ஆண்டுகளில், ஒரு மாதாந்திர அறிக்கை கூட நோடல் அதிகாரிக்கு அனுப்பப்படவில்லை. ஒரு அரையாண்டு மதிப்பீடு கூட செய்யப்படவில்லை. உண்மையில் ஒரு சில காலாண்டுகளில் மட்டுமே மாவட்ட விழிகண் மற்றும் கண்காணிப்புக் குழு (DVMC) கூட்டங்கள் முடிவெடுப்பதற்குத் தேவையான தகவல்களோடும் சரியான நிகழ்ச்சி நிரலுடனும் நடத்தப்பட்டுள்ளன.

தமிழக அரசு வழங்கிய தகவல்களிலிருந்து, தமிழ்நாட்டின் சட்ட அமலாக்க நிலை பின்வருமாறு இருப்பதை அறிய முடியும்:

- இந்தச் சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்ட வழக்குகள் 2016ஆம் ஆண்டில் 1,476 ஆக இருந்தன, இது 2015 ம் ஆண்டில் 1,822 ஆக இருந்ததை விட (ஆண்டு அறிக்கை 2016 மற்றும் 2015) சராசரியாக 14.1 விகிதமாக இருந்தது.
- ஒவ்வொரு வாரமும் ஒரு தலித்தின் கொலை, ஒரு தலித் பாலியல் வன்புணர்ச்சி மற்றும் இச்சமூகத்திற்கு எதிராக இரண்டு கலவரங்கள் நடக்கின்றன.
- ஒரு ஆதிவாசி (ST) மட்டுமே வன்புணர்ச்சி செய்யப்பட்டதாக பதிவு செய்யப்பட்டுள்ளது.
- கையால் மலம் அள்ளும் வேலைக்கான தடை மற்றும் அவர்களின் மறுவாழ்வு சட்டம், 2013 (PEMSRA) ஆகியவற்றின் கீழ் வழக்கு பதிவு செய்த ஒரே மாவட்டம் மதுரையாகும்.
- மாநில அளவில் வன்கொடுமை குற்ற வழக்கிலிருந்து விடுவிப்பு விகிதம் 92.21%.
- 32 மாவட்டங்களில் 12–இல் 100% வன்கொடுமை வழக்கிலிருந்து விடுவித்தல்: ராமநாதபுரம் (102 வழக்குகள்), திருப்பூர், திருவாரூர், புதுக்கோட்டை, திருவள்ளூர், தஞ்சாவூர், தேனி, சென்னை, திருவண்ணாமலை, கோயம்புத்தூர், திண்டுக்கல் மற்றும் கடலூரில் விடுவிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை குறிப்பாக கடலூர் (0 தண்டனைகள், 203 விடுவிக்கப்பட்டவர்கள்), புதுக்கோட்டை (0, 165), ராமநாதபுரம் (0,133), தேனி (0, 108). தூத்துக்குடி (1, 133), தர்மபுரி (1, 99), விழுப்புரம் (47, 594) மற்றும் திருநெல்வேலி (5, 188) ஆகியவை மிகக் குறைவாக தண்டனை விகிதம் உள்ளவை.
- விதி 7 (3)இன் படி 66% விசாரணைகள் சரியான நேரத்தில் (60 நாட்களுக்குள்) முடிக்கப்படவில்லை, ஆனால் 2017இல் இது 53.5% (454ல் 243) ஆகக் குறைந்தது.
- ஒரு மாதத்திற்குள் முடிக்கப்பட்ட விசாரணைகளின் சராசரி எண்ணிக்கை ஒரு மாவட்ட துணை காவல் கண்காணிப்பாளர் (DSP)–க்கு 3.3 மட்டுமே.
- ஏழு மாவட்டங்களில் (தூத்துக்குடி, கோயம்புத்தூர், தேனி, திண்டுக்கல், விருதுநகர், திருநெல்வேலி மற்றும் மதுரை) உள்ள DSP மட்டுமே வாரத்தில் ஒன்றுக்கு மேற்பட்ட விசாரணைகளை முடித்துள்ளனர்.
- நீதிமன்றத்தில் நிலுவையில் 81% வழக்குகள் உள்ளன.

- 16 மாவட்டங்களில் நிலுவையில் உள்ள வழக்குகளின் எண்ணிக்கை அதிகரித்து வருகிறது: தஞ்சாவூர், பெரம்பலூர், வேலூர், தேனி, அரியலூர், சென்னை, திருவண்ணாமலை, விருதுநகர், சேலம், கோயம்புத்தூர், நாமக்கல், நீலகிரி, திண்டுக்கல், கடலூர், மதுரை மற்றும் திருச்சி.
- உருவாக்கப்பட வேண்டிய பிரத்யேக சிறப்பு நீதிமன்றங்களில் ஆறு (25%) மட்டுமே உருவாக்கப்பட்டுள்ளன.
- 29 மாவட்டங்களில் பயண மற்றும் பராமரிப்பு செலவுகள் (TAME) பற்றிய ஆவணப் பதிவு இல்லை.
- பாதிக்கப்பட்ட 59% பேருக்கு 2016ஆம் ஆண்டில் எந்த நிவாரணத் தொகையும் கிடைக்கவில்லை.
- 2016ல் நிர்ணயிக்கப்பட்ட காலமான 7 நாட்களுக்குள் நேரத்திற்குள் 8% பேருக்கு மட்டுமே இழப்பீடு/ நிவாரணம் கிடைத்தது, இது 2017ல் வெறும் 1% மட்டுமே [விதி 12(4)].
- விடுவிக்கப்பட்டதற்கு எதிராக அரசாங்கத்தால் பூஜ்ஜிய முறையீடுகள் மட்டுமே செய்யப்பட்டுள்ளன.
- நீலகிரி, பெரம்பலூர் மற்றும் கன்னியாகுமரி ஆகிய மாவட்டங்களில் ஒரு ஆண்டு முழுவதும் பூஜ்ஜிய நீதிமன்ற வழக்குகளே நிறைவடைந்தன.
- 2013 முதல் மாநில விழிகண் மற்றும் கண்காணிப்புக் குழுவின் (SVMC) ஒரு கூட்டம் கூட கூட்டப்படவில்லை, இதற்கு முதல்வர் தலைவராக இருக்கிறார், இந்தக் குழு, ஒவ்வொரு ஜனவரி மற்றும் ஜூலை மாதங்களில் சந்திக்க வேண்டும். 1989ல் தொடக்கத்திலிருந்து நடத்தப்பட்டிருக்க வேண்டிய 60 கட்டாயக் கூட்டங்களில் மூன்று மட்டுமே நடத்தப்பட்டுள்ளன – இது சட்டரீதியான தேவைகளில் 5% மட்டுமே.
- ‘கடுமையான அறிவுறுத்தல்கள்’ இருந்தபோதிலும், 2016ல் நான்கு மாவட்டங்களில் (திருச்சி, சிவகங்கை, சென்னை மற்றும் மதுரை) பூஜ்ஜிய DVMC கூட்டங்களே நடத்தப்பட்டன. (சட்டம் காலாண்டு கூட்டங்களை நடத்தக் கட்டளையிட்டாலும்) ஒன்பது மாவட்டங்கள் ஒன்றை மட்டுமே நடத்தியது (காஞ்சிபுரம், கன்னியாகுமரி, கரூர், புதுக்கோட்டை, திருவள்ளூர், திருவண்ணாமலை, தஞ்சாவூர், விழுப்புரம், மற்றும் கடலூர்)
- வழக்குகளின் காலாண்டு மதிப்பாய்வுகள் [விதி 7(3)] ஒன்று கூட நடத்தப்படவில்லை.
- சிறப்பு அரசு வழக்குரைஞர்களின் செயல்திறன் மதிப்புரைகள் [விதி 14(2)] பூஜ்ஜியமே.

- விதி 12(7)இன் கீழ் பூஜ்ஜிய அறிக்கைகள் மட்டுமே மாவட்ட நீதிபதியால் கள வருகைகளுக்குப் பிறகு [விதி 12(1)] சிறப்பு நீதிமன்றங்களுக்கு அனுப்பப்பட்டன.
- கடமை தவறியதற்காக எந்தவொரு அதிகாரிக்கும் எதிராக எந்த ஒரு நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை [பிரிவு 4(4)] அல்லது திறமையின்மைக்கு அவர்கள் மீது குற்றம் சாட்டப்படவில்லை.
- தமிழ்நாடு அரசு இச்சட்டத்தை நடைமுறைப்படுத்தாததில் ஒன்றும் ஆச்சரியம் இல்லை. **20** மார்ச் **2018** தீர்ப்பை எதிர்த்து மறுஆய்வு மனு தாக்கல் செய்த முதன்மையான மாநிலங்களில் தமிழகம் ஒன்றாகும். கண்காணிப்பாளர்களைக் கண்காணிக்கப் பொறுப்பானவர்கள்– முதலமைச்சர் உட்பட – அறியாமையில் உள்ளவர்கள் அல்லது பொறுப்பற்றவர்கள்.

## 4. கண்காணிப்பு கருவிகள் மற்றும் வழிமுறைகள்

### இந்த அத்தியாயத்தில் நீங்கள் அறிந்து கொள்ள இருப்பவை:

- மாநில, மாவட்ட மற்றும் துணைக்கோட்ட மட்டங்களில் உள்ள கண்காணிப்பு வழிமுறைகள்
- அவர்களின் கடமைகள்
- அவர்களின் குறிப்பிட்ட கால இடைவெளியிலான மதிப்பாய்வுகள்

| எண் | வழிமுறைகள் | விளக்கம் | கடமைகள் |
|---|---|---|---|
| 1 | மாநில விழிகண் மற்றும் கண்காணிப்பு குழு (SVMC) | [விதி 16(1)]ன் கீழ் முதலமைச்சர் (தலைவர்), உள்துறை அமைச்சர், நிதியமைச்சர், ஆதி திராவிடர் நலத்துறை அமைச்சர், பட்டியல் சமூகத்தைச் சேர்ந்த தேர்ந்தெடுக்கப்பட்ட பாராளுமன்ற உறுப்பினர்கள் – மாநில சட்டமன்ற மற்றும் மேலவை உறுப்பினர்கள்; தலைமைச் செயலாளர், உள்துறைச் செயலாளர், காவல்துறை இயக்குநர், இயக்குநர்/ துணை இயக்குநர் – பட்டியல் சாதியினருக்கான தேசிய ஆணையம் மற்றும் பட்டியல் பழங்குடியினருக்கான தேசிய ஆணையத்தைச் சேர்ந்தவர்கள் இதில் உறுப்பினர்களாக இருப்பார்கள்; பட்டியல் சமூகத்தின் வளர்ச்சி மற்றும் மேம்பாட்டுக்கான செயலாளர் இதற்கு அமைப்பாளராக இருப்பார். | குறைந்தது ஆண்டுக்கு இருமுறை, அதாவது ஜனவரி மற்றும் ஜூலையில் சந்திக்க வேண்டும். இச்சட்டத்தின் நடைமுறைப்படுத்துவதை மதிப்பாய்வு செய்ய வேண்டும்.<br>பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் சாட்சியங்களின் உரிமைகள் தொடர்பான திட்டங்கள் (அத்தியாயம் IV-A), அவர்களின் நிவாரணம் மற்றும் மறுவாழ்வு ஆகியவற்றை மதிப்பாய்வு செய்ய வேண்டும், [விதி 16].<br>இச்சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்ட வழக்குகளை மதிப்பாய்வு செய்ய வேண்டும்,[விதி 16]. |

| எண் | வழிமுறைகள் | விளக்கம் | கடமைகள் |
| --- | --- | --- | --- |
| | | | இச்சட்டத்தை அமல்படுத்துவதற்கு பொறுப்பான பல்வேறு துறைகள் சார்ந்த அதிகாரிகளின் பங்களிப்பை மதிப்பாய்வு செய்ய வேண்டும்,[விதி 16].<br>நோடல் மற்றும் சிறப்பு அதிகாரி உள்பட மாநில அரசாங்கத்திலிருந்து பெறப்பட்ட பல்வேறு அறிக்கைகளை மதிப்பாய்வு செய்ய வேண்டும்[விதி 16]. |
| 2 | பட்டியல் சாதிகள் மற்றும் பட்டியல் பழங்குடியினர் பாதுகாப்புக் கலம் (சாதிகள் மற்றும் பட்டியல் பழங்குடியினர் பாதுகாப்புக் கலம் (SC/ST Protection Cell) | [விதி 8]ன் கீழ் பட்டியல் சமூகத்தினரின் பாதுகாப்புக் கலம் ஏற்படுத்தப்பட்டுள்ளது.<br>இது விசாரணைகள், கள ஆய்வு, புலனாய்வு மற்றும் மாதாந்திர அறிக்கைகள் மூலம், பொது ஒழுங்கு மற்றும் அமைதியை நிலைநாட்டுவதற்கு இந்த அமைப்பு பொறுப்பாகும்.<br>தமிழகத்தில் சமூக நீதி மற்றும் மனித உரிமைகள் பிரிவு பட்டியல் சமூகத்தினரின் பாதுகாப்புக் கலமாக செய்கிறது. | அடையாளம் காணப்பட்ட பகுதியில் கள ஆய்வு செய்தல்.<br>அடையாளம் காணப்பட்ட பகுதியின் பொது ஒழுங்கு மற்றும் அமைதியைப் பராமரிப்பது.<br>அடையாளம் காணப்பட்ட பகுதியில் சிறப்பு காவல்படை/ சிறப்பு காவல் முகாம் அமைக்க மாநில அரசுக்கு பரிந்துரைப்பது.<br>இச்சட்டத்தின் கீழ் குற்றமிழைக்க வழிவகை செய்த காரணத்தைக் கண்டறிய புலனாய்வு செய்தல். |

| எண் | வழிமுறைகள் | விளக்கம் | கடமைகள் |
| --- | --- | --- | --- |
| | | | பட்டியல் சமூக மக்களிடையே பாதுகாப்பை மீட்டெடுப்பது.<br>சட்டம் ஒழுங்கு நிலையைப் பற்றி நோடல் மற்றும் சிறப்பு அதிகாரிக்குத் தெரியப்படுத்துதல்.<br>இச்சட்டத்தின் கீழ் பாதிக்கப்பட்டோர் மற்றும் சாட்சிகளின் உரிமைகள் தொடர்பாக மாவட்ட நீதிபதிக்கும் நோடல் அதிகாரிக்கும் தெரியப்படுத்துதல்.<br>பல்வேறு அதிகாரிகள் நடத்திய கள ஆய்வு மற்றும் புலனாய்வு பற்றி விசாரித்தல்.<br>பொது அதிகாரிகள் வேண்டுமென்றே அலட்சியப்போக்கோடு<br>நடந்துகொண்டது பற்றி விசாரித்தல்.<br>காவல் நிலையத்தில் பராமரிக்கப்படும் தகவல்களில் பதிவேற்றம் செய்ய மறுத்த அதிகாரியின் மீது மாவட்ட காவல் கண்காணிப்பாளர் எடுத்த நடவடிக்கை பற்றி விசாரித்தல்.<br>இச்சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்ட வழக்குகளின் தற்போதைய நிலை |

| எண் | வழிமுறைகள் | விளக்கம் | கடமைகள் |
|---|---|---|---|
| | | | பற்றி மதிப்பாய்வு செய்து எடுக்கப்பட்ட நடவடிக்கை பற்றியும், எதிர்காலத் திட்டம் பற்றியும் மாதாந்திர அறிக்கை அனுப்புதல். எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் மற்றும் எடுக்க இருக்கும் நடவடிக்கைகள் பற்றி ஒவ்வொரு மாதமும் 20ஆம் தேதியில் அல்லது அதற்கு முன்பாக மாதாந்திர அறிக்கை சமர்ப்பித்தல், [விதி 8]. |
| 3 | மாவட்ட விழிகண் மற்றும் கண்காணிப்பு குழு (மாவட்ட விழிகண் மற்றும் கண்காணிப்பு குழு (DVMC) | இந்த சட்டம் நடைமுறைப்படுத்துவதைக் கண்காணிக்க ஒவ்வொரு மாவட்டத்திலும் மாவட்ட நீதிபதி DVMC–யை ஏற்படுத்த வேண்டும்.<br>தேர்ந்தெடுக்கப்பட்ட பாராளுமன்ற உறுப்பினர்கள், மேலவை உறுப்பினர்கள், மாவட்ட காவல்துறை கண்காணிப்பாளர், பட்டியல் இனத்தைச் சேர்ந்த 3 குரூப் A அதிகாரிகள்/ கெஸட்டட் அதிகாரிகள், பட்டியல் வகுப்பைச் சார்ந்த 5க்கும் மிகாத உத்தியோகப்பூர்வமற்ற உறுப்பினர்கள், அரசு சாரா நிறுவனங்களுடன் தொடர்புடைய பட்டியல் இனத்தவரல்லாத 3 உறுப்பினர்களை உள்ளடக்கியதாக DVMC இருக்க வேண்டும். மாவட்ட நீதிபதி இதன் தலைவராகவும் மாவட்ட சமூக நல | குறைந்தது மூன்று மாதத்திற்கு ஒருமுறை கீழ்கண்டவற்றை மதிப்பாய்வு செய்ய DVMC கூட வேண்டும்.<br>இந்தச் சட்டத்தை செயல்படுத்துவது.<br>பிரிவு 15, பிரிவு 15–A(11)ல் கூறப்பட்டுள்ளவாறு பாதிக்கப்பட்டோர் மற்றும் சாட்சியங்களின் உரிமைகள் மற்றும் உடைமைகள் தொடர்பான திட்டம்.<br>பாதிக்கப்பட்டவர்களுக்கு நிவாரணம், மறுவாழ்வு வசதிகள் மற்றும் அதனுடன் இணைக்கப்பட்ட இதர விஷயங்கள். |

| எண் | வழிமுறைகள் | விளக்கம் | கடமைகள் |
|---|---|---|---|
| | | அதிகாரி இதன் உறுப்பினர் செயலாளராகவும் இருப்பர். | இச்சட்டத்தின் கீழ் வழக்குகளை நடத்துதல்.<br>இச்சட்டத்தை நடைமுறைப்படுத்தும் பல்வேறு அதிகாரிகள்/ முகவர்களின் பங்கு மற்றும் மாவட்ட நிர்வாகத்தால் பெறப்பட்ட பல்வேறு அறிக்கைகள். |
| 4 | சிறப்பு நீதிமன்றம் (Special Court)/ பிரத்தியேக சிறப்பு நீதிமன்றம் (Exclusive Special Court) | விரைவான நீதி விசாரணையை வழங்குவதற்காக மாநில அரசு உயர்நீதிமன்ற தலைமை நீதிபதியின் ஒப்புதலுடன் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட மாவட்டங்களில் பிரத்தியேக சிறப்பு நீதிமன்றம் அல்லது வழக்குகள் குறைவாக உள்ள மாவட்டங்களில் மாவட்ட குற்றவியல் நீதிமன்றத்தை சிறப்பு நீதிமன்றமாக இச்சட்டத்தின் கீழ் அங்கீகரிக்க வேண்டும். | மாவட்ட நீதிபதி சமர்ப்பித்த நிவாரணம் மற்றும் மறுவாழ்வு அறிக்கையை சரிபார்த்து பாதிக்கப்பட்டவருக்கோ/ அவரைச் சார்ந்தவர்களுக்கோ செய்யப்பட்ட உதவி போதுமானதாக இல்லாவிட்டாலோ, சரியான நேரத்தில் கிடைக்கப்பெறாவிட்டலோ நிவாரணம் அல்லது வேறு உதவிகள் செய்து தர உத்தரவிடலாம், [விதி 12(7)].<br>பாதிக்கப்பட்டவர்களுக்கும் சாட்சிகளுக்கும் மாநில அரசு அளித்துவரும் பாதுகாப்பை அவ்வப்போது மதிப்பாய்வு செய்து தகுந்த உத்தரவுகளை பிறப்பிக்க வேண்டும், [பிரிவு 15-A(7)].<br>குற்றப்பத்திரிகை தாக்கல் செய்த |

| எண் | வழிமுறைகள் | விளக்கம் | கடமைகள் |
|---|---|---|---|
| | | | நாளிலிருந்து இரண்டு மாதத்திற்குள்ளாக வழக்குகளை முடித்து வைக்க வேண்டும், [பிரிவு 14(3)].<br>தினந்தோறும் வழக்குகளை நடத்துவதோடு அடுத்த நாளுக்கப்பால் வழக்கை ஒத்திவைத்தால் அதற்கான காரணத்தை எழுத்துப்பூர்வமான பதிவு செய்ய வேண்டும், [பிரிவு 14(3)].<br>பாதிக்கப்பட்டவர்கள்/ சார்ந்திருப்போர், சாட்சிகள்/ தகவல் தெரிவித்தவர்களின் பாதுகாப்பிற்காக [பிரிவு15-A(6)& (8)]ன் கீழ் கூறப்பட்டுள்ளவைகளைச் செய்ய வேண்டும். |
| 5 | துணை நிலை விழிகண் மற்றும் கண்காணிப்பு குழு (Sub-Division Level Vigilance and Monitoring Committee) | ஒவ்வொரு துணை நிலைக்கும் துணை நிலை நீதிபதி ஒரு துணை நிலை விழிகண் மற்றும் கண்காணிப்புக் குழுவை ஏற்படுத்துவார். இந்தக் குழுவின் உறுப்பினர்களாக மாநில சட்டமன்ற உறுப்பினர்கள்/ மேலவை உறுப்பினர்கள், பட்டியல் சமூகத்தினரில் பஞ்சாயத்து ராஜ் அமைப்பிற்கு மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்களுடன் துணைக் காவல் கண்காணிப்பாளர்கள், வட்டாட்சியர், வட்டார | மதிப்பாய்வு செய்ய மூன்று மாதங்களுக்கு ஒருமுறையாவது கூட வேண்டும்.<br>சட்டத்தை நடைமுறைப்படுத்துதல்.<br>[பிரிவு 15-A(11)]ல் கூறப்பட்டுள்ளவாறு நீதியை அணுகுவதில் பாதிக்கப்பட்டோர் மற்றும் சாட்சியங்களின் உரிமைகள் மற்றும் |

| எண் | வழிமுறைகள் | விளக்கம் | கடமைகள் |
|---|---|---|---|
| | | வளர்ச்சி அதிகாரி, பட்டியல் சமூகத்தைச் சாராத இரண்டு அதிகாரப்பூர்வமற்ற உறுப்பினர்கள், அரசு சாரா நிறுவனத்தைச் சேர்ந்த பட்டியல் சமூகத்தைச் சாராத இருவர் இருப்பார்கள்.<br>துணை நிலை நீதிபதி இதன் தலைவராகவும், வட்டார வளர்ச்சி அதிகாரி இதன் உறுப்பினர் செயலாளராகவும் இருப்பார். | உடைமைகள் தொடர்பான திட்டம்.<br>பாதிக்கப்பட்டவர்களுக்கு மற்றும் மறுவாழ்வு வசதிகள், அதனுடன் இணைக்கப்பட்ட இதர விஷயங்கள்.<br>இச்சட்டத்தின் கீழ் வழக்குகளை விசாரித்தல்.<br>துணைச் சார்பு நிர்வாகத்தினால் பெறப்பட்ட பல்வேறு அறிக்கைகள் மற்றும் இச்சட்டத்தை அமல்படுத்தும் பல்வேறு அதிகாரிகள்/ முகவர்களின் பங்கு. |

## 5. அதிகாரிகளின் பொறுப்புகள்

இந்தச் சட்டத்தின் கீழ் பணிக்கப்பட்ட அனைத்து அதிகாரிகளும், பட்டியல் சமூகத்தினரின் நிலைமை குறித்து 'பொருத்தமான தகுதியும் புரிதலும்' கொண்டிருக்க வேண்டும்.

**இந்த அத்தியாயத்தில் நீங்கள் அறிந்து கொள்ள இருப்பவை:**

- இந்தச் சட்டத்தின் கீழ் மாநில, மாவட்ட மற்றும் துணைக் கோட்ட அளவிலான அதிகாரிகள்.
- இந்த சட்டம் மற்றும் விதிகளில் வரையறுக்கப்பட்டுள்ள அவர்களின் செயல்பாடுகள்.
- நிர்ணயிக்கப்பட்டுள்ள கால இடைவெளிகளில் அவர்களின் செயல்பாடுகள் மற்றும் மதிப்பாய்வுகள்.

### 5.1 மாநில அளவில்

| எண் | அதிகாரி | நோக்கம் | பணிகள் |
|---|---|---|---|
| 1 | முதலமைச்சர் | SVMCயின் தலைவர் | SVMC-யின் தலைவராக நிறைவேற்ற வேண்டிய கடமைகள் (விதி 16). |
| 2 | நோடல் அதிகாரி | தமிழ்நாட்டில் ஆதிதிராவிடர் நலத்துறையின் முதன்மைச் செயலாளர் அதிகாரியாக இருப்பார்.<br>மாநில அரசாங்கம் செயலாளர் மட்டத்திலான ஒரு அதிகாரியை நோடல் அதிகாரியாக நியமிக்கும். அவர் பட்டியல் சமூகத்தை சேர்ந்தவராக இருப்பது நன்று. அவர் மாவட்ட ஆட்சியர், மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அல்லது அவர்களால் அங்கீகரிக்கப்பட்ட பிற அதிகாரிகள், புலனாய்வு அதிகாரிகள் | ஒவ்வொரு காலாண்டின் முடிவிலும் அவர் கீழ்கண்டவற்றை மதிப்பாய்வு செய்ய வேண்டும்:<br>விதி 4(2) & (4), விதி 6, விதி 8 (xi)யின் கீழ் மாநில அரசு பெற்ற அறிக்கைகள். |

| எண் | அதிகாரி | நோக்கம் | பணிகள் |
|---|---|---|---|
| | | மற்றும் பொறுப்பான பிற அதிகாரிகள் ஆகியோரின் செயல்பாட்டை ஒருங்கிணைப்பார். | இச்சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்ட வழக்குகளின் நிலை. அடையாளம் காணப்பட்ட பகுதியில் சட்டம் ஒழுங்கின் நிலைமை.<br>வன்கொடுமையினால் பாதிக்கப்பட்டவர்கள்/ அவர்களைச் சார்ந்தவர்களுக்கு பணமாகவோ பொருளாகவோ அல்லது இரண்டுமே நிவாரணமாக வழங்க மேற்கொள்ளப்பட்ட பல்வேறு நடவடிக்கைகள். |
| 3 | முதன்மைச் செயலாளர், உள்துறை அமைச்சகம் | முதன்மைச் செயலாளர் இந்தத் துறையின் நிர்வாகத் தலைவராகவும், முதலமைச்சர், சட்டம் மற்றும் தொழில்நுட்பத்துறை அமைச்சர், போக்குவரத்துத்துறை அமைச்சர் ஆகியோருக்கு இத்துறை தொடர்பான கொள்கை மற்றும் நிர்வாகம் பற்றிய அனைத்து விஷயங்களிலும் முதன்மை ஆலோசகராக இருப்பார்.<br>மாநிலத்தின் காவல்துறை, துணைப்பணிகள், சிறைச்சாலைகள் | ஒவ்வொரு காலாண்டின் முடிவிலும் புலனாய்வு செய்யப்பட்ட வழக்குகளின் நிலையை மதிப்பாய்வு செய்வது, விதி 7(3).<br>இவர் SVMC-யின் உறுப்பினராவார். |
| | | மற்றும் போக்குவரத்து துறை ஆகியவை உள்துறை அமைச்சகத்தின் பொறுப்பாகும். கொள்கை வகுப்பது, சட்டம் ஒழுங்கை நிலைநாட்டுவது, குற்றவியல் நீதிமுறையை சிறப்பாக நடைமுறைப்படுத்துவதற்கான வழிமுறைகளை ஏற்படுத்துவது இத்துறையின் கடமையாகும். | |

| எண் | அதிகாரி | நோக்கம் | பணிகள் |
|---|---|---|---|
| | | இத்துறையின் வணிகப் பரிவர்த்தனைகளில் வணிக விதிகள் மற்றும் செயலக வழிமுறைகளை கவனமாகக் கடைபிடிக்கும் பொறுப்பு முதன்மைச் செயலாளருக்கே உள்ளது. அனைத்து முக்கிய முடிவுகள், கொள்கைகள் உட்பட இத்துறையின்மீது முழுமையான கட்டுப்பாட்டினைக் கொண்ட செயலாளரைக் கலந்தாலோசித்தே எடுக்கப்பட வேண்டும். | |
| 4 | குற்ற வழக்( தொடர்புத்துறை இயக்குநர் | நிர்வாக இயக்குநர்தான் இந்த அமைப்பின் தலைவராவார். இந்த இயக்குநகரத்தின் நிர்வாகச் செயல்பாடுகளைக் கட்டுப்படுத்தும் அதிகாரம் இயக்குநருக்கே உள்ளது.<br>இவர் மாதாந்திர மதிப்பாய்வுக் கூட்டங்களை நடத்தி அதில் ஒவ்வொரு மாவட்டத்திலும் நிலுவையில் உள்ள மற்றும் முடித்துவைக்கப்பட்ட வழக்குகளை திறனாய்வு செய்ய வேண்டும்.<br>வழக்கில் அப்பாவி நபர் எவரேனும் தவறுதலாக சேர்க்கப்பட்டிருப்பதாக கருதினால் அந்த வழக்கின் குற்றப்பத்திரிகையை ஆராயவும் அது சம்பந்தமாக அந்த வழக்கின் குற்ற வழக்கு தொடர்பு துறை அதிகாரிக்கு ஆலோசனை கூறவும் அதிகாரம் உள்ளது. | ஆண்டுக்கு இருமுறை ஜனவரி மற்றும் ஜூலை மாதங்களில் சிறப்பு அரசு வழக்குரைஞர்/ தனிச்சிறப்பு வழக்குரைஞர் மற்றும் தனிச்சிறப்பு வழக்குரைஞர் ஆகியோரின் செயல்திறனை மதிப்பாய்வு செய்து மாநில அரசிடம் அறிக்கை சமர்ப்பிக்க வேண்டும் (விதி 4(2)).<br>மாவட்ட ஆட்சியரும் குற்ற |
| | | வழக்கு தொடுக்கும் அதிகாரிகளின் செயல்பாடுகள் குறித்து தனிப்பட்ட முறையில் மதிப்பாய்வு செய்வதற்கும் வழக்குகளை விரைவாக தீர்ப்பது தொடர்பாக நீதித்துறை மற்றும் காவல்துறை உயரதிகாரிகளை சந்திப்பதற்கும் இயக்குநர் அடிக்கடி களத்தில் சந்திக்க வேண்டும்.<br>வழக்குகளை விரைவாக முடிக்கவும் பொருத்தமான | வழக்கு தொடர்பு துறை அதிகாரியும் சமர்ப்பிக்கும் மாதாந்திர மதிப்பாய்வு அறிக்கையை பெறும் உரிமை உள்ளது (விதி 4(4)).<br>ஒவ்வொரு காலாண்டின் |

| எண் | அதிகாரி | நோக்கம் | பணிகள் |
|---|---|---|---|
| | | அறிவுறுத்தல் மற்றும் வழிகாட்டல்களை வழங்கவும் காவல்துறை அதிகாரிகளுடன் ஒருங்கிணைப்பு கூட்டம் நடத்தவும் இயக்குநருக்கு அதிகாரம் உள்ளது. | கடைசியிலும் விசாரணை அதிகாரியால் நடத்தப்படும் விசாரணைகளின் நிலையை மதிப்பாய்வு செய்ய அதிகாரம் உள்ளது (விதி 7(3) |
| 5 | மாநில காவல்துறை இயக்குநர் (DGP) | மூத்த இந்திய காவல் பணி (IPS) அதிகாரியான DGPயின் தலைமையில் மாநில காவல்துறை இருக்கும். சட்டம் ஒழுங்கு மற்றும் குற்றவியல் நீதியைப் பேணுவதில் காவல்துறையின் செயல்பாடுகளை அவர் பார்த்துக்கொள்வார்.<br>DGP-க்கு துணையாக கூடுதல் DGP-க்கள், காவல்துறை IG-க்கள், காவல்துறை DIG-க்கள், காவல்துறை கண்காணிப்பாளர்கள் மற்றும் இதர அலுவலர்கள் இருப்பார்கள். | குறைவான நேரத்தில் விசாரணை அதிகாரியை நியமித்தல் (விதி7(1)).<br>மாவட்ட காவல்துறை கண்காணிப்பாளர் அனுப்பும் புலனாய்வு அறிக்கைகளைப் பெறுவது (விதி 7(2)).<br>ஒவ்வொரு காலாண்டின் முடிவிலும் புலனாய்வு அதிகாரிகளால் மேற்கொள்ளப்பட்ட புலனாய்வின் நிலையை மதிப்பாய்வு செய்வது (விதி 7(3)).<br>SVMC உறுப்பினராக செயல்படுவது (விதி 16). |
| 6 | கூடுதல் காவல் துறை இயக்குநர் (ADGP) | பட்டியல் சமூக பாதுகாப்புக் கலத்தின் தலைவராக ADGP அளவிலான அதிகாரி இருப்பார். | பட்டியல் சமூக பாதுகாப்புக் கலத்தின் தலைவர் (விதி 8). |

## 5.2 மாவட்ட அளவில்

கீழேயுள்ள அட்டவணை மாவட்ட அளவில் அதிகாரிகள் செய்ய வேண்டிய நடவடிக்கைகள் குறித்து இன்னும் விரிவான விளக்கத்தை அளிக்கிறது. அதிகாரிகளின் செயல்பாடுகளைப் பற்றி விரிவாக அறியாமல் கண்காணிப்பு செய்ய இயலாது, எனவே நீங்கள் விரும்பினால் அதை இப்போதைக்கு தவிர்க்கலாம். எவ்வாறாயினும், பிறகு இதனை படிக்கும்படி கேட்டுக்கொள்கிறோம், ஏனெனில் ஆழ்ந்த புரிதல் முழுமையான ஈடுபாட்டிற்கு மேலும்உதவும்.

**மாவட்ட அளவிலான அதிகாரிகள்**

| எண் | அதிகாரி | நோக்கம் | பணிகள் |
|---|---|---|---|
| 1. | மாவட்ட ஆட்சியர் (மாவட்ட நீதிபதி) | மாவட்டத்தின் நிர்வாகத் தலைவராக மாவட்ட ஆட்சியர் இருப்பார். பொதுவாக அவர் மாவட்டத்தின் சட்டம் ஒழுங்கைப் பேணுவதற்கு பொறுப்பானவரார். வன்கொடுமை தடுப்பு சட்டத்தை நடைமுறைப்படுத்தும் முக்கிய அதிகாரியாகவும், பல்வேறு அறிக்கைகள் மற்றும் அதிகாரிகளின் செயல்பாடுகளை மதிப்பாய்வு செய்பவராகவும் இச்சட்டத்தின் கீழ் இருக்கிறார். | **24 மணி நேரத்திற்குள்:** கள ஆய்வு செய்து உயிருக்கும் உடைமைக்குமான சேதாரத்தை மதிப்பிடுதல், பாதிக்கப்பட்டோரை கணக்கெடுத்தல், அவர்களின் குடும்ப உறுப்பினர்கள் மற்றும் அவர்களைச் சார்ந்தோருக்கான நிவாரணத்தைக் கணக்கெடுத்து சிறப்பு நீதிமன்றம்/ தனிச்சிறப்பு நீதிமன்றத்திற்கு அறிக்கையின் நகலை அனுப்புவது (விதி 12(7)) மற்றும் (விதி 6). |
| | | | அத்தியாவசியத் தேவைகளான உணவு, குடிநீர், உடைகள், தங்குமிடம், மருத்துவ உதவி, போக்குவரத்து வசதி மற்றும் இதர அத்தியாவசிய தேவைகளை ஏற்பாடு செய்வது (விதி 11). |

| எண் | அதிகாரி | நோக்கம் | பணிகள் |
|---|---|---|---|
| | | | **7 நாட்களுக்குள்** செய்ய வேண்டியவை: வன்கொடுமையால் பாதிக்கப்பட்டவர், அவரது குடும்பத்தினர் மற்றும் அவரைச் சார்ந்தவர்களுக்கு நிவாரணத்தை பணமாகவோ, பொருளாகவோ அல்லது இரண்டையுமோ 7 நாட்களுக்குள் வழங்க வேண்டும்.<br>புலனாய்வு மற்றும் வழக்கு விசாரணையின்போது பாதிக்கப்பட்டவர், அவரது குடும்பத்தினர் மற்றும் அவரைச் சார்ந்தவர்களுக்கான பயணப்படி, தினப்படி, பராமரிப்புச் செலவுகள், உணவுப் படி வழங்க வேண்டும் (விதி 11). |
| | | | **மாதாந்திரம்:** இச்சட்டத்தின் கீழ் பதியப்பட்ட வழக்குகளை மதிப்பாய்வு செய்வது, பாதிக்கப்பட்டோர் மற்றும் சாட்சிகளின் உரிமைகளை நிலை நாட்டுவது, அடுத்து வரும் மாதத்தின் 20ம் தேதி அல்லது அதற்கு முன்னர் குற்றவழக்கு தொடர்புத் துறை இயக்குநருக்கும் மாநில அரசாங்கத்திற்கும் மாதாந்திர அறிக்கையை அனுப்புவது (விதி 4).<br>**மூன்று மாதத்திற்கு ஒருமுறை:** டிவிஎம்சி கூட்டத்தைக் கூட்டுவது மற்றும் சட்டத்தை முறையாக அமல்படுத்துவது (விதி 17(3)). |

| எண் | அதிகாரி | நோக்கம் | பணிகள் |
|---|---|---|---|
| | | | **ஜனவரி மற்றும் ஜூலை:**<br>சிறப்பு அரசு வழக்குரைஞர்/ தனிச்சிறப்பு அரசு வழக்குரைஞர்களின் |
| | | | செயல்பாட்டினை வருடத்திற்கு இருமுறை ஜனவரி மற்றும் ஜூலையில் மதிப்பாய்வு செய்து மாநில அரசிற்கு அறிக்கை சமர்ப்பிப்பது (விதி 4(2)).<br>**அவ்வப்போது:**<br>அடையாளம் காணப்பட்ட பகுதியில் சட்டம் ஒழுங்கு நிலைமையை மதிப்பாய்வு செய்வது (விதி 3(ii)).<br>**மூன்று வருடத்திற்கு ஒருமுறை:**<br>DVMC குழுவை ஏற்படுத்துவது (விதி 17). |
| 2. | சிறப்பு அதிகாரி (Special Officer) | அடையாளம் காணப்பட்ட பகுதிக்கு சிறப்பு அதிகாரிகள் நியமிக்கப்படுவார்கள். தமிழ்நாட்டில் மாவட்ட ஆட்சியரே சிறப்பு அதிகாரி ஆவார். சிறப்பு அதிகாரியின் முக்கிய நோக்கமே மாவட்ட நீதிபதி/ மாவட்ட காவல் கண்காணிப்பாளர் மற்றும் இச்சட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கு பொறுப்பான அதிகாரிகள், பல்வேறு குழுக்கள் மற்றும் பட்டியல் சமூகத்தினரின் பாதுகாப்புக் கலத்தோடு ஒருங்கிணைப்பது (விதி 10). | பாதிக்கப்பட்டோருக்கு உடனடியாக நிவாரணம் மற்றும் இதர தேவைகளை வழங்குவதோடு தேவையான முன்னெச்சரிக்கையாக தடுப்பு நடவடிக்கைகளை மேற்கொள்வது. பட்டியல் சமூகத்தினருக்கு இச்சட்டத்தின் கீழ் அவர்களின் உரிமைகள் மற்றும் கிடைக்கும் |

| எண் | அதிகாரி | நோக்கம் | பணிகள் |
|---|---|---|---|
| | | | பாதுகாப்பு பற்றி அவர்களுக்கு அறிவூட்ட, அடையாளம் காணப்பட்ட பகுதியில் விழிப்புணர்வு மையங்கள் அமைப்பதோடு பயிற்சிப் பட்டறைகளை ஏற்பாடு செய்வது.<br><br>அரசு சாரா நிறுவனங்களோடு ஒருங்கிணைந்து பயிற்சிப் பட்டறைகள் நடத்தவும், விழிப்புணர்வு மையங்களை பராமரிக்கவும் தேவையான உதவிகளையும் நிதிகளையும் வழங்க வேண்டும். இச்சட்டத்தின் அத்தியாயம் IV-Aல் கூறப்பட்டுள்ளவாறு அடையாளம் காணப்பட்ட பகுதியில் உள்ள பாதிக்கப்பட்டோர் மற்றும் சாட்சிகளின் உரிமைகளை நடைமுறைப்படுத்துவதை உறுதிப்படுத்துவது (விதி 10). |
| 3. | மாவட்ட காவல் கண்காணிப்பாளர்/ காவல் ஆணையர் | (மாநகர் அல்லாத பகுதிகளில்) மாவட்ட காவல் கண்காணிப்பாளரே அந்த மாவட்ட காவல்துறையின் தலைவராவார்.<br>(மாநகர பகுதிகளில்) காவல்துறை ஆணையரே மாவட்ட காவல்துறையின் தலைவராவார். அவர்களின் அதிகாரத்திற்குட்பட்ட பகுதிகளில் சட்டம் | **24 மணி நேரத்திற்குள்:**<br>கள ஆய்வு செய்து உயிருக்கும் உடைமைக்குமான சேதாரத்தை மதிப்பிடுதல், பாதிக்கப்பட்டோரைக் கணக்கெடுத்தல், அவர்களின் குடும்ப உறுப்பினர்கள் மற்றும் அவர்களைச் சார்ந்தோருக்கான நிவாரணத்தைக் கணக்கெடுத்து சிறப்பு நீதிமன்றம்/ தனிச்சிறப்பு |

| எண் | அதிகாரி | நோக்கம் | பணிகள் |
|---|---|---|---|
| | | ஒழுங்கைப் பராமரிப்பதும், குற்றச் செயல்களைத் தடுப்பதும் அவர்களது பொறுப்பாகும். வன்கொடுமை தடுப்புச் சட்டத்தின் கீழ் நேர்மையான சிறப்பான புலனாய்வை உறுதிசெய்வதன் முக்கியப் பங்கு வகிக்கின்றனர். மாவட்ட காவல் கண்காணிப்பாளர் DVMC–யின் உறுப்பினராவார். | நீதிமன்றத்திற்கு அறிக்கையின் நகலை அனுப்புவது (விதி 12(7)) மற்றும் (விதி 6).<br>புலனாய்வு அதிகாரியை நியமித்தல்.<br>புலனாய்வு அதிகாரியின் சமர்ப்பித்த புலனாய்வு அறிக்கையை உடனடியாக DIG அல்லது காவல்துறை ஆணையருக்கும் காவல்நிலைய பொறுப்பு அதிகாரிக்கும் அனுப்ப வேண்டும். |
| | | | முதல் தகவல் அறிக்கை பதிவு செய்வதையும், குற்றம் சாட்டப்பட்டவரை கைது செய்ய தேவையான நடவடிக்கைகளையும் உறுதி செய்ய வேண்டும் [விதி 12(2)]. |
| 4. | துணை காவல் கண்காணிப்பாளர் (DSP)/ உதவி காவல் ஆணையர் (Assistant Commissioner)(IO)) | சட்டத்தின் கீழ் உள்ள வழக்குகளின் தாக்கங்களை உணர்ந்து சரியான நீதிக்குட்பட்டு விசாரிப்பதற்காக I.O. நியமிக்கப்படுகிறார். மாநில அரசாங்கம்/ DGP/SP ஆகியோர், DSP பதவிக்கு குறையாத ஒரு காவல்துறை அதிகாரியை I.O.வாக நியமிப்பதற்கு முன், அவரின்/ அவளின் கடந்த கால அனுபவம், திறன் உணர்வு மற்றும் வழக்கின் தாக்கங்களை உணரும் தன்மையைக் கருத்தில் கொண்டே நியமிக்க | பாதிக்கப்பட்டவர், தகவல் தெரிவிப்பவர் அல்லது சாட்சிகளின் புகார் வாய்ச்சொல் வடிவத்திலோ எழுத்து வடிவத்திலோ அதனைப் பதிவு செய்து அதன் நகலை முதல் தகவல் அறிக்கையோடு இலவசமாக வழங்க வேண்டும் [பிரிவு 15(9)].<br>புலன் விசாரணையை முடித்து அதனறிக்கையை மாவட்ட காவல் கண்காணிப்பாளருக்கு அனுப்புவதோடு 60 நாட்களுக்குள் குற்றப்பத்திரிகையைத் தாக்கல் செய்ய வேண்டும் [விதி 7(2)]. |

| எண் | அதிகாரி | நோக்கம் | பணிகள் |
|---|---|---|---|
| | | வேண்டும் (விதி 7). DSP, துணை DVMC-யின் உறுப்பினராவார். | |
| | | | புலன் விசாரணையிலோ அல்லது குற்றப்பத்திரிகை தாக்கல் செய்வதிலோ ஏதேனும் தாமதம் ஏற்படின் அதற்கான விளக்கத்தைத் தர வேண்டும் [விதி 7(2-A)]. |
| 5. | காவல் நிலைய அதிகாரி (ஆய்வாளர்/ துணை ஆய்வாளர்) | ஆய்வாளரே காவல் நிலையத்தின் தலைவர். அவர் முக்கிய வழக்குகளை புலனாய்வு செய்வதற்குப் பொறுப்பானவர். துணை ஆய்வாளர், ஆய்வாளருக்கு கீழ் உள்ளவர். அவர் அனைத்து வழக்குகளையும் புலனாய்வு செய்வதற்குப் பொறுப்பானவர். குற்றங்களைத் தடுப்பதிலும், புலனாய்வு (வன்கொடுமை தடுப்பு சட்டத்தின் கீழ் வரும் குற்றங்களுக்கு அல்ல) மற்றும் வழக்கு தொடுப்பது, அவர்களின் அதிகாரத்துட்குட்பட்ட பகுதிகளில் சட்டம் ஒழுங்கைப் பாதுகாப்பதிலும் இருவரும் முக்கியப் பங்கு வகிக்கின்றனர். | பாதிக்கப்பட்டவர், தகவல் தெரிவிப்பவர் அல்லது சாட்சிகளின் புகார் வாய்ச்சொல் வடிவத்திலோ எழுத்து வடிவத்திலோ அதனைப் பதிவு செய்து அதன் நகலை முதல் தகவல் அறிக்கையோடு இலவசமாக வழங்க வேண்டும். [பிரிவு 15(9)].<br>முதல் தகவல் அறிக்கையைப் பதிவு செய்ததிலிருந்து 60 நாட்களுக்குள் குற்றப்பத்திரிகையை தாக்கல் செய்ய வேண்டும். |
| 6 | வழக்குத் தொடுப்பதற்கு பொறுப்பான | வன்கொடுமை வழக்குகளை நடத்துவதற்கு மாநில அரசாங்கம் இரண்டு குழுவை உருவாக்கும். ஒரு குழுவில் 7 வருடங்களுக்கு | சிறப்பு நீதிமன்றங்களில் வழக்குகளை நடத்துவது. இந்த சட்டத்தின்கீழ் பதியப்பட்ட வழக்குகளின் நிலையை மதிப்பாய்வு செய்வது மற்றும் |

| எண் | அதிகாரி | நோக்கம் | பணிகள் |
|---|---|---|---|
| | அதிகாரி (சிறப்பு/ தனிச்சிறப்பு அரசு வழக்குரைஞர்) | மேற்பட்ட அனுபவமுடைய வழக்குரைஞர்கள் இருப்பார்கள். இத்தகைய குழுவானது, ஒவ்வொரு மாவட்டத்திலும் மாவட்ட நீதிபதியின் பரிந்துரையின் கீழ் உருவாக்கப்படும். குற்ற தொடர்புத்துறை இயக்குநரின் பரிந்துரையின் பேரில் உருவாக்கப்படும் இரண்டாவது குழுவில் சிறப்பு அரசு வழக்குரைஞர்களும் தனிச்சிறப்பு அரசு வழக்குரைஞர்களும் இருப்பார்கள். தமிழகத்தில் எல்லா மாவட்டங்களிலும் உள்ள சிறப்பு நீதிமன்றங்களில் 33 சிறப்பு அரசு வழக்குரைஞர்கள் பாதிக்கப்பட்டவர்கள் சார்பாக அரசு வழக்குரைஞர்களாக இருக்கிறார்கள். | பாதிக்கப்பட்டோர் மற்றும் சாட்சிகளின் உரிமைகளை நடைமுறைப்படுத்துவதோடு ஒவ்வொரு வழக்கு குறித்தும், குற்றத் தொடர்புத்துறை இயக்குநருக்கும் மாநில அரசுக்கும் வழக்கு விசாரணை தொடர்பாக எடுக்கப்பட்ட/ எடுக்கப்பட வேண்டிய சட்ட நடவடிக்கைகள் குறித்த மாதாந்திர அறிக்கை அனுப்புவது, [விதி 4(4)].<br>ஒவ்வொரு காலாண்டின் முடிவிலும் புலனாய்வு அதிகாரிகளால் புலனாய்வு செய்யப்பட்ட வழக்குகளின் நிலையை மதிப்பாய்வு செய்வது, [விதி 7(3)]. |
| 7. | சிறப்பு நீதிமன்ற நீதிபதி | சிறப்பு நீதிமன்றத்தின் நீதிபதி வன்கொடுமை தடுப்புச் சட்டத்தின் கீழுள்ள வழக்குகளை விசாரிப்பார். பாதிக்கப்பட்டோரின் உரிமைகளை நிலைநாட்டுவதிலும், அவர்கள் விசாரணையின்போது சிறப்பான நீதியைப் பெறுவதற்கும் முக்கியப் பங்காற்றுகிறார். | மாவட்ட நீதிபதி சமர்ப்பித்த நிவாரணம் மற்றும் மறுவாழ்விற்கான அறிக்கையை ஆராய்வதோடு பாதிக்கப்பட்டோருக்கு/ சார்ந்தோருக்கு உரிய நேரத்தில் கிடைக்கப்பெறாத போதுமான இழப்பீடு/ அல்லது வேறு உதவிகளை வழங்க ஆணையிடலாம், [விதி 12(7)].<br>பாதிக்கப்பட்டவர்களுக்கும் சாட்சிகளுக்கும் மாநில அரசு அளித்து வரும் பாதுகாப்பை |

| எண் | அதிகாரி | நோக்கம் | பணிகள் |
|---|---|---|---|
| | | | அவ்வப்போது மதிப்பாய்வு செய்து தகுந்த உத்தரவுகளை அனுப்பவும் [பிரிவு 15-A (7)].<br>குற்றப்பத்திரிகைத் தாக்கல் செய்த நாளிலிருந்து இரண்டு மாதத்திற்குள்ளாக வழக்கு விசாரித்து முடித்து வைக்க வேண்டும், [விதி 14(2)].<br>வழக்கினை தினந்தோறும் |
| | | | நடத்துவதோடு அடுத்த நாளுக்கப்பால் வழக்கை ஒத்திவைத்தால் அதற்கான காரணத்தை எழுத்துப்பூர்வமாக<br>பதிவு செய்ய வேண்டும், [பிரிவு 14(3)].<br>பாதிக்கப்பட்டோர்/ சார்ந்தோர்/ சாட்சிகள்/ தகவல் தெரிவிப்போரின் பாதுகாப்பிற்காக பிரிவு 15-A(6)&(8)ல் கூறப்பட்டுள்ளவாறு நடவடிக்கைகள் மேற்கொள்ளுதல். |

## 5.3 பொறுப்புள்ள அதிகாரிகள்: இந்திய உச்ச நீதிமன்றம் ஆறுமுகம் சேர்வை *எதிர்* இந்திய யூனியன்

*ஆறுமுகம் சேர்வை எதிர் இந்திய யூனியன்வழக்கில் (2011இன் குற்றவியல் மேல்முறையீட்டு எண் 958)* இந்திய உச்சநீதிமன்றத்தின் தீர்ப்பு, சாதி முறையை கண்டனம் செய்வதோடு, சாதிய சக்திகளுக்கு கண்டனம் தெரிவித்தது முக்கியத்துவம் வாய்ந்தது. கடமை தவறிய மாவட்ட ஆட்சியர்கள்/ SP–க்களை இடைநீக்கம் செய்வது போன்ற அதிகாரிகளுக்கு எதிரான கடுமையான நடவடிக்கைகளை எடுக்குமாறு அது மாநில அரசுக்கு அறிவுறுத்தியது. அ) பட்டியல் சமூகத்தினருக்கு எதிரான வன்கொடுமைகளைத் தடுக்க மற்றும் ஆ) குற்றவாளிகளை கைது செய்து குற்றவியல் நடவடிக்கைகளை தொடங்குதல். மேலும் பட்டியல் சமூகத்தினருக்கு எதிராக தவறு செய்யும் அதிகாரிகள் ‘நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ’ அதற்கு பொறுப்பேற்க வேண்டும் என்பதையும் தெரிவித்தது.

## 5.4 கிஷன்பாய் வழக்கின் தீர்ப்பாணை

*குஜராத் மாநிலம் எதிர் கிஷன்பாய் என்ற குற்ற வழக்கு மேல்முறையீட்டு எண் 1485/2008 வழக்கில்* குற்றம் சாட்டப்பட்டவர் விடுவிக்கப்பட்டால் யாரை பொறுப்பாக்குவது என்பது கூறப்பட்டுள்ளது. குற்றம் சாட்டப்பட்டவர் குற்றவாளி என்றாலும், புலன் விசாரணை மற்றும் அரசு வழக்கறிஞரின் குறைபாட்டாலும், நெடிய நீதிமன்ற வழிமுறைகளாலும் விடுதலை செய்யப்படும்போது பாதிக்கப்பட்டவருக்கு கடுமையான அநீதி இழைக்கப்படுவதாக இந்திய நீதிமன்றம் சுட்டிக்காட்டியுள்ளது. அப்பாவியான ஒருவர் தவறாக குற்றம் சாட்டப்பட்டு வழக்கை எதிர்கொண்டால் அதற்கு புலனாய்வு மற்றும் குற்ற வழக்குத் தொடர்புத் துறை அதிகாரிகளே பழிக்கப்பட வேண்டியவர்கள். ஆகவே உச்சநீதிமன்றமானது தரமான புலனாய்வு மற்றும் குற்ற வழக்கு விசாரணைக்கான வழிமுறையை ஏற்படுத்த முடிவு செய்தது.

அது ‘அனைத்து விடுவிப்பு உத்தரவுகளையும் ஆராய்ந்து குற்ற வழக்கு தொடர்புத் துறையினர் ஒவ்வொரு வழக்கின் தோல்விக்கான காரணத்தையும் பதிவு செய்யப்பட வேண்டும்... குற்றம் சாட்டப்பட்டவரின் விடுதலைக்கு புலனாய்வு/ அரசு வழக்கறிஞர் கண்டிப்பாக அடையாளம் காணப்பட

வேண்டும்... தவறிழைத்த ஒவ்வொரு அதிகாரியும் தன் குறைபாட்டிற்கான விளைவுகளை பொருத்தமான துறை நடவடிக்கை மூலம் அனுபவிக்க வேண்டும்' என்பதற்காக அனைத்து மாநில உள்துறைக்கும் மூத்த காவல்துறை மற்றும் குற்ற வழக்கு தொடர்புத்துறை அதிகாரிகளைக் கொண்ட நிலைக் குழுவை அமைக்குமாறு அறிவுறுத்தியது.

உயர்மட்ட மதிப்பாய்வு குழுக்களை அமைக்குமாறு உத்தரவிட்ட பின்னரே தமிழக அரசாங்கம் அக்குழுக்களை அமைத்தது. 2012 முதல் 2014 வரை ஒவ்வொரு வருடமும் 70,000க்கும் மேற்பட்ட விடுவிப்புகள் இருந்ததை காரணம் காட்டி மாநில அளவில் ஒற்றை உயர்மட்டக் குழு அமைப்பது சாத்தியமற்றது என முறையிட்டது. ஆகவே, அவர்கள் மாவட்ட அளவிலான SP, ASP, உதவி இயக்குநர்/ துணை இயக்குநர் – குற்ற வழக்கு தொடர்புத் துறை ஆகியோர் அடங்கிய நிலைக்குழுவையும், நகரங்களுக்கு காவல் ஆணையாளர், துணை ஆணையாளர், உதவி இயக்குநர்/ துணை இயக்குநர் – குற்ற வழக்கு தொடர்பு துறை ஆகியோர் அடங்கிய நிலைக்குழுவையும் பரிந்துரைத்தனர். மாவட்ட/ நகர அளவிலான மதிப்பாய்வுகள் ஒவ்வொரு மாதமும் செய்யப்பட்டு, அறிக்கைகள் அரசாங்கத்திற்கு ஒவ்வொரு காலாண்டிலும் அனுப்பப்படும். அவர்கள் குற்றம் சாட்டப்பட்டவரின் விடுவிப்புக்கான பொறுப்புடைமையை புலனாய்வு அதிகாரியின் (இதில் DSP) மீதோ அல்லது சிறப்பு அரசு வழக்கறிஞர் (SPP) மீதோ சுமத்தப்படும். இச்சட்டத்தின் கீழ் நியமிக்கப்படும் அதிகாரிகள் சரியான திறன் வாய்ந்தவரா [விதி 13], அவர் தகுதி உள்ளவரா என்பதை அறிவது அவசியம். அவர்கள் தங்கள் கடமையை செய்யத் தவறினால் அவர்களின் துறை சார்ந்த மதிப்பாய்வு தடப்பதிவின் அடிப்படையில் அவர்கள் நீக்கப்படலாம் (நீக்கப்பட வேண்டும்). அவர்கள் நீக்கப்படாவிட்டால், இந்தத் தகவலைக் கொண்டு அரசாங்கத்தால் நியமிக்கப்பட்ட SPP-க்களை நிராகரிப்பதோடு [விதி 4(5)] விசாரணை அதிகாரியை மாற்ற வேண்டும் எனவும் கேட்கலாம்.

# பிரிவு II: குடிமக்கள் கண்காணிப்பு

## 6. தயாரிப்பு

சிறந்த முறையில் தயாராவதை வெற்றியடைவதற்காக மெனக்கெடுவதில் பாதியும், வெற்றியை நோக்கிய பயணத்தில் பாதிக்கும் மேற்பட்ட தூரமாகும்.

**இந்த அத்தியாயத்தில் நீங்கள் அறிந்து கொள்ள இருப்பவை:**

- தேவையும் சவால்களும்
- நாம் ஏன் இந்த சட்டத்தின் நடைமுறைப்படுத்தலைக் கண்காணிக்க வேண்டும் ?
- நாம் யாரை, எதனைக் கண்காணிக்க வேண்டும் ?
- பட்டியல் சமூகத்தினருக்கு எதிரான அனைத்து குற்றங்களுக்கும் இந்த சட்டத்தினை ஏன் பயன்படுத்தப்பட வேண்டும் ?

### 6.1 தேவையும் சவால்களும்

பாதிக்கப்பட்டவர்கள், புகார்தாரர்கள் மற்றும் சாட்சிகளின் கண்ணோட்டத்தோடு இந்தச் சட்டத்தைப் புரிந்துகொள்வதற்கான தேவை இருப்பதோடு உண்மையான குற்றவாளிகள் கைது செய்யப்பட்டனரா/ அவர்கள் மீது வழக்குத் தொடுக்கப்பட்டதா, பாதிக்கப்பட்ட பட்டியல் சமூகத்தினர், சாட்சிகள், அவர்களைச் சார்ந்தோர் மீது எதிர் புகார்கள் பதிவு செய்யப்பட்டுள்ளதா என அறியும் தேவை இருக்கிறது.

சட்டங்கள், விதிகள், ஒழுங்குமுறைகள், அரசாங்க உத்தரவுகள் மற்றும் பரிந்துரைக்கப்பட்ட நடைமுறைகள் (எதிர்பாரா நிலைக்கான திட்டங்கள்) ஆகியவற்றிற்கு இடையிலான வேறுபாடுகள் பற்றிய குறைவான புரிதல் ஒரு முட்டுக்கட்டையாகும். நிர்வாக உத்தரவுகளான ஒழுங்குமுறைகள் மற்றும் அரசாங்க உத்தரவுகள் எப்போதும் சட்டத்துக்கு இணங்காது. பாராளுமன்றத்தால் கொண்டுவரப்படும் திருத்தத்தால் சட்டத்தையும், மாநில சட்டமன்றங்களால் விதிகளையும் மாற்ற முடியும், ஆனால் அரசாங்க உத்தரவுகள் நிர்வாகத்துறையால் மாற்ற முடியும்.

சட்டத்தின் கூறுகள் பற்றிய போதிய விழிப்புணர்வு இல்லை. எடுத்துக்காட்டாக, விதி12(1)ன் படி, மாவட்ட நீதிபதியும் (ஆட்சியர்), மாவட்ட காவல் கண்காணிப்பாளர் இருவரும் வன்கொடுமை நிகழ்த்தப்பட்ட சம்பவ இடத்துக்கு நேரில் செல்ல வேண்டும் என்றும், புலன் விசாரணைக்குப் பின்னர் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் முதல் தகவல் அறிக்கையைத் தாக்கல் செய்ய வேண்டும் என விதி 12(1) தெளிவாகக் கூறுகிறது. எதிர்பாரா நிலைக்கான திட்டம் (தமிழக அரசாங்கத்தால் வரையப்பட்ட மற்றும் விதி 15(1)ன் படி மாவட்ட நீதிபதியும், மாவட்ட காவல் கண்காணிப்பாளரும் 24 மணி நேரத்துக்குள் சம்பவ இடத்திற்குச் செல்ல வேண்டுமென தெளிவாகப் பணிக்கிறது. மாவட்ட, மாநில விழிகண் மற்றும் கண்காணிப்புக் குழுக்கள் புலன் விசாரணை அதிகாரிகளின் (DSP) செயல்திறன் மதிப்பாய்வு மற்றும் சிறப்பு அரசு வழக்குரைஞர்கள் பற்றி வெகுசிலர் மற்றுமே அறிவார்கள். மிகக்குறைவான DAHRDக்கள் மட்டுமே இதற்கு அரசாங்கத்தை பொறுப்பாக்குகின்றனர்.

## 6.2 நாம் ஏன் இந்தச் சட்டத்தின் நடைமுறைப்படுத்தலைக் கண்காணிக்க வேண்டும் ?

சட்டத்தை நடைமுறைப்படுத்த வேண்டும் என்ற எண்ணமும் உறுதிப்பாடும் இருந்தால் மட்டுமே சட்டத்தின் நடைமுறைப்படுத்தல் பயனுள்ளதாக இருக்கும். தற்போது இருக்கும் சட்டங்களின் பட்டியல்களோடு வெறுமனே/ பெயரளவில் புதிய சட்டங்களைச் சேர்ப்பது பயன் தராது.

*உள்துறை அமைச்சர் ப. சிதம்பரம், மக்களவை,*
*30 ஆகஸ்டு 2010*

இந்தியாவில் சட்டங்களும் கொள்கைகளும் உள்ளன. தற்போதுள்ள சட்டங்களையும் வழிமுறைகளையும் திறம்பட நடைமுறைப்படுத்துவதே இந்தியாவின் தேவை. சாதி அடிப்படையிலான பாகுபாடு மற்றும் வன்முறையை (CBDV) ஒழிப்பதற்கான சட்டமான POA உலகின் துல்லியமான சட்டங்களில் ஒன்றாகும். எந்தெந்த தேதிகளில் (மாதத்தின் 20ஆம் நாள், ஜனவரி மற்றும் ஜூலை மாதங்களில் சந்திக்க வேண்டும்) எந்த அதிகாரி, அவரின் கடமைகள் மற்றும் தொகை எவ்வளவு என அனைத்தையும் துல்லியமாக வரையறுத்துள்ளது. வன்கொடுமையைத் தடுப்பதற்கான வழிமுறைகள் மற்றும் அதன் தரம், நீதி பரிபாலனை, கண்காணிப்பு, நிவாரணம் மற்றும் மறுவாழ்வு பற்றி விரிவாக இச்சட்டத்தில் கூறப்பட்டுள்ளது. இதில் மாநில [விதி 16(1)], மாவட்ட [விதி 17] அளவிலான கண்காணிப்பு வழிமுறைகள் உறுப்பினர்களின் சேர்மானம் [விதி

16(1), விதி 17(2)] பற்றியும் கால அளவுகள் – ஜனவரி மற்றும் ஜூலையில் SVMC-யும் [விதி 16(2)], காலாண்டிற்கு ஒருமுறை DVMCயும் [விதி 17(3)] பற்றியும் துல்லியமாகக் கூறப்பட்டுள்ளது.

ஆனால், இச்சட்டத்தை நடைமுறைப்படுத்த வேண்டிய ஒரே மாதிரியான சமூக தீய எண்ணத்தில் மூழ்கியுள்ள அதிகாரிகளுக்கு இது பற்றி சிறு ஊக்கம் கூட இல்லை. சட்டம் இயற்றுபவர்களும், ஆதிக்கம் செலுத்தும் பிரிவைச் சேர்ந்தவர்கள் என்பதாலும் மனசாட்சி உள்ள அதிகாரிகளை அச்சுறுத்தக்கூடிய ‘இடமாற்றம்’ என்ற வாளை ஏந்தியுள்ளதாலும் இச்சட்டத்தை நடைமுறைப்படுத்தக்கூடாது என்ற ஊக்கமும் அவர்களுக்கு இருக்கின்றது. குடிமக்களின் முயற்சியால் மட்டுமே இந்தச் சட்டம் நடைமுறைப்படுத்தப்படும். FIR பதிவு செய்ய போராட்டங்கள் இருந்தபோதிலும் இச்சட்டத்தை நடைமுறைப்படுத்துவதை கண்காணிக்கும் குடிமக்களின் பற்றாக்குறை ஒற்றை இலக்க தண்டனையை மட்டுமே பெற்றுத் தந்துள்ளது. வழக்கை அடுத்தடுத்த நிலைகளில் சிறிதளவே கண்காணிப்பது, இச்சட்டத்தை நடைமுறைப்படுத்தவேண்டிய பொறுப்புள்ள அதிகாரிகளை குறைவான அளவில் கண்காணிப்பதுமே மோசமான தண்டனை விகிதத்திற்குக் காரணமாகும்.

குடிமக்களாக நாம் அதிகாரிகள் அவர்களின் சட்டப்படியான கடமைகளை நிறைவேற்றச் செய்வது கடினம், ஆனால் முறையான தொடர்ச்சியான கண்காணிப்பின் மூலமாக அதிகாரிகள் செயல்படுவதில்லை என்பதை நீதிமன்றத்தாலும், நீதி பரிபாலன முறைகளாலும் புறந்தள்ள முடியாத அளவிலான சாட்சியங்களை உருவாக்க முடியும். முறையான கண்காணிப்பானது மாநில வழிமுறைகளுக்கும், குடிமைச் சமூகத்திற்கும் ஒரு மேம்பட்ட நடைமுறைப்படுத்தும் வடிவமைப்பை உருவாக்க உதவும்.

## 6.3 நாம் யாரை, எதை கண்காணிக்க வேண்டும் ?

DAHRD-க்கள் தனிப்பட்ட நிகழ்வுகளில் கவனம் செலுத்த வேண்டும். ஆனால் அது போதாது. தரவுகளைப் பகுப்பாய்வு செய்து வடிவங்களைக் கண்டறிவதற்கும், பொதுநல வழக்குகள் பதியவும், முன்மாதிரி வழக்குகளைக் கட்டமைக்கவும் தனிப்பட்ட வழக்குகளைத் தாண்டிச் செல்ல வேண்டிய தேவை உள்ளது. HRDக்கள் தனிப்பட்ட வன்கொடுமைகளிலிருந்து கட்டமைப்புத் தணிக்கை மற்றும் ஒன்றிணைக்கும் நோக்கோடு பயணப்பட வேண்டும்.

கீழ்வருவன கண்காணிக்கப்பட வேண்டும்:

- பாதிக்கப்பட்டோரும் அவர் சார்ந்தவர்களும் நிவாரணம் மற்றும் இழப்பீட்டை சரியான நேரத்திலும் விதிமுறைகளின்படியும் பெறுகின்றனரா,
- பாதிக்கப்பட்டோர், அவரைச் சார்ந்தவர்கள், துணைக்கு வருபவர்கள் புலன் விசாரணை மற்றும் வழக்கு விசாரணையின்போது பயணப்படி மற்றும் தினப்படி விதிமுறைகளின்படி பெறுகிறார்களா,
- அதிகாரிகள் குறிப்பிட்ட காலத்தில் தங்கள் கடமையைச் செய்கின்றார்களா (தடுப்பு நடவடிக்கை எடுப்பது, மாவட்ட நீதிபதி மற்றும் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் சம்பவ இடத்திற்கு வருகை புரிவது, முதல் தகவல் அறிக்கை பதிவு செய்வது, நோடல் அதிகாரிக்கு குறிப்பிட்ட காலத்தில் அனுப்ப வேண்டிய அறிக்கைகளை அனுப்ப வேண்டியது, குறிப்பிட்ட காலத்தில் நடத்த வேண்டிய கூட்டங்களை குறிப்பிட்ட காலத்தில் நடத்துவது, SPP மற்றும் DSP-க்கள் பற்றிய மதிப்பாய்வுகள் நடத்துவது மற்றும் பல).
- DVMC உறுப்பினர்கள் வழக்குகளின் நிலை குறித்து மதிப்பாய்வு செய்து நடந்துகொண்டிருக்கும் வழக்குகள் மற்றும் குற்றம் சாட்டப்பட்டோர் விடுவிக்கப்பட்ட வழக்குகளில் மேல்முறையீடு செய்வது தொடர்பாக உரிய நடவடிக்கை எடுக்கின்றனரா,
- அனைத்து ஜனவரி மற்றும் ஜூலை மாதத்தில் SVMC கூட்டப்பட்டு இச்சட்டத்தின் நடைமுறைப்படுத்தலையும், அதிகாரிகளின் செயல்பாடுகளையும் கண்காணிக்கின்றனரா.

இச்சட்டத்தை நடைமுறைப்படுத்துகின்ற கட்டளை அதிகாரிகள் கண்காணிக்கப்பட்டால்தான் அவர்களுக்கு தங்கள் கடமைகளை சரிவர நிறைவேற்ற வேண்டும் என்ற உத்வேகம் பிறக்கும். கட்டளை அதிகாரிகள் தங்கள் கடமையை நிறைவேற்றும்போதுதான் மற்ற அதிகாரிகள் தாங்கள்

செய்ய வேண்டிய வேலையை செய்யத் தொடங்குவர். சம்பந்தப்பட்ட அதிகாரிகளின் கடந்த கால செயல்பாடுகளை ஆராயும்போதுதான் அவர்கள் பட்டியல் சமூகத்தினரின் பிரச்சனைகள் குறித்த சரியான புரிதலும், தகுதியும் [விதி 13] உள்ளவர்தானா, பாதிப்புக்கு உள்ளாகக்கூடிய பகுதிகளில் பணியமர்த்தப்பட்டிருக்கிறாரா, அவருடைய முன்னனுபவம், விசாரணையை மேற்கொள்ளக்கூடியவரா அல்லது சிறப்பு அரசு வழக்குரைஞராக பணிபுரியலாமா என்பதை அறிய முடியும்.

### 6.4 பட்டியல் சமூகத்தினருக்கு எதிரான அனைத்து குற்றங்களுக்கும் இந்த சட்டத்தினை ஏன் பயன்படுத்தப்பட வேண்டும் ?

FIR பதிவதில் இருந்துதான் குற்றவியல் சட்ட நடைமுறை இயங்கத் தொடங்குகிறது. வன்கொடுமை தடுப்பை நீர்த்துப் போகச் செய்வது இந்த மட்டத்திலேயே தொடங்குகிறது. பெரும்பாலான நேரங்களில் காவல்துறையினர் தயக்கத்துடனேயே வழக்கைப் பதிவு செய்கின்றனர். எனினும், IPC விதிகளை மட்டும் முன்னெடுப்பதன் மூலமாகவும் வன்கொடுமைத் தடுப்பு விதிகளை வேண்டுமென்றே விட்டுவிடுவதன் மூலமாகவும் வழக்கை சேதப்படுத்துகின்றனர்/ நீர்த்துப்போகச் செய்கின்றனர். கீழ்கண்ட காரணங்களால் இது தவறானது. POA–ஐ பயன்படுத்துவதன் மூலமாக,

1. இரட்டிப்பு தண்டனை கிடைப்பதால் அதிகப்படியான பாதிப்பு
2. மாநில, தேசிய குற்ற வழக்கு ஆவணக் காப்பகத்தால் இவ்வகை வழக்குகளின் தரவுகள் பகுப்பாய்வு செய்யப்படுவதால் இத்தகைய வெறுப்புக் குற்றங்கள் பற்றிய தெளிவான நிலையைக் காண முடியும்.

ஆகவே, சரியான விதிகளைப் பயன்படுத்தாதது சாதி சார்ந்த வன்கொடுமைகளின் அளவையும், தீவிரத்தையும் மறைப்பதோடு, POA–ன் தனித்தன்மையை நீர்த்துப்போகச் செய்கிறது.

## 7. குடிமைச் சமூகம், தலித் மற்றும் ஆதிவாசி மனித உரிமை பாதுகாவலர்களின் பங்கு

### 7.1 குடிமைச் சமூக கண்காணிப்பின் தேவை

இந்தச் சட்டத்தின் 30ஆம் ஆண்டிலும் தண்டனை விகிதத்தில் அல்லது வன்கொடுமைத் தடுப்பில் குறிப்பிடத்தக்க முன்னேற்றம் ஏற்படவில்லை என்பதற்கான சான்றுகள் வெளிப்படுகின்றன. முன்பை விட மோசமாக பட்டியல்

சமூகங்களை அடக்குவதற்கு புதிய வன்முறை வடிவங்கள் கண்டுபிடிக்கப்படுகின்றன. சட்ட அமலாக்கம், கண்காணிப்பாளர்கள் மற்றும் சிறப்பு கண்காணிப்பாளர்கள் ஒரே மாதிரியான அலட்சியத்தை வெளிப்படுத்துகின்றனர். இந்த சட்டத்தின் கீழ் நியமிக்கப்பட்ட அதிகாரிகளுக்கு அவர்களது சகாக்களை விட அதிக சம்பளம் கொடுக்கப்படுகிறது என்பது கூடுதல் தகவல். குடிமைச் சமூகமும் மனித உரிமைப் பாதுகாவலர்களும் இச்சட்டத்தை முழுமையாகச் செயல்படுத்துவதில் ஈடுபடாவிட்டால் அரசும் அதன் வழிமுறைகளும் செயல்படாமலே இருக்கும் என்பது தெளிவாதத் தெரிகிறது.

நீதியின் சக்கரங்கள் மெதுவாக அரைக்கின்றன, ஆனால் அவை நன்றாக அரைக்கின்றன – அதற்கு சரியான கருவிகளும் பல கைகளும் தேவைப்படுகின்றன. தமிழ்நாட்டில் இந்தச் சட்டம் நடைமுறைப்படுத்தப்பட்ட தரவுகளைப் பார்த்தால், அரசாங்கத்தின் கருவிகளும் கைகளும் பலவீனமாக இருப்பது தெரிகிறது. இச்சட்டத்தை திறம்பட நடைமுறைப்படுத்துவதற்கு அரசாங்கம் தனது கடமையை நிறைவேற்றச் செய்வதை உறுதி செய்யக்கூடிய அதிகாரமுள்ள ஒரு குடிமைச் சமூகம் இருக்க வேண்டும்.

## 7.2 பங்குதாரர்களின் தொகுப்பு

பங்குதாரர்களின் தொகுப்பு சட்டத்தை சிறப்பாகச் செயல்படுத்த உதவுவதால் அது நீதியை சிறப்பாக நிர்வகிக்க உதவுகிறது. இந்தத் தொகுப்பு குறிப்பிட்ட பங்குதாரர்களைக் கொண்டதாக இருக்கலாம் – தப்பிப்பிழைத்தவர்கள் மன்றங்கள், வழக்கறிஞர்கள் மன்றங்கள், குடிமைச் சமூகம்/ DAHRD–க்களின் கூட்டமைப்பு – அல்லது பல்வேறு பங்குதாரர் தளங்களாகவும் இருக்கலாம். அவர்களின் முக்கிய நோக்கம் பரஸ்பர ஆதரவு, ஒற்றுமைக்கான அனுபவங்களைப் பகிர்வது மற்றும் கற்றல் ஆகும்.

## 7.3 பல்வேறு பங்குதாரர்களின் தளங்கள்

குறிப்பிட்ட பங்குதாரர் மன்றங்களுக்கும் கூடுதலாக, பல பங்குதாரர் தளங்கள் இந்த முயற்சியின் முக்கிய பகுதியாகும். ஆண்டுதோறும் வெவ்வேறு நிலைகளில் SMART யுக்திக்கான பல்வேறு செயல்பாட்டாளர்களின் வட்ட மேசை இருக்கும். இது அனுபவங்களைப் பகிர்வதையும் கற்றலையும் தவிர ஆதரவை விரிவுபடுத்துவதோடு கற்றலை பரந்த சமுதாயத்தில் உட்பொதிப்பதும் ஆகும். மற்றவர்களுடன் பேசுவதற்கான பழகிய சூழலுக்கு அப்பால் செல்ல முறையான முயற்சிகள் உள்ளன என்பதையும், சமூகத்தின் பிற பிரிவுகளிடையே குறைந்தபட்சம் அதிக வரவேற்பை பெறுவதையும் இது உறுதி செய்யும்.

## 8. குடிமைச் சமூக வழிமுறைகள்: குடிமக்கள் விழிகண் மற்றும் கண்காணிப்புக் குழு (CVMC)

குடிமக்கள் விழிகண் மற்றும் கண்காணிப்புக் குழுவானது மாநில, மாவட்ட அளவில் சட்டத்தை நடைமுறைப்படுத்துவதை கண்காணிப்பதோடு, கண்காணிப்பாளர்களையும் கண்காணிக்க ஏற்படுத்தப்பட்ட குடிமைச் சமூக வழிமுறையாகும். அவை SVMC, DVMC–யின் செயல்பாட்டை நிழலாகத் தொடரும்.

பட்டியல் சமூகத்தினர் அனைத்து உரிமைகளையும் பெற்ற குடிமக்களாக வாழ முடியும் என்பதையும், வளர்ச்சி மற்றும் முன்னேற்றத்தின் முழு பலன்களை அனுபவிப்பதையும் உறுதி செய்ய வேண்டியபோது அவை இணையாக செயல்படுகின்றன.

நமது சமுதாயத்தில் மிகவும் பாதிக்கப்படக்கூடியவர்களான – பட்டியல் சமூகத்தினரின் வாழ்க்கை, நபர் அல்லது சொத்து மீதான வழக்கமான, அவ்வப்போது, தொடர்ச்சியான தாக்குதல்கள் ஏற்கத்தக்கவை அல்ல – தமிழ்நாட்டிலும் இதைக் கடுகளவும் பொறுத்துக்கொள்ளக் கூடாது, உண்மையில் எந்தவொரு நாகரீக சமுதாயமும் இதை சகித்துக் கொள்ளாது.

### 8.1. நோக்கம்

CVMC-யின் நோக்கமானது, சாதி மற்றும் இன அடிப்படையிலான பாகுபாடு, வன்முறையை தலித்துகள் மற்றும் ஆதிவாசிகளின் பிரச்சனையாக மட்டும் முடக்காமல், அதைத் தீர்க்கும் பொறுப்பு தலித்துகள் மற்றும் ஆதிவாசிகளுக்கு மட்டுமே உள்ளது என்று எண்ணாமல், அதை ஒரு சட்டம் ஒழுங்கு பிரச்சனையாக மட்டுமே அணுகாமல், ஒட்டுமொத்த சமுதாயமாக இணைந்து இதற்கு பதிலளிக்க வேண்டும்.

### 8.2 சேர்மானம்

CVMC–க்கள் முதன்மையாக சமூக நீதிக்கு உறுதுணையாக, ஆனால் சுயாதீனமாக இருக்கும் தொழில் வல்லுநர்களைக் கொண்டிருக்கும். அவர்கள் தங்கள் துறைகளில் சிறந்து விளங்கியவர்களாக இருக்க வேண்டும், மேலும் கணிசமான சமூக மூலதனம் மற்றும்/ அல்லது அங்கீகாரம் பெற்றவர்களாக இருக்க வேண்டும். மனித உரிமை பாதுகாவலர்களும் ஒரு முக்கிய அங்கமாக இருப்பார்கள் என்றாலும், அவர்கள் இதன் மையமாக இருக்க மாட்டார்கள்.

CVMC-யின் கட்டமைப்பானது (ஒட்டுமொத்தமாக அல்லாத) **60** சதவீதம் பெண்கள், **60** சதவீதம் தொழில் வல்லுநர்கள், ஆண்கள் மற்றும் அல்லாத DAHRD–க்கள்

அதிகபட்சமாக 40 சதவீதமாக (ஒட்டுமொத்த அல்லாத) இருக்கும். அதிக தொழில் வல்லுநர்கள் மற்றும் புகழ்பெற்ற குடிமக்கள் தங்கள் கவலையை வெளிப்படுத்தினால், இந்த குற்றங்கள் விரைவாக நின்று போகும்.

### 8.3 CVMC–க்களின் பங்கு

மாநில வழிமுறைகள் மற்றும் சட்டம் திறம்பட நடைமுறைப்படுத்தப்படுகிறதா என்று, தன்னாட்சி பெற்ற குடிமக்களின் கண்காணிப்புக் குழு கண்காணிப்பதை மாநில மற்றும் மாவட்ட அளவில் உள்ள குடிமக்கள் விழிப்புணர்வு மற்றும் கண்காணிப்புக் குழுக்கள் உறுதிசெய்யும். அவர்களின் பங்கு, யுக்திகளை வகுப்பதும், பொதுவாக அனைவருக்கும், குறிப்பாக DAHRDக்களின் சமூக நீதி தொடர்பான ஈடுபாட்டினை விரிவுபடுத்துவதாகும்.

இவர்கள், வெளிப்படையாக சாதி மற்றும் இன ரீதியிலான பாகுபாடு மற்றும் வன்முறையை அங்கீகரிக்க மறுப்பதன் மூலம், சமூக அங்கீகாரம் பெறுவதற்காக இத்தகைய குற்றங்களை உயர்வானதாகவும், ‘கௌரவமானதாகவும்’ ‘கடமையாகவும்’, ‘பன்னெடுங்காலமாக கடைபிடிக்கப்படும் மரபாகவும்’ கருதுவது மாற்றியமைக்கப்படும்.

### 8.4 பணிகள் மற்றும் கால இடைவெளி

CVMC–யின் பங்கு, யுக்திகளை வகுப்பது, அதன் பணிகள் இதை பிரதிபலிக்கின்றன. மாவட்ட அளவில் காலாண்டு DVMC கூட்டங்கள் நடைபெறும்போதும், மாநில அளவில் அரையாண்டு SVMC கூட்டங்கள் நடைபெறும்போதும் அவர்கள் முன்னணியில் இருக்க வேண்டும்.

**CVMC–யின் முதன்மை பணிகள்:**

1. DAHRD–க்களின் அறிக்கைகள் மற்றும் கண்டறிதல்களை சரிபார்த்தல்.
2. முந்தைய செயல்களில் இருந்து என்ன கற்றுக்கொண்டோம் என்பதனை வரையறுத்தல்
3. பணியை தொடர்ந்து செய்வதற்கான ஆலோசனை வழங்குதல்.
4. சிறப்பான நடைமுறைப்படுத்துதலுக்காக மாநில வழிமுறைகளுடன் இணைந்து செயல்படுதல் (மாவட்ட வாரியாக, காலாண்டு).
5. கண்டறிந்தவைகளை பொது மக்களுக்கு வெளியிடுதல் (மாவட்ட வாரியாக, ஆண்டு).
6. மாநில/ மண்டல அளவிலான வருடாந்திர மாநாடுகளிலும் SMART–லும் கலந்து கொள்ளதல்.

7. DARHRD–களை ஆதரிப்பது மற்றும் பாதுகாப்பது.

8. DVMC கூட்டம் நடப்பதற்கு 2 முதல் 4 வாரங்களுக்கு முன்பாக மாவட்ட CVMC கூட்டத்தில் கலந்து கொள்ளுதல் (தோராயமாக 28 பிப்ரவரி, 31 மே, 30 ஆகஸ்ட், 30 நவம்பர்).
9. SVMC கூட்டம் நடப்பதற்கு முன்பாக, முன்னேற்றத்தின் அளவைக் கண்டறியவும், மாநில நடைமுறைகளோடு இணைந்து பணியாற்றவும், மாநில CVMC அரையாண்டிற்கு ஒருமுறை (டிசம்பர் 30 மற்றும் ஜூன் 30) கூடும்.

## 8.5. கட்டமைப்பு: மாநில குடிமக்கள் விழிப்புணர்வு மற்றும் கண்காணிப்புக் குழு (SCVMC)

| தலைப்பு | தகுதி/ அளவுகோல் | பதவிக்காலம் | முன்னுரிமை | பணிகள் |
|---|---|---|---|---|
| தலைவர்<br>(1 நபர்) | சமூக மூலதனம் கொண்ட மாண்புமிக்க குடிமக்கள் | 3 ஆண்டுகள் (அதிகபட்சமாக தொடர்ந்து 2 முறை; ஒருமுறை மறுதேர்வு செய்யப்பட்டவரை மீண்டும் தேர்வு செய்ய முடியாது, அதாவது, தொடர்ந்து 6 வருடங்களுக்கு மேல்) | பெண்கள்<br>ஓய்வு பெற்ற நீதிபதிகள் / மூத்த வழக்குரைஞர்கள்<br>பட்டியல் சாதிகள் மற்றும் பட்டியல் பழங்குடியினர் ஆணையம் / துறைகளில் பணிபுரிந்த அனுபவமுடைய அரசு ஊழியர்கள் | • மாநில அளவிலான பொது நடவடிக்கைகளுக்கு தலைமை தாங்குதல் (பொதுநல வழக்குகள், பத்திரிகையாளர் சந்திப்பு, இன்னும் பிற)<br>• ஊடகங்களுக்கு TASIR-ஐ வழங்குவதோடு வெகுஜனங்களை சென்றடைய உதவுதல்.<br>• சிறந்த நடைமுறைகளை மாநில அளவில் ஏற்றுக்கொள்ள கொள்கை வகுப்பாளர்களோடு இணைந்து செயலாற்றுதல். |
| பொதுச் செயலாளர்<br>(1 நபர்) | | 3 ஆண்டுகள் (அதிகபட்சம் தொடர்ந்து இருமுறை) | பெண்கள் | • மாநில செயலகத்தின் துணை கொண்டு SCVMC-ஐ பரிந்துரைக்கப்பட்ட வடிவில் கட்டமைத்தல்.<br>• மாநில செயலக அலுவலகத்துடன் இணைந்து SCVMC கூட்டத்திற்கான நிகழ்ச்சி நிரலைத் தயாரித்தல். |

| தலைப்பு | தகுதி/ அளவுகோல் | பதவிக்காலம் | முன்னுரிமை | பணிகள் |
| --- | --- | --- | --- | --- |
| | | | | • மாநில அளவிலான முயற்சிகள், பொது நடவடிக்கைகள் போன்றவற்றில் கலந்து கொள்ளுதல். |
| மாநில செயலகம் (3 நபர்கள்) | மனித உரிமை மேம்பாடு மற்றும் ஆராய்ச்சி அமைப்பு, (HRF) | 5 ஆண்டுகள் | | • அனைத்து மாவட்ட தலைமை செயல் அதிகாரிகளுக்கும் ஒருங்கிணைப்பு மற்றும் ஆதரவை வழங்குதல், கண்காணிப்பு நாட்காட்டியின்படி பணிகள் முடிவுற்றதை உறுதி செய்தல்.<br>• ஆண்டு நிலை அறிக்கை தயாரித்தல்.<br>• மாநில அளவிலான திட்டங்கள் மற்றும் செயல்பாடுகளுக்கான வளங்களை பெருக்குதல்.<br>• திட்டமிட்ட மாநில அளவிலான நிகழ்வுகளை நடத்துவதற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்தல்.<br>• மாநில மற்றும் மாவட்ட அளவிலான கூட்ட குறிப்பேடுகள், செயல்பாட்டு அறிக்கைகள், ஆதாரங்களை சேகரித்தல் போன்ற பதிவுகளை பராமரித்தல்.<br>• தகவல்தொடர்புக்கான ஒற்றை சாளரமாக செயல்படுதல் (மாநில |

| தலைப்பு | தகுதி/ அளவுகோல் | பதவிக்காலம் | முன்னுரிமை | பணிகள் |
|---|---|---|---|---|
| | | | | அளவில்). |
| ஆலோசனை குழு<br>(5 நபர்கள்) | | 5 ஆண்டுகள் | | • முன்னேற்றத்திற்காகவும் சிறப்பாக பணிபுரியவும் தேவையான நேரத்தில் தகுந்த ஆலோசனைகளை வழங்குதல். |
| தலைமை செயல் அதிகாரி அமைப்பு (அனைத்து தலைமை செயல் அதிகாரிகளும்) | திறன் மற்றும் தேவையைப் பொறுத்து சமூக நீதிக்கான உறுதிப்பாட்டு உடையவராக இருக்க வேண்டும். | | | • முன்னேற்றத்திற்காகவும் சிறப்பாக பணிபுரியவும் தேவையான நேரத்தில் தகுந்த ஆலோசனைகளை வழங்குதல்.<br>• எந்த நடவடிக்கைக்கு முக்கியத்துவம் கொடுக்க வேண்டுமென்று பரிந்துரைத்தல்.<br>• சிறப்பு அழைப்பாளர்கள், குறிப்பிட்ட துறையில் ஞானம் மற்றும் அனுபவம் உள்ளவர்கள், சகோதர அமைப்புகளின் தலைவர்கள், துறை சார்ந்த நிபுணத்துவம் பெற்றவர்களை ஒன்றிணைத்து அவர்களின் ஆலோசனைகள் மற்றும் யுக்திகளை பயன்படுத்துதல். |

## 8.6 மாவட்ட குடிமக்கள் விழிப்புணர்வு மற்றும் கண்காணிப்பு குழு (DCVMC)

| தலைப்பு | தகுதி | பதவிக்காலம் | முன்னுரிமை | பணி |
|---|---|---|---|---|
| தலைவர் (1 நபர்) | சமூக மூலதனம் கொண்ட மாண்புமிக்க குடிமக்கள் | 3 ஆண்டுகள் (அதிகபட்சமாக தொடர்ந்து 2 முறை; ஒருமுறை மறுதேர்வு செய்யப்பட்டவரை மீண்டும் தேர்வு செய்ய முடியாது, அதாவது, தொடர்ந்து 6 வருடங்களுக்கு மேல்) | பெண்கள் ஓய்வு பெற்ற நீதிபதிகள்/ மூத்த வழக்குரைஞர்கள் பட்டியல் சாதிகள் மற்றும் பட்டியல் பழங்குடியினர் ஆணையம் / துறைகளில் பணிபுரிந்த அனுபவமுடைய அரசு ஊழியர்கள் | • மாவட்ட அளவிலான பொது நடவடிக்கைகளுக்கு தலைமை தாங்குதல் (பொதுநல வழக்குகள், பத்திரிகையாளர் சந்திப்பு, இன்னும் பிற)<br>• ஊடகங்களுக்கு TASIR-ஐ வழங்குவதோடு வெகுஜனங்களை சென்றடைய உதவுதல்.<br>• சிறந்த நடைமுறைகளை மாநில அளவில் ஏற்றுக்கொள்ள கொள்கை வகுப்பாளர்களோடு இணைந்து செயலாற்றுதல். |
| பொதுச் செயலாளர் (5 நபர்) | மாவட்ட பொறுப்பு அலுவலகத்தின் தலைமை செயல் அதிகாரி | | பெண்கள் பட்டியல் சமூகத்தைச் சார்ந்த தலைமை செயல் அதிகாரி | • மாநில செயலகத்தின் துணை கொண்டு DCVMC-ஐ பரிந்துரைக்கப்பட்ட வடிவில் கட்டமைத்தல்.<br>• மாநில செயலக அலுவலகத்துடன் இணைந்து DCVMC கூட்டத்திற்கான நிகழ்ச்சி நிரலைத் தயாரித்தல்.<br>• DCVMC கூட்டத்தை நடத்துவது, அதற்கு தேவையான |

| தலைப்பு | தகுதி | பதவிக்காலம் | முன்னுரிமை | பணி |
|---|---|---|---|---|
| | | | | நடவடிக்கைகளை மேற்கொள்வது.<br>• DAHRD-க்களுக்கு உதவுவதோடு கண்காணிப்பு நாட்காட்டியின் படி வேலை முடிவுற்றதை உறுதி செய்தல். மாநில அளவிலான முயற்சிகளில் பங்கேற்பது.<br>• மண்டல அளவிலான பல்வேறு பங்குதாரர்களின் கூட்டங்களை நடத்துவது (சுழற்சி முறையில்).<br>• மாவட்ட அளவில் தேவைப்படும் நடவடிக்கைகளை முன்னெடுப்பது. |
| மாவட்ட செயலகம் (1) | தலைமை செயல் அதிகாரியின் அலுவலகம் (மாவட்ட பொறுப்பு) | | தலித் மற்றும் ஆதிவாசி உரிமைகளின் பாதுகாப்பு மற்றும் மேம்பாட்டிற்காக செயல்படும் அமைப்பு மாவட்ட அளவிலான மற்றும் செயலக பணிகளுக்கு தேவையான மனித வளங்களை வழங்க வல்லவர்.<br>மனித உரிமை | • மாநில செயலகத்திற்கு நேரடியாக பொறுப்பு.<br>• மாவட்ட அளவிலான திட்டங்கள் மற்றும் நடவடிக்கைகளுக்கான வளங்களை பெருக்குதல்.<br>• மாநில செயலகத்துடன் இணைந்து DCVMC-யைக் (50 சதவீதம் தலித் மற்றும் ஆதிவாசி சமூகத்தைச் சாராதவராக இருக்க வேண்டும்) கட்டமைத்தல்.<br>• DCVMC-நிகழ்ச்சி நிரல் மற்றும் கூட்டங்களின் குறிப்பேடுகளைத் தயாரித்தல். |

| தலைப்பு | தகுதி | பதவிக்காலம் | முன்னுரிமை | பணி |
|---|---|---|---|---|
| | | | அடிப்படையிலான அணுகுமுறையைக் கொண்டிருத்தல். | |
| | | | அடிப்படையிலான அணுகுமுறையைக் கொண்டிருத்தல் குழந்தை மற்றும் பெண்கள் பாதுகாப்புக் கொள்கைகளைப் பின்பற்றுபவர். மிக உயர்ந்த மனித உரிமைகள் மற்றும் நம்பகமான தரங்களைக் கடைபிடித்தல். | • மாவட்ட அளவிலான தொடர்பு.<br>• தகவல் அறியும் உரிமை சட்டத்தின் கீழ் மனுக்களை தாக்கல் செய்ய DAHRD- களுக்கு ஆதரவு.<br>• சேகரிக்கப்பட்ட அனைத்து தரவு, அறிக்கைகள் மற்றும் DCVMC கூட்ட குறிப்பேடுகளைப் பராமரித்தல்.<br>• மாவட்ட அளவிலான அறிக்கைகளைத் தொகுத்தல் மற்றும் மாநில செயலகத்திற்கு சரியான நேரத்தில் சமர்ப்பித்தல். |
| குடிமக்கள் குழு (12 நபர்கள்) | | பொருந்தாது | மாண்புமிகு குடிமக்கள். பெண்கள் | • மாநில மற்றும் கருத்தாளர்களுடன் தொடர்பு கொள்ளுதல். |

| தலைப்பு | தகுதி | பதவிக்காலம் | முன்னுரிமை | பணி |
|---|---|---|---|---|
| (மேற்கூறிய வற்றிற்கும் கூடுதலாக) | DAHRDs- 2 | பொருந்தாது | மாநில செயலகத்தால் குறிப்பிட்ட கால இடைவெளியில் நடத்தப்படும் பயிற்சிகளில் கலந்து கொள்பவர்கள். தகவல் அறியும் உரிமை சட்டத்தின் கீழ் தொடர்ச்சியாக மனுக்களை தாக்கல் செய்பவர்கள். | • கண்காணிப்பு நாட்காட்டியின் படி தகவல் அறியும் மனுக்களை தாக்கல் செய்ய வேண்டும்.<br>• சவால்கள் மற்றும் சிறந்த நடைமுறைகளை ஆவணப்படுத்த வேண்டும்.<br>• DCVMC கூட்டங்களின் அறிக்கைகளைத் தயாரிக்க வேண்டும். |
| | பட்டியல் சமூகத்தினரின் உரிமைகளுக்காக பணியாற்றும் வழக்கறிஞர்கள் – 2 | | மாவட்ட வழக்கறிஞர்கள் சங்கம் (பார் அசோசியேஷனின்) அலுவலக பொறுப்பாளர்கள். | • நீதிமன்ற நடைமுறைகளில் உள்ள இடைவெளிகளைக் கண்டறிய DCVMCக்கு உதவ வேண்டும்<br>• வன்கொடுமை தடுப்பு சட்டம் சம்பந்தமான பணி செய்ய, பார் அசோசியேஷனில் உள்ள மற்ற உறுப்பினர்களை ஊக்குவித்தல். |
| | மக்கள்/ பெண்கள் இயக்கங்கள் – 2 | | இயக்கங்களின் மூத்த பிரதிநிதிகள் | • உதவி தேவைப்படும் அடிப்படையிலான வெகுஜன மேம்பாட்டு திட்டங்கள். பொதுஜன செயல்பாடுகள். |
| | ஓய்வு பெற்ற அரசு | | பட்டியல் சாதிகள் அல்லது பட்டியல் | • DCVMC அரசாங்க வழிமுறைகளில் இடைவெளிகளையும் சிறந்த நடைமுறைகளையும் கண்டறிய |

| தலைப்பு | தகுதி | பதவிக்காலம் | முன்னுரிமை | பணி |
|---|---|---|---|---|
| | ஊழியர்கள்– 2 | | பழங்குடியினர் ஆணையம் அல்லது அது தொடர்பான துறைகளில் அனுபவம் | உதவுதல்.<br>• வன்கொடுமை தடுப்புச் சட்டத்தை சிறப்பாக நடைமுறைப்படுத்த அரசு ஊழியர்களுடன் இணைந்து செயல்படுதல். |
| | DCVMC உறுப்பினர்கள்– 2 | | தன்னார்வ தொண்டு நிறுவனங்கள் மற்றும் DVMC-யின் அதிகாரப்பூர்வமற்ற உறுப்பினர்கள் | • DCVMC முடிவுகளின் அடிப்படையில் DVMC உடன் இணைந்து செயல்படுதல் மற்றும் கண்காணித்தல். |
| | பத்திரிகையாளர் 2 | | பட்டியல் சமூகத்தினர் உரிமைகள் பற்றிய ஆழ்ந்த ஆழ்ந்த அறிவுள்ள கருத்தாளர் | • கற்றவைகள், கண்டறிந்தவைகள் மற்றும் பரிந்துரைகள் ஆகியவற்றை ஊடகத்தில் பரப்புவதற்கான உதவி.<br>• யுக்திகளை வெளிக்காட்ட ஆலோசனை அளித்தல். |
| | கல்வியாளர்கள் 2 | | பட்டியல் சமூகத்தினரின் உரிமைகளைப் பற்றிய அறிவு. ஆராய்ச்சி மற்றும் தொழில்நுட்ப ஆதரவை வழங்கக்கூடிய வல்லமை | • ஆராய்ச்சி மற்றும் தன்னார்வ ஆதரவை வழங்குதல்<br>• ஆதாரங்களின் அடிப்படையில் அறிக்கைகளைத் தயாரிக்க உதவுதல். கண்காணிப்பு கருவிகள் மற்றும் வழிமுறைகள் குறித்து மாணவர்களுக்குக் கற்பித்தல். |
| | பெண் பஞ்சாயத்து தலைவர்கள்–2 | | துணை DVMC யின் உறுப்பினர் | • DCVMC முடிவுகளின் அடிப்படையில் |
| | மாநில செயலகம்–1 | | பட்டியல் சமூகத்தைச் சேர்ந்த பஞ்சாயத்து | • வட்டார அளவிலான DVMC.யைக் கண்காணித்தல் மற்றும் இணைந்து |

| தலைப்பு | தகுதி | பதவிக்காலம் | முன்னுரிமை | பணி |
|---|---|---|---|---|
| | | | தலைவர் மாநில செயலகத்தின் மூத்த உறுப்பினர் | செயல்படுதல்.<br>• மாநில அளவிலான செயல்முறையை மேம்படுத்தி கூட்டு நடவடிக்கைகளுக்கு உதவுதல். |
| ஆலோசனை குழு | திறன், தேவையைப் பொறுத்து சமூக நீதிக்கான உறுதிப்பாட்டை வெளிப்படுத்திய வர்கள் | பொருந்தாது | | • முன்னேற்றத்திற்கும் சிறப்பான செயல்பாட்டிற்கும் சரியான நேரத்தில் பரிந்துரைகள் அளித்தல். |

## 9. பாதுகாவலர்களைப் பாதுகாத்தல்

### 9.1 யார் மனித உரிமை பாதுகாவலர் ?

எளிமையான வகையில் மனித உரிமைகளைப் பாதுகாப்பதற்கும் ஊக்குவிப்பதற்கும் செயல்படும் எவரையும் 'மனித உரிமை பாதுகாவலர்' (HRD) என்று அழைக்கலாம். 'செயல்பாட்டாளர்' என்ற பொதுவான சொல் இருந்தாலும் 'மனித உரிமை பாதுகாவலர்' என்ற பதம் 1998ல் ஐக்கிய நாடுகள் (ஐ.நா.) பொதுச் சபையால் கொண்டு வரப்பட்ட மனித உரிமை பாதுகாவலர்களுக்கான பிரகடனத்தில் சேர்க்கப்பட்டதிலிருந்து எல்லோராலும் பரவலாக ஏற்றுக்கொள்ளப்பட்டுவிட்டது.

HRDக்கள் பொதுவாக அரசாங்கத்தின் கொள்கைகள் மற்றும் சட்டங்களின் முற்போக்கான மாற்றத்தை அல்லது திறம்பட செயல்படுத்தலை ஆதரிக்கின்றனர். அவர்களின் சீர்திருத்தவாத அணுகுமுறை அவர்களின் உரிமைக் கோரல்களை அரசு அதிகாரிகளின் முன் வைக்கத் தூண்டுகிறது. பெரும்பாலும் அரசு அமைப்பின் வழிமுறைகளின் மூலம் HRD-க்கள் அரசு எந்திரங்களின் மிருகத்தனத்தையும் மனித உரிமை மீறல்களையும் அம்பலப்படுத்தி அதற்கு எதிராகப் போராடுவதால் அவர்கள் அரசாங்கத்தின் அடக்குமுறைக்கு இலக்காகின்றனர்.

HRD-க்கள் தனியாகவோ அல்லது சங்கமாகவோ அல்லது அமைப்பின் மூலமாகவோ செய்யும் வேலையை 'குடிமைச் சமூகம்' என பரவலாக வகைப்படுத்தலாம். குடிமைச் சமூக பங்கேற்பு பொதுவாக ஜனநாயக மயமாக்கலுடன் ஒப்பிடப்படுகிறது. ஜனநாயகம் தழைத்திருப்பதைப் பொறுத்தே குடிமைச் சமூகத்தின் உருவாக்கமும் செயல்பாடுகளும் இருக்கும். ஜனநாயகம் எவ்வளவு வலுவாக இருக்கிறதோ அதைப் பொறுத்தே குடிமைச் சமூகமும் வலுவானதாக இருக்கும் என கருதப்படுகிறது. அதன்படி இத்தகைய அமைப்புகளின் கொள்கைகளை முன்னேற்றும் விதமாக குடிமைச் சமூகங்களின் முக்கியத்துவத்தை ஐ.நா. சபை அங்கீகரிக்கிறது.

### 9.2 சர்வதேச தரநிலை

ஐ.நா. சிறப்பு அறிக்கையாளரான திரு. மைக்கேல் ஃபோர்ஸ்ட் டிசம்பர் 2018 மனித உரிமை பிரகடனத்தின் 20ஆம் ஆண்டைக் குறிக்கின்ற 'HRD-க்களின் நிலை குறித்த உலகளாவிய அறிக்கையில்' உலகம் முழுவதும் உள்ள HRD-க்களின் நிலை மோசமடைவதை' குறிப்பிடுகிறார். அதில் 'அதிக எண்ணிக்கையிலான நாடுகள் பிரகடனத்தில் கோடிடப்பட்டுள்ள உரிமைகளை அனுபவிப்பதைத் தடுப்பதற்கான தீவிரமான நடவடிக்கைகளை எடுத்து வருகிறது...... பொது வெளிகளை மூடுவது...... அதிகப்படியான இடங்களில் HRD-க்களுக்கு எதிரான போர் நடக்கிறது.

HRD-க்களின் பாதுகாப்பு தொடர்பான சர்வதேச மாநாடு ஏதும் இல்லை. எவ்வாறாயினும், 9 முக்கிய சர்வதேச மனித உரிமைகள் ஒப்பந்தங்களில் வழங்கப்பட்டுள்ள உரிமைகளின் வாயிலாக HRD-க்கள் பயனடையலாம். அரசு இந்த ஒப்பந்தங்களில் கையெழுத்திட்ட ஒரு உறுப்பு நாடாக இல்லாவிட்டாலும் கூட நீதிமன்றங்களில் மரபு சார்ந்த சர்வதேச மனித உரிமை சட்டங்களைப் பயன்படுத்துவதன் மூலமாக குறிப்பிட்ட அரசாங்கத்தை அதன் மனித உரிமை கடமைகளை நடைமுறைப்படுத்தச் சொல்லி அழுத்தம் கொடுக்கலாம். உதாரணமாக, சித்ரவதைக்கு எதிரான உடன்படிக்கையை இந்தியா அங்கீகரிக்கவில்லை. ஆனால் சித்ரவதைக்கு எதிரான தடை சர்வதேச சட்டத்தில் மரபுநிலையை அடைந்துள்ளதைக் காட்டி ஒருவர் தனது பிராந்தியத்தில் சித்ரவதைகளைத் தடை செய்ய வேண்டுமென்று வாதிடலாம்.

சர்வதேச மரபுகள் ஏதுமில்லை என்றாலும் HRD-க்களின் பாதுகாப்பைக் கையாளும் பின்வரும் பிரகடனங்களை ஐ.நா. ஏற்றுக்கொண்டுள்ளது.

- 9 டிசம்பர் 1998 அன்று ஐ.நா. பொதுச் சபையால் ஏற்றுக்கொள்ளப்பட்ட மனித உரிமைகள் பாதுகாவலர்கள் பற்றிய பிரகடனம் (A/RES/53/144),
- உலகளாவிய அளவில் அங்கீகரிக்கப்பட்ட மனித உரிமைகள் மற்றும் சுதந்திரங்களை ஊக்குவிப்பதற்கும் பாதுகாப்பதற்கும் தனிநபர்கள், குழுக்கள், சமூக உறுப்புகளின் உரிமை மற்றும் பொறுப்பு குறித்த பிரகடனத்தை ஊக்குவித்தல்: 18 டிசம்பர் 2013 அன்று பொதுச் சபையால் ஏற்றுக்கொள்ளப்பட்ட பெண் மனித உரிமை பாதுகாவலர்களைப் பாதுகாத்தல் (AS/RES/68/181).

அந்த அறிவிப்புகள் பல உரிமைகளுக்கு உத்தரவாதம் அளித்து HRD-க்களின் உரிமைகளைப் பாதுகாக்கும் கடமையை அரசாங்கங்களுக்கு விதித்தாலும் அவை கட்டாயத்தன்மை கொண்டவை அல்ல.

### 9.3 1998 பிரகடனத்தின்படி வழங்கப்பட்டுள்ள உரிமைகள் மற்றும் பாதுகாப்புகள்

பிரகடனத்தின் 1, 5, 6, 7, 8, 9, 11, 12 மற்றும் 13 ஆகிய ஷரத்துகள் மனித உரிமை பாதுகாவலர்களுக்கு உரிமைகள் உட்பட கீழ்குறிப்பிட்டுள்ள பாதுகாப்புகளை வழங்குகின்றன.

- தேசிய மற்றும் சர்வதேச அளவில் மனித உரிமைகளின் பாதுகாப்பையும் அங்கீகாரத்தையும் பெற;
- மனித உரிமைப் பணிகளை தனியாகவும், மற்றவர்களுடன் இணைந்து நடத்தவும்;

- சங்கங்கள் மற்றும் அரசு சாரா அமைப்புகளை உருவாக்குதல்;
- அமைதியாக சந்திக்க அல்லது ஒன்று கூடுவதற்கு;
- மனித உரிமை தொடர்பான தகவல்களைத் தேடுதல், பெறுதல், வைத்திருத்தல்;
- புதிய மனித உரிமை தொடர்பான யோசனைகள், கொள்கைகளை உருவாக்கி விவாதிப்பது மற்றும் அவற்றை ஏற்றுக்கொள்வதை ஆதரித்தல்;
- மனித உரிமைகள் கைகூடுவதைத் தடை செய்யும் விதமாக உள்ள அரசாங்கத்தின் வேலையைப் பற்றி கவனத்தைப் பெறவும், பொது விவகாரங்களில் தொடர்புடைய அரசாங்க அமைப்புகள், நிறுவனங்கள் மற்றும் முகவர்களின் செயல்பாட்டினை முன்னேற்றுவதற்கான திட்டங்களை அரசாங்கத்திடம் சமர்ப்பிக்கவும்;
- மனித உரிமைகள் தொடர்பான அதிகாரப்பூர்வ கொள்கைகள், செயல்கள் குறித்து புகார் அளித்தல் மற்றும் அத்தகைய புகார்களை மதிப்பாய்வு செய்தல்;
- தொழில்ரீதியாகத் தகுதி வாய்ந்த சட்ட உதவி அல்லது மனித உரிமைகளைப் பாதுகாப்பதற்கான பிற யோசனைகளையும் உதவிகளையும் வழங்குதல்;
- தேசிய சட்டங்கள், சர்வதேச மனித உரிமை சட்டங்கள் கடமைகளுக்கு இணங்குவதை மதிப்பிடுவதற்கான பொதுவிசாரணைகள், நடவடிக்கைகள் மற்றும் சோதனைகளிலும் கலந்து கொள்வது;
- அரசு சாரா மற்றும் சார்பு நிறுவனங்களைத் தடையின்றி அணுகுவதற்கும் தொடர்பு கொள்வதற்கும்;
- ஒரு ஆற்றல் மிக்க தீர்விலிருந்து பயனடைய;
- மனித உரிமை பாதுகாவலர்கள் தங்கள் தொழிலை சட்டப்பூர்வமாக செய்தற்கு;
- மனித உரிமைகள் மீறப்படுவதற்கு வழிவகுக்கும் அரசுக்கு எதிரான அமைதியான வழிமுறைகள், செயல்கள் அல்லது செய்ய வேண்டியதைச் செய்வதன் மூலம் தேசிய சட்டத்தின் கீழ் ஆற்றல் மிக்க பாதுகாப்பை ஏற்படுத்துதல்;
- மனித உரிமைகளைப் பாதுகாக்கும் நோக்கத்திற்காக (வெளிநாட்டிலிருந்து நிதி பெறுதல் உட்பட) நிதி திரட்டுதல், பெறுதல் மற்றும் பயன்படுத்துதல்.

### 9.4 1998 பிரகடனத்தின்படி நாடுகளுக்குள்ள கடமைகள்

பிரகடனத்தின் அனைத்து விதிகளையும் செயல்படுத்தவும், மதிக்கவும் அரசாங்கங்களுக்கு பொறுப்பு உள்ளது. இருப்பினும், ஷரத்துகள் 2, 9, 12, 14 மற்றும் 15 அரசுகளின் பங்கு என்ன என்பதைக் குறிப்பதோடு ஒவ்வொரு நாட்டிற்கும் கீழ்கண்ட பொறுப்பும் கடமையும் இருப்பதை குறிக்கிறது.

- அனைத்து மனித உரிமைகளையும் பாதுகாக்க, ஊக்குவிக்க மற்றும் செயல்படுத்த;

- அதன் அதிகார எல்லைக்குட்பட்ட அனைத்து நபர்களும் சமூக, பொருளாதார, அரசியல், பிற உரிமைகள் மற்றும் சுதந்திரங்களை நடைமுறையில் அனுபவிக்க முடியும் என்பதை உறுதிப்படுத்த;
- உரிமைகளையும் சுதந்திரங்களையும் திறம்பட செயல்படுத்துவதை உறுதிசெய்வதற்குத் தேவையான சட்டமன்ற, நிர்வாக மற்றும் பிற நடவடிக்கைகளை மேற்கொள்வது;
- மனித உரிமை மீறலுக்கு உள்ளானதாகக் கூறும் நபர்களுக்கு ஒரு சிறந்த தீர்வை வழங்குவது;
- மனித உரிமைகள் மீறப்பட்டதாகக் கூறப்பட்டபோது உடனடி மற்றும் ஒருசார்பற்ற விசாரணைகளை நடத்துவது;
- பிரகடனத்தில் குறிப்பிட்டுள்ள உரிமைகளை அவர் முறையாக பயன்படுத்துவதன் விளைவாக வன்முறை, அச்சுறுத்தல்கள், பதில் தாக்குதல்கள், பாகுபாடு, அழுத்தம் அல்லது வேறு ஏதேனும் தன்னிச்சையான நடவடிக்கைகளுக்கு எதிராக அனைவரின் பாதுகாப்பையும் உறுதி செய்வதற்குத் தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் எடுப்பது;
- குடிமையியல், அரசியல், பொருளாதார, சமூக மற்றும் கலாச்சார உரிமைகள் குறித்த பொதுவான புரிதலை ஊக்குவித்தல்;
- முறைமன்ற நடுவர் (ஓம்பட்ஸ்மன்) அல்லது மனித உரிமை ஆணையம் போன்ற மனித உரிமைகள் மேம்படுத்துவதற்கும், பாதுகாப்பதற்கும் சுயாதீனமான தேசிய நிறுவனங்களை உருவாக்குவதையும் உறுதிப்படுத்துதல் மற்றும் ஆதரித்தல்;
- முறையான கல்வி, தொழில்முறைப் பயிற்சினை அனைத்து மட்டங்களிலும் மனித உரிமைகளை கற்பிப்பதை ஊக்குவித்தல் மற்றும் எளிதாக்குதல்.

## 9.5 இந்திய சட்டமும் பயிற்சியும்

இந்தியாவை பற்றி 2018 உலக அறிக்கையில் HRD-க்கள் எதிர்கொள்ளும் துன்புறுத்தல், அபாயங்கள், அச்சுறுத்தல்கள் மற்றும் கொடூரங்கள் (குறிப்பாக அரசு இயந்திரங்களால்) கவலை தெரிவித்தது. அதிகரித்து வரும் மனித உரிமைகள் மற்றும் குடிமைச் சமூகத்தின் இடம் சுருங்கி வருவது போன்றவை அதன் முடிவுகளை வலுப்படுத்தும் விதமாக மேற்கோள் காட்டப்பட்டது.

ஒடுக்கப்பட்ட சமூகங்களின் நலனுக்காக உழைக்கும் HRD–க்கள் பாதிக்கப்படக்கூடிய நிலையை பின்வருமாறு அறிக்கையில் குறிப்பிட்டுள்ளது:

‘ஆதிவாசி (பழங்குடியினர்) மற்றும் ‘தலித்’ (தாழ்ந்த சாதி) போன்ற ஒடுக்கப்பட்ட சமூகத்தினரின் உரிமைகளுக்காக வாதிடுபவர்கள் சாதி அடிப்படையிலான பாகுபாடு, மரண அச்சுறுத்தல்கள், தவறான குற்றச்சாட்டுகள், உடல் ரீதியாக தாக்குதல்கள் மற்றும் சொத்துகளை அழித்தல்.... பெண்கள் பாதுகாவலர்கள் திராவக தாக்குதல்கள் மற்றும் கூட்டு வன்புணர்ச்சி போன்ற பாலின அச்சுறுத்தல்களுக்கு ஆளாகியுள்ளனர்’.

எனவே, மனித உரிமைகள் முன்னேற HRD—க்களின் பாதுகாப்பு மிக முக்கியமானது.

சர்வதேச மனித உரிமை ஒப்பந்தங்கள் பெரும்பாலானவற்றில் இந்தியா இருப்பினும், அது சித்ரவதைக்கு எதிரான மாநாட்டின் விருப்ப நெறிமுறை, மரண தண்டனையை ஒழிப்பதற்கான ICCPR-க்கு இரண்டாவது விருப்ப நெறிமுறை, புலம் பெயர்ந்த தொழிலாளர்கள் மற்றும் அவர்களது குடும்ப உறுப்பினர்களின் உரிமைகளை பாதுகாப்பதற்கான சர்வதேச மாநாடு ஆகியவற்றில் உறுப்பு நாடாக இல்லை. நபர்களை வலுக்கட்டாயமாக காணாமல் போகச் செய்வதிலிருந்து பாதுகாப்பதற்கான மாநாட்டில் இந்தியா கையெழுத்திட்டுள்ளது. ஆனால், அதற்கு இன்னும் ஒப்புதல் அளிக்கவில்லை. இந்தியா எந்தவொரு புகார் நடைமுறைகளையும், விசாரணை நடைமுறைகளையும் ஏற்கவில்லை.

HRD-க்களின் பாதுகாப்பை கையாளுவதற்கான குறிப்பிட்ட சட்டம் இந்தியாவில் இல்லை. மனித உரிமை பாதுகாவலர்களின் பாதுகாப்பு குறித்த தனிநபர் உறுப்பினர் M.P. ஜிதேந்தர் ரெட்டியின் மசோதா **28** டிசம்பர் **2018** அன்று முதல் மக்களவையில் நிலுவையில் உள்ளது. பேச்சு, கருத்து சுதந்திரம், அமைதியாக கூடுவது, இயக்கமாக சேர்வது மற்றும் கூட்டுறவு சுதந்திரம் ஆகியவற்றுக்கான உரிமைகளை இந்திய அரசு உறுதி செய்கிறது. பாலினம், இனம், சாதி மற்றும் வர்க்கம் உட்பட பல காரணங்களினால் பாகுபாடு காண்பதை அரசு தடை செய்துள்ளது.

### 9.6 DK பாசு வழிகாட்டுதல்கள்

பெரும்பாலும் மனித உரிமை பாதுகாவலர்களுக்கு எதிரான மனித உரிமை மீறல்களில் ஈடுபட்டவர்களில் பெரும்பாலும் தண்டிக்கப்படாமல் போவது காவல்துறை அதிகாரிகளே. தனிநபர்களை தடுத்து வைப்பதற்கும், கைது செய்வதற்கும், விசாரிப்பதற்குமான காவல்துறையின் அதிகாரமே மனித உரிமை பாதுகாவலகர்களின் அச்சுறுத்தல்கள் மற்றும் துன்புறுத்தல்களின் முக்கிய காரணம். காவல்துறை அதிகாரிகள் தங்கள் அதிகாரத்தை துஷ்பிரயோகம் செய்வதற்கு மேற்கூறிய அதிகாரங்கள் வழிவகுப்பதால் **1996** ஆம் ஆண்டில் *இந்திய உச்ச நீதிமன்றம் திரு D.K. பாசு, அசோக், K. ஜோஹ்ரி எதிர் மேற்கு வங்காள மாநிலம்,*

*உத்திரபிரதேச மாநிலம் வழக்கில் 18 டிசம்பர் 1996* அன்று சில வழிமுறைகளை வகுத்தது.

காவல்துறையினரின் அடக்குமுறைகளிலிருந்து தங்களைக் தற்காத்துக்கொள்ள இந்த வழிகாட்டுதல்களை மனித உரிமை ஆர்வலர்கள் அறிந்து கொள்வது அவசியம்.

- கைது செய்கின்ற அல்லது விசாரணை நடத்துகின்ற அதிகாரி தனது பெயர், பதவி ஆகியவை தெளிவாகத் தெரியும்படி அடையாள அட்டை பொருத்தியிருக்க வேண்டும். விசாரணை மேற்கொள்ளும் அனைத்து அதிகாரிகளைப் பற்றிய விபரங்களும் பதிவேட்டில் பதியப்பட வேண்டும்.
- கைது செய்கின்ற அதிகாரி, கைது செய்தவுடன் 'கைது குறிப்பு' ஒன்றினைத் தயாரிக்க வேண்டும். அதில் குறைந்தது ஒரு சாட்சியாவது கையெழுத்திட வேண்டும். அது அவரது நண்பராகவோ, அதே ஊரிலுள்ள சமூகத்தில் மதிப்பிற்குரிய நபராகவோ இருக்கலாம். கைது செய்யப்பட்ட நபரும் அதில் அடையாளக் கையொப்பமிட வேண்டும்.
- கைது குறிப்பில் கையெழுத்திடுகின்ற சாட்சியே நண்பர் அல்லது உறவினராக இல்லாதபோது, கைது செய்யப்பட்டு அல்லது போலீஸ் காவல், விசாரணை மையம் அல்லது வேறு வகையான அடைப்புக்குள் வைக்கப்பட்டிருக்கும் நபர், தான் கைது செய்யப்பட்டு, குறிப்பிட்ட இடத்தில் வைக்கப்பட்டிருக்கும் விவரத்தை கூடிய விரைவில் தனது உறவினர், நண்பர், அறிந்தவர் அல்லது தனது நலனில் அக்கறை கொள்ளக்கூடிய ஒருவருக்குத் தெரிவிக்க உரிமை உடையவராவார்.
- கைது செய்யப்பட்டவரின் உறவினர் அல்லது நண்பர் வேறு மாவட்டத்தில் இருந்தால் அங்குள்ள சட்ட உதவிக் கழகத்தின் மூலமாகவும், அங்குள்ள காவல் நிலையத்திற்குத் தொலை வரிச்செய்தி கொடுப்பதன் மூலமும், கைது செய்ததிலிருந்து 8 மணி நேரம் முதல் 12 மணி நேர அவகாசத்திற்குள், கைது செய்யப்பட்ட நேரம், இடம், காவலில் வைக்கப்பட்டுள்ள இடம் குறித்த விவரங்களைத் தெரிவிக்க வேண்டும்.
- ஒருவரைக் கைது செய்யும்பொழுது அல்லது காவலில் வைக்கும் பொழுது அது குறித்த தகவலைத் தான் விரும்பும் ஒருவருக்குத் தெரிவிக்க உரிமை உண்டு என்ற விவரத்தைக் கைது செய்யப்பட்டவருக்குத் தெரிவிக்க வேண்டும்.
- காவலில் வைக்கப்பட்டுள்ள இடத்தில், அதற்கென உள்ள பதிவேட்டில், கைதான விபரத்தையும், கைது குறித்து யாருக்குத் தெரிவிக்கப்பட்டது என்பதையும், கைது செய்யப்பட்டவர் எந்த அதிகாரிகளுடைய பொறுப்பில் இருக்கிறார் என்ற விவரங்களையும் குறிக்க வேண்டும்.

- கைது செய்யப்பட்டவர் வேண்டிக்கொண்டால், அவரைப் பரிசோதித்து, கைது செய்யப்பட்ட சமயத்தில் அவர் உடம்பில் சிறிய காயங்களோ பெரிய காயங்களோ இருந்தால் அவற்றைப் பற்றி அப்பொழுதே பதிவு செய்ய வேண்டும். 'சோதனை குறிப்பு' கைது செய்யப்பட்டவர் மற்றும் கைது செய்த அதிகாரி இருவராலும் கையெழுத்திடப்பட வேண்டும். கைது செய்யப்பட்டவருக்கு அதன் நகல் வழங்கப்பட வேண்டும்.
- கைது செய்யப்பட்டவர் காவலில் உள்ளபோது 48 மணி நேரத்திற்கு ஒருமுறை, அங்கீகரிக்கப்பட்ட மருத்துவரால் பரிசோதிக்கப்பட வேண்டும். மாநில சுகாதாரப் பணி இயக்குநர், அவ்வாறு அங்கீரிகப்பட்ட மருத்துவர்கள் குழுவை வட்ட, மாவட்ட அளவில் நியமிக்க வேண்டும்.
- கைது குறிப்பு உட்பட மேலே குறிப்பிட்ட ஆவணங்களின் நகல்களை, கோப்பிற்கென நிர்வாக நடுவருக்கு அனுப்பி வைக்க வேண்டும்.
- கைது செய்யப்பட்டவரை விசாரிக்கின்றபோது அவருக்கு அவரது வழக்கறிஞரை சந்திக்கின்ற வாய்ப்பு தரப்பட வேண்டும்.
- ஒருவரைக் கைது செய்து, காவலில் வைக்கின்றபோது அவரைக் கைது செய்த அதிகாரி கைது செய்த விவரம் மற்றும் காவலில் வைத்துள்ள இடம் குறித்து, கைது செய்ததிலிருந்து 12 மணி நேரத்திற்குள் மாவட்ட, மாநில தலைமை இடங்களில் உள்ள காவல் மைய அறைக்குத் தகவல் தெரிவிக்க வேண்டும். அவ்விவரங்கள் எல்லோருக்கும் தெரியும் வகையில் காவல் மைய அறை/ காவல் கட்டுப்பாட்டு அறையின் விளம்பரப் பலகையில் பார்வைக்கு வைக்கப்பட வேண்டும்.

## 10. பெண் மனித உரிமை பாதுகாவலர்களுக்கான உரிமைகள்

பெண் மனித உரிமை பாதுகாவலர்கள் (WHRD) HRD-க்களைப் போல ஆபத்துகளுக்கு உட்பட்டிருந்தாலும், அதற்கும் மேலாக ஒரு பெண்ணாக அவர்கள் சில குறிப்பிட்ட வகையான பாலின வன்முறைகளுக்கு உட்படுத்தப்படுகிறார்கள். 2010ல் வெளியிடப்பட்ட மனித உரிமை பாதுகாவலர்களின் நிலைமை குறித்த சிறப்பு அறிக்கையாளரின் அறிக்கையின் படி WHRD–க்கள் கூறியதாவது,

‘பெண் உரிமை பாதுகாவலர்கள் பாலியல் துன்புறுத்தல், பாலியல் வன்முறை மற்றும் பாலியல் வன்கொடுமைக்கு ஆளாக நேரிடும் அபாயத்தை எதிர்கொள்கின்றனர்.... பெரும்பான்மையான அச்சுறுத்தல்கள், மரண அச்சுறுத்தல்கள், உடல்ரீதியான தாக்குதல்கள், கொலைகள் மற்றும் கொலை முயற்சிகள் ஆகியவை அறியப்படாத அல்லது அடையாளம் தெரியாத நபர்களால் நிகழ்த்தப்படுகின்றன.... அதிக எண்ணிக்கையிலான வன்முறைகள் காவல்துறை அதிகாரிகள், ராணுவம், அரசு அதிகாரிகள் மற்றும் நீதித்துறையின் முகவர்கள் அல்லது மாநில பிரதிநிதிகளால் நிகழ்த்தப்படுகின்றன. இந்த வன்முறைகளில் கைது, தவறான நடத்தை, சித்ரவதை, குற்றமயமாக்கல், தவறான தண்டனை ஆகியவற்றோடு களங்கம் ஏற்படுத்துவது, அச்சுறுத்தல்கள், மரண அச்சுறுத்தல்கள், கொலைகள் ஆகியவையும் அடங்கும்.’

‘பெரும்பாலும் WHRD–க்களின் பணியானது சமூகத்தில் குடும்பம் மற்றும் பாலின பாத்திரங்களின் பாரம்பரிய கருத்துகளுக்கு சவால் விடுவதாகக் கருதப்படுகிறது. இது பொது மக்களுக்கும் அதிகாரிகளுக்கும் விரோதத்திற்கு வழிவகுக்கும்.’

### 10.1 WHRD உரிமைகள்

- சர்வதேச உரிமைகள், மசோதாவைத் தவிர மனித உரிமைகளைப் பாதுகாத்தல் மற்றும் மேம்படுத்துதல் உள்ளிட்ட பொது வாழ்க்கையில் பங்கேற்கும் பெண்களின் உரிமையை CEDAW அங்கீகரிக்கிறது. எடுத்துக்காட்டாக, CEDAWவின் ஷரத்து 7(c) ‘நாட்டின் அரசியல் மற்றும் பொதுவாழ்க்கையில்’ பெண்களுக்கு எதிரான பாகுபாட்டை அகற்ற அரசுகளைக் கட்டாயப்படுத்துகிறது.
- டிசம்பர் 1998 பிரகடனத்தில் கூறப்பட்டுள்ள உரிமைகள் WHRDக்களுக்கும் பொருந்தும். இருப்பினும், 2013 பிரகடனம் தான் WHRD-க்களின் உரிமைகளைக் கையாளும் குறிப்பிட்ட சர்வதேசக் கருவி.

2013 பிரகடனத்தின் கீழ் WHRD–க்களின் சில முக்கிய உரிமைகளும் அரசின் கடமைகளும்:

- தனித்தனியாகவும் மற்றவர்களுடன் இணைந்தும் பெண்களின் மனித உரிமைகளை அனைத்து அம்சங்களிலும் பாதுகாக்கும் உரிமை.
- சர்வதேச மனித உரிமை சட்டத்திற்கு இணங்க தேசிய சட்டங்களின்படி அமைதியான போராட்டங்களை நடத்துதல், இதனால் தன்னிச்சையாகக் கைது செய்யப்படுதல், தடுப்புக் காவல், சித்ரவதை, கொடூரமான இழிவான தண்டனைகள், கட்டாயமாகக் காணாமல் போகச் செய்தல், குற்றவியல் அல்லது குடிமை நடவடிக்கைகளை துஷ்பிரயோகம் செய்தல் அல்லது அச்சுறுத்தல்கள் ஆகியவற்றுக்கு ஆட்படாமல் இருத்தல்.
- தனித்தனியாகவும் மற்றவர்களுடன் இணைந்து செயல்படவும் சர்வதேச மனித உரிமை அமைப்புகளுடன் தடையின்றி அணுகுவதற்கும் தொடர்புகொள்வதற்கும் உரிமை.

## 10.2 WHRD-க்களைப் பொறுத்தமட்டில் அரசுகளுக்குள்ள கடமைகள்

- பெண் மனித உரிமை பாதுகாவலர்களுக்கு எதிரான அச்சுறுத்தல்கள், துன்புறுத்தல் மற்றும் வன்முறைகளைத் தடுப்பதற்கான நடவடிக்கைகள் உட்பட மனித உரிமை மீறல்கள், மனித உரிமை பாதுகாவலர்களுக்கு எதிரான துஷ்பிரயோகங்களைத் தடுப்பதில் உரிய முனைப்புடன் செயல்படுவது.
- பாலின அடிப்படையிலான வன்முறை உள்ளிட்ட துஷ்பிரயோகங்களுக்குப் பொறுப்பானவர்களை ஒருசார்பற்ற விசாரணையின் மூலம் நீதிக்கு முன் கொண்டு வரப்படுவதை உறுதி செய்வதன் மூலம் அத்தகையவர்கள் தண்டனையிலிருந்து விலக்கு பெறுவதை எதிர்த்துப் போராடுவது.
- பாலின சமத்துவத்தை மேம்படுத்துவதற்கும் பெண்களுக்கு அதிகாரம் அளிப்பதற்கும், அவர்களின் சுய செயல்பாட்டை ஊக்குவிப்பதற்கும், மனித உரிமைகளைப் பாதுகாப்பது உட்பட சமூகத்தில் அவர்களின் சமமான பங்களிப்பு, முழு ஈடுபாடு, தலைமைத்துவத்தை மேம்படுத்துவதற்கும் பாதுகாப்பதற்கும் சட்ட, கொள்கை மற்றும் பிற நடவடிக்கைகளை வலுப்படுத்தி செயல்படுத்துதல்.
- WHRD–க்களின் குடும்ப உறுப்பினர்கள், கூட்டாளிகள் உட்பட சர்வதேச நிறுவனங்களுடன் ஒத்துழைக்கும், ஒத்துழைத்துள்ள/ ஒத்துழைக்க விரும்பும் பெண் மனித உரிமை பாதுகாவலர்களுக்கு எதிரான அச்சுறுத்தல் அல்லது பழிவாங்கும் எந்தவொரு செயலிலிருந்தும் அவர்களுக்குப் போதுமான பாதுகாப்பை உறுதி செய்தல்.

- பெண் மனித உரிமைப் பாதுகாவலர்களைப் ஆதரிக்கும், பாதுகாக்கும் விரிவான நிலையான பாலின உணர்திறன் கொண்ட பொது கொள்கைகள் மற்றும் திட்டங்களை அபிவிருத்தி செய்தல்.
- பெண் மனித உரிமை பாதுகாவலர்களுக்கு ஆற்றல் மிக்க தீர்வுகளை அணுகுவதற்கான கொள்கைகள் மற்றும் திட்டங்களை ஏற்றுக்கொண்டு செயல்படுத்துதல்.
- மீறல்கள், துஷ்பிரயோகங்களுக்கான பொறுப்புணர்வைப் பெறுவதற்கான இடைக்கால நீதி செயல்முறைகள் உட்பட அனைத்து முயற்சிகளிலும் WHRD–க்களின் திறமையான பங்கேற்பு, மீண்டும் துஷ்பிரயோகங்கள் நிகழாது என்கிற உத்தரவாதம், பாலின அடிப்படையிலான மீறல்கள் மற்றும் அன்றாட வாழ்க்கையிலும், நிறுவனங்களிலும் துஷ்பிரயோகங்களின் மூல காரணங்களை முறியடிப்பதை உள்ளடக்கியது,
    - வன்முறைக்கு உள்ளான WHRD–க்களுக்கான விரிவான ஆதரவு சேவைகளும் போதுமான தங்குமிடம், உளவியல் சேவைகள், ஆலோசனை, மருத்துவப் பராமரிப்பு, சட்ட மற்றும் சமூக சேவைகள் உட்பட;
    - பாலியல் மற்றும் பிற வன்முறைகளுக்கு பலியான றுழசுனுக்களின் பாலின உணர்திறன் மற்றும் நிபுணத்துவத்துடன் போதுமான பயிற்சி பெற்ற பொருத்தமான பணியாளர்களால் அணுகப்படுவதோடு இந்த செயல்முறையின் ஒவ்வொரு கட்டத்திலும் அவர்களிடம் ஆலோசிக்கப்பட வேண்டும்.
    - தற்போதைய தீர்மானத்தின்படி WHRD–க்கள் முக்கியமான, நியாயமான பணியைச் செய்யும்போது வன்முறைகள் ஏற்படுவதைத் தடுப்பதன் மூலமோ அல்லது மீண்டும் நிகழாமல் தடுப்பதன் மூலமோ அவர்கள் வன்முறைச் சூழலைத் தடுக்க முடியும்.

## 10.3 இந்திய தரநிலை: அமலாக்க அதிகாரிகளில் கடமைகள்

அனைத்து உரிமை பாதுகாவலர்களுக்கும் பொதுவான தரங்களைத் தவிர குறிப்பாக கைது செய்யப்படும் காலங்களில் WHRD–க்களுக்கு இந்தியா சிறப்பு பாதுகாப்புகளை அளித்துள்ளது. அவை:

1. பெண்ணின் கண்ணியத்தைக் காப்பதற்காக ஒரு பெண் அதிகாரியைக் கொண்டே மற்றொரு பெண் சோதனையிடப்படுவார்.
2. ஒரு நீதிபதியின் முன் அனுமதியுடனேயே, விதிவிலக்கான சூழ்நிலைகளைத் தவிர, சூரிய அஸ்தமனத்திற்கு பிறகு, சூரிய உதயத்திற்கு முன்னர் எந்த பெண்ணும் கைது செய்யப்படுவதில்லை என்பதை உறுதிப்படுத்த வேண்டும் [CrPC–யின் பிரிவு 46(4)].
3. ஒரு பெண்ணை கைது செய்யும்போது, ஒரு பெண் காவல்துறை அதிகாரியின் உதவியோடு நடைமுறைக்கு உகந்த வகையில் கைது செய்யப்பட்டவரின் கண்ணியம், கௌரவம் காக்கப்படும் விதமாக கைது செய்யப்பட வேண்டும்.
4. சிறார் அல்லது குழந்தையை கைது செய்யும்போது எந்தவொரு சூழ்நிலையிலும் பலத்தையோ அல்லது வன்முறையையோ பிரயோகிப்பதில்லை என்பதை உறுதிப்படுத்த வேண்டும்.
5. 15 வயதுக்குட்பட்ட அல்லது 65 வயதுக்கு மேற்பட்ட ஆண் நபர் அல்லது ஒரு பெண் அல்லது மனநலம் குன்றியவர் அல்லது மாற்றுத்திறனாளி போன்றவர்கள் அவர்கள் வசிக்கும் இடத்தைத் தவிர வேறு எந்த இடத்திலும் விசாரணையில் கலந்து கொள்ள வேண்டியதில்லை [CrPC–யின் பிரிவு 160].

## 11. மனித உரிமை நிறுவனங்கள்

துன்புறுத்தல், பாகுபாடு அல்லது அச்சுறுத்தல்களை எதிர்கொள்ளும் HRD-க்கள் பொருத்தமான மனித உரிமை நிறுவனங்களின் முன் புகார் அளிக்கலாம். அவர்கள் அனைவரும் விஷயத்தின் கீழ் வரும் மனித உரிமை மீறல்களை விசாரிக்கவும், ஆராயவும் அதிகாரம் உண்டு. இருப்பினும் நடைமுறையில், நீதிபதி கிருஷ்ணய்யரின் அழியாத வார்த்தைகளில் சொல்வதானால், 'NHRC நாட்டின் மிகப்பெரிய தபால் அலுவலகம்'. அவர்கள் மாநில அரசாங்கங்களுக்கு புகார்களை அனுப்பி வைப்பதைவிட (அத்தகைய புகார்களின் மீது நடவடிக்கை எடுக்கலாமா வேண்டாமா என தேர்வு செய்யும் உரிமை மாநில அரசுகளிடமே இருக்கும்போது) மிகையாக எதைச் செய்ய முடியும்?. நேரடியாக நீதிமன்றங்கள் செல்வதன் மூலம் நேரத்தையும் சக்தியையும் மிச்சப்படுத்தலாம்.

### 11.1 தேசிய மனித உரிமை நிறுவனங்கள்

மனித உரிமைகளைப் பாதுகாக்கும், ஊக்குவிக்கும் நோக்கத்திற்காக பல மனித உரிமை நிறுவனங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

அரசியலமைப்பின் ஷரத்து 338 மற்றும் 338 A பிரிவுகள் முறையே பட்டியல் சாதியினருக்கான தேசிய ஆணையம் (NCSC), பட்டியல் பழங்குடியினருக்கான தேசிய ஆணையம் (NCST) ஆகியவற்றை நிறுவுவதற்கு வழிவகை செய்கிறது.

மனித உரிமைகள் பாதுகாப்பு சட்டம் 1993, மனித உரிமைகளை வரையறுப்பதோடு தேசிய மனித உரிமைகள் ஆணையம் (NHRC) மற்றும் மாநில மனித உரிமைகள் ஆணையம் (SHRC) ஆகியவற்றை உருவாக்கி, அதன் அதிகாரங்கள், செயல்பாடுகள், நடைமுறைகளை வகுக்கிறது.

1990ஆம் ஆண்டில் தேசிய பெண்கள் ஆணையம், தேசிய ஆணையச் சட்டத்தின் கீழ் நிறுவப்பட்டது.

சிறுபான்மையினருக்கான தேசிய ஆணையம் 1992ல் சிறுபான்மையினருக்கான தேசிய ஆணையச் சட்டத்தின் கீழ் நிறுவப்பட்டது. சிறுவர்கள் உரிமைகளைப் பாதுகாப்பதற்கான ஆணையம், 2005ல் குழந்தைகள் உரிமைகளைப் பாதுகாப்பதற்கான தேசிய ஆணையச் சட்டத்தின்கீழ் நிறுவப்பட்டது.

### 11.2 மாநில மனித உரிமை நிறுவனங்கள்

மேற்கூறிய தேசிய மனித உரிமை நிறுவனங்களுக்கு பிராந்திய/ மாநில அலுவலகங்க உள்ளன. எடுத்துக்காட்டாக NHRC தவிர மனித உரிமைகள் பாதுகாப்பு சட்டம் 1993 பிரிவு 21ன் கீழ் மாநில மனித உரிமைகள் ஆணையங்களை (SHRC) அமைப்பதற்கு மாநில அரசுக்கு அதிகாரங்களை வழங்குவதற்கு அதிகாரங்களை வழங்கியது. அதன்படி 1997ஆம் ஆண்டில் தமிழகம் 20.12.1996 தேதியிட்ட அரசாணை 1465, 1466 பொது (சட்டம் ஒழுங்கு - L&O) துறை மூலமாக அமைக்கப்பட்டது.

பட்டியல் II (மாநில பட்டியல் அதாவது எது தொடர்பான விஷயங்களில் மாநிலங்கள் சட்டங்களை இயற்ற முடியுமோ) மற்றும் 7ஆவது அட்டவணையில் பட்டியல் III (மைய மற்றும் மாநில அரசுகள் இரண்டும் சட்டம் இயற்ற பொருந்தக்கூடிய எந்தவொரு விஷயங்களும்) மட்டுமே மனித உரிமை மீறல்கள் குறித்து SHRC விசாரிக்க முடியும். NHRC-யின் அதிகாரங்களும் செயல்பாடுகளும் SHRC-க்கு சில மாற்றங்களுடன் பொருந்தும் [PHA சட்டம், 1993ன் பிரிவு 29].

### 11.3 தமிழ்நாட்டில் உள்ள பிற மனித உரிமை நிறுவனங்கள்:

தமிழக மாநில பெண்கள் ஆணையம், தமிழ்நாடு மாநில சிறுபான்மையினர் ஆணையம், குழந்தைகள் உரிமைகளைப் பாதுகாப்பதற்கான தமிழக மாநில ஆணையம் ஆகியவை அடங்கும்.

தமிழ்நாட்டில் உள்ள மனித உரிமை நிறுவனங்களின் முகவரி மற்றும் தொடர்புகள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன:

| வ.எண் | நிறுவனம் | முகவரி | தொடர்புக்கு |
|---|---|---|---|
| 1. | மாநில மனித உரிமைகள் ஆணையம் | திருவரங்கம்<br>143, P.S. குமாரசாமி ராஜா சாலை, (பசுமைவழிச் சாலை),<br>சென்னை – 600028 | இணைய முகவரி: http://www.shrc.tn.gov.in/ |
| 2. | மாநில மனித உரிமைகள் ஆணையம் | 2வது தளம், ப்ளாக் –5, சாஸ்திரி பவன், நுங்கம்பாக்கம், சென்னை – 600006 | தொலைபேசி: 044-28276430, 044-28312851<br>இணைய முகவரி: http://ncsc.nic.in/contactus |
| 3. | தமிழ்நாடு பெண்களுக்கான மாநில ஆணையம் | கலச மஹால், 1வது தளம், சேப்பாக்கம், சென்னை – 600005 | இணைய முகவரி: http://www.tnsocialwelfare.org/pages/view/tamil-nadu-state-commission-for-women |
| 4. | தமிழ்நாடு சிறுபான்மையினருக்கான மாநில ஆணையம் | 735, அண்ணா சாலை, LLA பில்டிங், மூன்றாம் தளம், சென்னை – 600002 | இணைய முகவரி: http://www.bcmbcmw.tn.gov.in/mincomm.htm |
| 5. | தமிழ்நாடு குழந்தை உரிமைகள் பாதுகாப்புக்கான மாநில ஆணையம் | 183/1, ஈவெரா பெரியார் சாலை, பூந்தமல்லி நெடுஞ்சாலை, கீழ்பாக்கம், சென்னை –600010 | தொலைபேசி:<br>044-2642 1359<br>044-2642 5082<br>044-2642 7022<br>இணைய முகவரி: https://www.ncpcr.gov.in/message.php?id=no&lang=1 |

இந்தியா முழுவதும் NCST-க்கு ஆறு பிராந்திய அலுவலகங்கள் உள்ளன. ஒடிஷாவின் புவனேஷ்வரில் உள்ள NCST பிராந்திய அலுவலகம் தமிழ்நாட்டிற்கும் பொறுப்பானதாகும்.

அச்சுறுத்தல்கள், துன்புறுத்தல் போன்றவற்றை எதிர்கொள்ளும் மனித உரிமை பாதுகாவலர்கள் இந்த மாநில மனித உரிமை நிறுவனங்களை தங்கள் பாதுகாப்பிற்காகவும், அவர்களின் குறைகளைத் தீர்ப்பதற்காகவும் அணுகலாம்.

## 12. வழக்கின் முக்கிய நிலைகள்

### இந்த அத்தியாயத்தில் நீங்கள் கற்றுக்கொள்ள இருப்பவை:

- வழக்கில் சம்பந்தப்பட்ட வெவ்வேறு நிலைகள்
- ஒவ்வொரு கட்டத்திற்கு பொறுப்பான அதிகாரிகள்
- ஒவ்வொரு கட்டத்திலும் பாதிக்கப்பட்டவர்களின் உரிமைகள்

### நிலை 1: வன்கொடுமை

24 மணி நேரத்துக்குள், மாவட்ட நீதிபதி (ஆட்சியர்), மற்றும் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் (SP) மற்றும் பிற அதிகாரிகள் வன்கொடுமை நடந்த இடத்திற்கு பார்வையிட கட்டாயம் செல்ல வேண்டும், (R 12(1); தமிழ்நாடு எதிர்பாரா நிலைக்கான திட்டம்)

பாதிக்கப்பட்டவர்கள்/ சார்ந்தவர்கள் மற்றும் சாட்சிகளுக்கு மருத்துவ உதவி, உணவு, உடை, தங்குமிடம் உள்ளிட்ட தேவையான பாதுகாப்பு, நிவாரணம் மற்றும் உதவிகளை அவர்கள் வழங்க வேண்டும் (S 15-A(1); R 11; தமிழ்நாடு எதிர்பாரா நிலைக்கான திட்டம்)

உயிரிழப்பு மற்றும் சொத்து சேதத்தை மதிப்பிட்ட பிறகு பாதிக்கப்பட்டவர்கள், அவர்களது குடும்ப உறுப்பினர்கள் மற்றும் நிவாரணத்திற்கு தகுதி உடையவர்களின் பட்டியல் தயாரிக்கப்பட வேண்டும். (R 12(1))

தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள், சமூக ஆர்வலர்கள் அல்லது வழக்கறிஞர்களின் உதவியைப் பெற பாதிக்கப்பட்டவர்களுக்கும் அவர்களைச் சார்ந்தவர்களுக்கும் உரிமை உண்டு (S 15-A (12))

### நிலை 2: FIR

எந்தவொரு ஆரம்ப விசாரணையும் (S 18-A) நடத்தாமல் நடத்தாமல் FIR பதிவு செய்யப்பட வேண்டும். வன்கொடுமை நடந்த இடத்திற்கு வருவது மாவட்ட காவல் கண்காணிப்பாளரின் பொறுப்பாகும். (R 12 (1); தமிழ்நாடு எதிர்பாரா நிலைக்கான திட்டம்). பாதிக்கப்பட்டவர்கள், சாட்சிகள், குற்றவாளிகளை அடையாளம் காணவும், சேதத்தின் அளவை மதிப்பிடவும் FIR பதிவு செய்யப்பட்டுள்ளதா என்பதை உறுதிப்படுத்தவும், குற்றம் சாட்டப்பட்டவர்களை கைது செய்வதற்கு தேவையான

நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றனவா என்பதை உறுதி செய்ய வேண்டும் (R 12(2)).

FIR பதிவு செய்யப்பட்ட உடனேயே, பாதிக்கப்பட்டவர்களுக்கு FIR-ன் நகலை இலவசமாக வழங்குவது, பாதிக்கப்பட்டவர்களுக்கு அவர்களின் உரிமைகளை தெரிவிப்பது, ஆய்வாளர்/ துணை ஆய்வாளரின் பொறுப்பாகும் (R 5 (2); தமிழ்நாடு எதிர்பாரா நிலைக்கான திட்டம்)

FIR பதிவு செய்யப்பட்டவுடன், பாதிக்கப்பட்டவர்களுக்கு POA-வில் குறிப்பிட்டுள்ளபடி குறிப்பிட்ட அளவு இழப்பீடு வழங்கப்படும் (R12(4) r/w இணைப்பு அட்டவணை 1)

**நிலை 3: புலன் விசாரணை**

ஒவ்வொரு வழக்கிற்கும் மாநில அரசு/ காவல்துறை இயக்குநர்/ மாவட்ட காவல் கண்காணிப்பாளர் நியமித்த குறைந்தபட்சம் துணை காவல் கண்காணிப்பாளர் தரவரிசை அதிகாரியால் வன்கொடுமை வழக்குகள் விசாரிக்கப்பட வேண்டும் (பொதுவாக DSP) (விதி 7).

பாதிக்கப்பட்டவர்களுக்கு தேதிகள், இடங்கள், விசாரணையின் நிலை ஆகியவை தெரிவிக்கப்பட வேண்டும் (தமிழ்நாடு எதிர்பாரா நிலைக்கான திட்டம்)

முன்னுரிமை கொடுத்து விசாரணையை முடித்த பின்னர், FIR தாக்கல் செய்த நாளிலிருந்து 60 நாட்களுக்குள் சிறப்பு நீதிமன்றத்தில் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட வேண்டும் (விதி 7 (2)). விசாரணை அல்லது குற்றப்பத்திரிகை தாக்கல் செய்வதில் ஏதேனும் தாமதம் ஏற்பட்டால் விசாரணை அதிகாரி அதற்கான காரணத்தை எழுத்துப்பூர்வமாக தெரிவிக்க வேண்டும். (விதி 7(2-A)). குற்றப்பத்திரிகையின் நகலை பாதிக்கப்பட்டவர்களுக்கு இலவசமாக வழங்க வேண்டும் (தமிழ்நாடு எதிர்பாரா நிலைக்கான திட்டம்)

குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டவுடன் பாதிக்கப்பட்டவர்களுக்கு POA-வில் குறிப்பிட்டுள்ளபடி குறிப்பிட்ட அளவு இழப்பீடு வழங்கப்பட வேண்டும் (விதி 12 (4) r/w இணைப்பு அட்டவணை 1)

**நிலை 4: வழக்கு விசாரணை**

POAயின் கீழ் வழக்கு விசாரணை சிறப்பு அரசு வழக்கறிஞர்/ பிரத்யேக சிறப்பு அரசு வழக்கறிஞரால் (SPP/ESPP) நடத்தப்படுகிறது. அவர் வழக்கறிஞர்களில் குறைந்தது 7 ஆண்டுகள் அனுபவம் கொண்டவராக அல்லது பாதிக்கப்பட்டவர்கள் விரும்பும் வழக்கறிஞராக இருக்க வேண்டும் (விதி 4(5)). அவர் மாநில அரசால் நியமிக்கப்பட வேண்டும்.

வழக்கு விசாரணை காலம் முழுவதும் பாதிக்கப்பட்டவர்களுக்கு சட்ட உதவி வழங்குவது மாவட்ட ஆட்சியர்/ குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யும் அதிகாரி/ விசாரணை அதிகாரியின் பொறுப்பு (தமிழ்நாடு எதிர்பாரா நிலைக்கான திட்டம்)

பாதிக்கப்பட்டவர்கள், சாட்சிகள், சார்ந்தவர்கள் பயணப்படி, தினசரி படி, பராமரிப்பு மற்றும் உணவு பராமரிப்பு மற்றும் உணவுச் செலவுகள் ஆகியவற்றை புலன் விசாரணை, விசாரணை மற்றும் வழக்கு விசாரணையின்போது பெற உரிமை உண்டு. இதை அவர்கள் மூன்று நாட்களுக்குள் பெற வேண்டும் (விதி 11 (6)).

**நிலை 5: தீர்ப்பு**

நீதிமன்ற விசாரணையின் முடிவில் சிறப்பு நீதிமன்றத்தால் நீதி வழங்கப்படுகிறது.

POA-யின் கீழுள்ள வழங்குகள் முடிந்தவரை இரண்டு மாதங்களுக்குள் முடிக்கப்பட வேண்டும். தேவையற்ற ஒத்திவைப்புகள் இருக்கக்கூடாது. அனைத்து சாட்சிகளும் விசாரிக்கப்படும்வரை தொடர்ந்து ஒவ்வொரு நாளும் விசாரணை நடத்தப்பட வேண்டும். அடுத்த நாளுக்கப்பால் தள்ளிவைக்கப்படும் எந்த ஒரு ஒத்திவைப்புக்கான காரணத்தையும் சிறப்பு நீதிமன்ற நீதிபதி எழுத்துப்பூர்வமாக பதிவு செய்ய வேண்டும் (சட்ட பிரிவு 14 (3)).

குற்றம் சாட்டப்பட்டவரின் பிணை, வழக்கு தள்ளுபடி, விடுதலை, பரோல், தண்டனை அல்லது தண்டனை நிறைவேற்றம் தொடர்பாக பாதிக்கப்பட்டவர்களிடமும், சார்ந்திருப்பர்களிடமும் கேட்கப்பட வேண்டும் (சட்ட பிரிவு 15-A (5)).

சாட்சிகளை மிரட்டுவது மற்றும் துன்புறுத்தல் (தமிழ்நாடு எதிர்பாரா நிலைக்கான திட்டம்) ஆகியவற்றிலிருந்து பாதுகாப்பது மாவட்ட ஆட்சியர்கள்/ மாவட்ட காவல் கண்காணிப்பாளர்/ நகர காவல் ஆணையாளர்களின் பொறுப்பு. இது போன்ற ஏதேனும் துன்புறுத்தல்களை அவர்கள் எதிர்கொண்டால் சிறப்பு நீதிமன்றத்தில்

அவர்கள் புகார் அளிக்க முடியும், அது அவர்களுக்கு பாதுகாப்பான உத்தரவுகளை பிறப்பிக்கும் (சட்ட பிரிவு 15-A (8)).

விசாரணையின் முடிவில் குற்றம் சாட்டப்பட்டவர் தண்டிக்கப்படும்போது அல்லது சில சந்தர்ப்பங்களில் பாதிக்கப்பட்டவர்களுக்கு POA-வில் குறிப்பிட்டுள்ளபடி குறிப்பிட்ட அளவு இழப்பீடு வழங்கப்படும் (விதி 12 (4) r/w இணைப்பு அட்டவணை **1)**

**நிலை 6: மேல்முறையீடு**

சிறப்பு நீதிமன்றத்தின் தீர்ப்பை எதிர்த்து மேல்முறையீடு உயர்நீதிமன்றத்தின் முன் செய்யப்படுகிறது. உண்மைகள் மற்றும் சட்டங்கள் தொடர்பான இரண்டு விஷயங்களுக்கும் மேல்முறையீடு செய்யலாம்.

விடுவிப்புக்கு எதிரான மேல்முறையீடு மாநில அரசு அல்லது பாதிக்கப்பட்டவரால் செய்யப்படலாம். சிறப்பு நீதிமன்றம் பிறப்பித்த உத்தரவுக்கு எதிராக மேல்முறையீடு செய்ய பாதிக்கப்பட்டவர்களுக்கு முழு உரிமை உண்டு அல்லது குறைவான குற்றங்களுக்கு தண்டனை வழங்கப்படும்போதும் மேல்முறையீடு செய்யலாம். *(CrPC பிரிவு 372; குற்ற வழக்கு மேல்முறையீடு 1281-82 of 2018 மல்லிகார்ஜுன் கோடகலி எதிர் கர்நாடக மாநிலம் மற்றும் பிறர் வழக்கில்).* இந்த முறையீடுகள் மூன்று மாதங்களுக்குள் முடித்து வைக்கப்பட வேண்டும்.

பாதிக்கப்பட்டவர்களுக்கு மேல்முறையீடு கட்டத்திலும் POA-யின் கீழ் உரிமைகள் உண்டு.

தண்டனை பெற்றவர்கள் தண்டனைக்கு எதிராக மேல்முறையீடு செய்வார்கள். குற்றச்சாட்டுகள் முறியடிக்கப்படாமல் இருப்பதை உறுதி செய்வதற்கு வலுவான பதில் இருப்பதை நாம் உறுதிப்படுத்த வேண்டும். அரசு தரப்பில் விடுவிக்கப்பட்ட வழக்குகளில் முறையீடுகள் ஏதும் செய்யப்படவில்லை என்று மாநில ஆண்டு அறிக்கைகளிலிருந்து கண்டறியப்பட்டுள்ளது. ஆனால் தண்டனைக்கு எதிரான மேல்முறையீடுகளுக்கான தரவு வழங்கப்படவில்லை.

**நிலை 7: சிறை**

சாதி அடிப்படையிலான குற்றங்கள் அதிக உணர்ச்சிப்பூர்வமானதாக இருப்பதால் குற்றவாளிகள், அவர்களது குடும்பத்தினர் அல்லது சாதியைச் சேர்ந்தோர் பாதிக்கப்பட்டவர்களுக்கும், தப்பிப்பிழைத்தவர்களுக்கும் தனித்தனியாக அல்லது கூட்டாக கூடுதல் தீங்கு விளைவிக்க முடியாத காலம் வரை சிறைக்குப் பின்னால்

வைக்கப்படுவது முக்கியம். ஆகவே சிறை என்பது, திருந்துவதற்கான சந்தர்ப்பமும், வாழ்க்கையை மீண்டும் கட்டமைக்கவும், மொத்த சமுதாயத்திற்கும் பாதுகாப்பை உறுதி செய்வதற்குமாகும். பல வருட சிறை வாசத்திற்குப் பின்னரும் பழி தீர்க்க வேண்டும் என்ற எண்ணம் கூடுதலாக இருப்பதும், தான் உயர்ந்தவன் என்கிற எண்ணம் உட்பதிந்து இருப்பதால் 'பதிலடி' (உனக்கு எவ்வளவு தைரியம் இருந்தால் நீங்கள் புகார் செய்து என்னை சிறைக்கு அனுப்பலாம், என்னுடைய சாதியின் வலிமை என்னவென்று காட்டுகிறேன்) தருவதற்கான சந்தர்ப்பங்களும் உண்மை. ஆகவே, தப்பிப்பிழைத்தவர்களுக்கு கீழ்கண்ட உரிமைகள் உண்டு.

1. குற்றவாளிகளின் தண்டனை குறைப்பு அல்லது பரோல் அல்லது பிணை விசாரணையின்போது, பாதிக்கப்பட்டவர்கள்/ சாட்சிகளின் கருத்துகளையும் கேட்டறிந்த பின்னரே முடிவெடுக்க வேண்டும் (பிரிவு 15-A (5))
2. பரோலுக்கு முன்னர் தகவல் தெரிவிக்கப்பட்டு அதை எதிர்த்து தங்கள் வாதத்தை வைப்பதற்கான வாய்ப்பு வழங்கப்பட வேண்டும் (பிரிவு 15-A (5))

## 13. சொற்குறியீடு மற்றும் சொற்களஞ்சியம்

| | | |
|---|---|---|
| Additional Director General of Police (ADGP) | - | கூடுதல் காவல் துறை இயக்குநர் |
| Advisory Committee | - | ஆலோசனைக் குழு |
| Annual Report (AR) | - | ஆண்டு அறிக்கை |
| Annual Status Report | - | ஆண்டு நிலை அறிக்கை |
| Assistant Commissioner | - | உதவி காவல் ஆணையர் |
| Atrocity  Prone Area | - | பாதிப்புக்கு உள்ளாகக்கூடிய இடங்கள் |
| Block Development Officer | - | வட்டார வளர்ச்சி அதிகாரி |
| Caste Based Discrimination and Violence (CBDV) | - | சாதி அடிப்படையிலான பாகுபாடு மற்றும் வன்முறை |
| Charge Sheet | - | குற்றப்பத்திரிகை |
| Chief Executive Officer (CEO) | - | தலைமைச் செயல் அதிகாரி |
| Citizens Vigilance and Monitoring Committee (CVMC) | - | குடிமக்கள் விழிகண் மற்றும் கண்காணிப்பு குழு |
| Code of Criminal Procedure (CrPC) | - | குற்றவியல் நடைமுறைச் சட்டம் |
| Contingency Plan | - | எதிர்பாரா நிலைக்கான திட்டம் |
| Convention on the Elimination of All Forms of Discrimination Against Women (CEDAW) | - | பெண்களுக்கு எதிரான அனைத்து வகையான பாகுபாடுகளையும் அகற்றுவதற்கான மாநாடு |
| Dalit and Adivasi Human Rights Defender (DAHRD) | - | தலித் மற்றும் ஆதிவாசி மனித உரிமைகள் பாதுகாவலர்கள் |
| Deputy Inspector General of Police (DIG) | - | துணை காவல் துறை தலைவர் |
| Deputy Superintendent of Police (DSP) | - | துணை காவல் கண்காணிப்பாளர் |
| Directive Principles of State Policy (DPSP) | - | மாநில கொள்கையின் வழிநடத்தும் கோட்பாடுகள் |
| Director General of Police (DGP) | - | காவல்துறை இயக்குநர் |
| Director of Public Prosecution (DPP) | - | குற்ற வழக்கு தொடர்பு துறை இயக்குநர் |
| Directorate of Prosecution (DoP) | - | குற்ற வழக்கு தொடர்புத்துறை இயக்குநர் |

| | | |
|---|---|---|
| District Collector | - | மாவட்ட ஆட்சியர் |
| District level Vigilance and Monitoring Committee (DVMC) | - | மாவட்ட விழிகண் மற்றும் கண்காணிப்புக் குழு |
| District Level Vigilance and Monitoring Committee (DVMC) | - | மாவட்ட விழிகண் மற்றும் கண்காணிப்புக் குழு |
| District Magistrate (District Collector) | - | மாவட்ட நீதிபதி (மாவட்ட ஆட்சியர்) |
| District Secretariat | - | மாவட்ட செயலகம் |
| District/ City Standing Committee | - | மாவட்ட/ மாநகர நிலைக்குழு |
| Empowered Group of Ministers (EGOM) | - | அதிகாரமுள்ள அமைச்சர்கள் குழு |
| Exclusive Special Court (ESC) | - | தனிச்சிறப்பு நீதிமன்றம் |
| Exclusive Special Public Prosecutor (ESPP) | - | தனிச்சிறப்பு அரசு வழக்குரைஞர் |
| First Information Report (FIR) | - | முதல் தகவல் அறிக்கை |
| Format | - | மாதிரிப் படிவம் |
| Gazette | - | அரசிதழ் |
| Indian Penal Code (IPC) | - | இந்திய தண்டனை சட்டம் |
| Indian Police Service (IPS) | - | இந்திய காவல் பணி |
| Inspector General of Police (IG) | - | காவல் துறை தலைவர் |
| Investigation Officer (IO) | - | புலனாய்வு அதிகாரி |
| Law and Order (L&O) | - | சட்டம் ஒழுங்கு |
| Monitoring Calendar | - | கண்காணிப்பு நாட்காட்டி |
| National Commission for Scheduled Castes (NCSC ) | - | பட்டியல் சாதியினருக்கான தேசிய ஆணையம் |
| National Commission for Scheduled Tribes (NCST) | - | பட்டியல் பழங்குடியினருக்கான தேசிய ஆணையம் |
| National Crime Record Bureau (NCRB) | - | தேசிய குற்றப் பதிவு ஆவணக் காப்பகம் |
| National Human Rights Commission (NHRC) | - | தேசிய மனித உரிமைகள் ஆணையம் |
| Nodal Officer | - | நோடல் அதிகாரி (பட்டியல் சமூகத்தினருக்கான முதன்மை செயலர்) |
| Officer In-Charge | - | பொறுப்பு அதிகாரி |
| Ombudsman | - | முறைமன்ற நடுவர் |

| | | |
|---|---|---|
| Opinion Leader | - | கருத்தாளர் |
| Protection of Atrocities (POA) | - | வன்கொடுமை தடுப்பு |
| Rule | - | விதி |
| SC/ST Protection Cell | - | பட்டியல் சாதிகள் மற்றும் பட்டியல் பழங்குடியினர் பாதுகாப்பு கலம் |
| Section | - | சட்டப் பிரிவு |
| Special Court | - | சிறப்பு நீதிமன்றங்கள் |
| Special Officer | - | சிறப்பு அதிகாரி |
| Special Police Post | - | சிறப்பு காவல் முகாம் |
| Special Public Prosecutor | - | சிறப்பு அரசு வழக்குரைஞர் |
| Special Public Prosecutor (SPP) | - | சிறப்பு அரசு வழக்குரைஞர் |
| Spot visit | - | கள ஆய்வு |
| State Human Rights Commission (SHRC) | - | மாநில மனித உரிமைகள் ஆணையம் |
| State level Multi Actor Round Table (SMART) | - | மாநில அளவிலான பல்வேறு பங்குதாரர்களின் வட்ட மேசை |
| State level Vigilance and Monitoring Committee (SVMC) | - | மாநில விழிகண் மற்றும் கண்காணிப்புக் குழு |
| State Secretariat | - | மாநில செயலகம் |
| Sub- Division Vigilance and Monitoring Committee (SDVMC) | - | துணைச்சார்பு விழிகண் மற்றும் கண்காணிப்புக் குழு |
| Sub-Division Administration. | - | துணைச் சார்பு நிர்வாகம் |
| Superintendent of Police (SP) | - | மாவட்ட காவல் கண்காணிப்பாளர் |
| Tamil Nadu Annual Status of SC/ST (PoA) Act Implementation Report (TASIR) | - | தமிழ்நாட்டில் வன்கொடுமை தடுப்பு சட்ட நடைமுறைப்படுத்தல் குறித்த ஆண்டு நிலை அறிக்கை |
| The Prohibition of Employment as Manual Scavengers and their Rehabilitation Act (PEMSRA) | - | கையால் மலம் அள்ளும் வேலைக்கான தடை மற்றும் அவர்களின் மறுவாழ்வு சட்டம், 2013 |
| The Protection of Civil Rights Act (PCRA) | - | குடிமை உரிமைகள் பாதுகாப்பு சட்டம் |
| Travel Allowance and Maintanance Expenses (TAME) | - | பயண மற்றும் பராமரிப்பு செலவுகள் |
| United Nations (U.N) | - | ஐக்கிய நாடுகள் |
| Zonal | - | மண்டலம் |
| Zonal level Multi Actor Round Tables (Z-SMART) | - | மண்டல அளவிலான பங்குதாரர்களின் வட்ட மேசை |

## குறிப்பேடு

# குறிப்பேடு

........................................................................................................................................................................................
........................................................................................................................................................................................
........................................................................................................................................................................................
........................................................................................................................................................................................
........................................................................................................................................................................................
........................................................................................................................................................................................
........................................................................................................................................................................................
........................................................................................................................................................................................
........................................................................................................................................................................................
........................................................................................................................................................................................
........................................................................................................................................................................................
........................................................................................................................................................................................
........................................................................................................................................................................................
........................................................................................................................................................................................
........................................................................................................................................................................................
........................................................................................................................................................................................
........................................................................................................................................................................................
........................................................................................................................................................................................
........................................................................................................................................................................................
........................................................................................................................................................................................
........................................................................................................................................................................................
........................................................................................................................................................................................
........................................................................................................................................................................................
........................................................................................................................................................................................

# குறிப்பேடு

……………………………………………………………………………………………………………………………………

……………………………………………………………………………………………………………………………………

……………………………………………………………………………………………………………………………………

……………………………………………………………………………………………………………………………………

……………………………………………………………………………………………………………………………………

……………………………………………………………………………………………………………………………………

……………………………………………………………………………………………………………………………………

……………………………………………………………………………………………………………………………………

……………………………………………………………………………………………………………………………………

……………………………………………………………………………………………………………………………………

……………………………………………………………………………………………………………………………………

……………………………………………………………………………………………………………………………………

……………………………………………………………………………………………………………………………………

……………………………………………………………………………………………………………………………………

……………………………………………………………………………………………………………………………………

……………………………………………………………………………………………………………………………………

……………………………………………………………………………………………………………………………………

……………………………………………………………………………………………………………………………………

……………………………………………………………………………………………………………………………………

……………………………………………………………………………………………………………………………………

……………………………………………………………………………………………………………………………………

……………………………………………………………………………………………………………………………………

……………………………………………………………………………………………………………………………………

……………………………………………………………………………………………………………………………………

## குறிப்பேடு

## குறிப்பேடு

……………………………………………………………………………………………………………………………

……………………………………………………………………………………………………………………………

……………………………………………………………………………………………………………………………

……………………………………………………………………………………………………………………………

……………………………………………………………………………………………………………………………

……………………………………………………………………………………………………………………………

……………………………………………………………………………………………………………………………

……………………………………………………………………………………………………………………………

……………………………………………………………………………………………………………………………

……………………………………………………………………………………………………………………………

……………………………………………………………………………………………………………………………

……………………………………………………………………………………………………………………………

……………………………………………………………………………………………………………………………

……………………………………………………………………………………………………………………………

……………………………………………………………………………………………………………………………

……………………………………………………………………………………………………………………………

……………………………………………………………………………………………………………………………

……………………………………………………………………………………………………………………………

……………………………………………………………………………………………………………………………

……………………………………………………………………………………………………………………………

……………………………………………………………………………………………………………………………

……………………………………………………………………………………………………………………………

……………………………………………………………………………………………………………………………

……………………………………………………………………………………………………………………………

# குறிப்பேடு

## குறிப்பேடு

# குறிப்பேடு